செந்தமிழ் [illegible]

தொகுதி 20 பகுதி 7-12

R65, m211, N11VD
M 31.20.7-12
186800

L. பாலால்—ரதன, தங்க ட ௗள நகை வயாபாரகள
216, சைனபஜா ரோட், சென்னை.

Reg. No. M. 916

॥ ஸ்ரீ: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 20] பிரமோதூதவஷ வைகாசி—புரட்டாசிமீ [ஸஞ்சிகை 7-12



ஸம்பாதகர்—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்

வருஷ சந்தா ரூ. 3] **May to Sep. 1931** [ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்—
ஸ்ரீ. உ.ப. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி 161
2. தாரித்ரியம் பரமாஞ்சனம்—
ஸ்ரீ உ.ப. தோட்டாலம் வேணுகோபாலாசாரியர்
3. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த குரு பரம்பரை
ஸ்ரீ. ஒய். ஸுப்ப ராவ் ... .... 172
4. மதங்களின் சாயைகள்—
ஸ்ரீ. என். எஸ். ஆச்சாரியார் .... .... 179
5. அத்யவஸாயத்தின் பெருமை—
ஸ்ரீ. உ.ப. வேங்கடாசார்ய ஸ்வாமி .... .... 191
6. ஸ்ரீ தேசிகன் வைபவ ப்ரகாசிகை—
ஸ்ரீ. உ.ப. திருமங்கலம் நரஸிம்மாசார்யர் .... 199
7. ஸம்பாதகீயம் .... .... 207
8. பரிகர விஜயம்
ஸ்ரீ. உ.ப. புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்யர் .... 77
9. ஸ்ரீ. வேதார்த்த ஸங்க்ரஹம்—
ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யார் .... .... 281

---

## ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி.

இதில் பகவத்கீதை, ஈசகேனதைத்ரீயாதி உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள் ஸந்தியாவந்தன, புருஷஸூக்த ருத்ரஸாமகாதி வேத மந்திரங்கள், தர்க்க ஸங்க்ரஹம், கௌமதி வியாகரண ஸூத்ரம், ஸித்தாந்த கௌமதி இவைகளிலிருந்து பதங்களின் அர்த்தங்களுக்கெதிரே உத்தியோகஸ்தர், வியாபாரஸ்தர், வைதீகர், பயிர்த் தொழிலாளர், முதலிய யாவரும் எளிதில் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்கும் வண்ணம் உதாஹரணங்களையும் இதர ஸௌகர்யங்களையுங்காட்டி க்ரந்த எழுத்தில் ராயல் 8 சைசில் கிளேஸ் கடிதத்தில் இடங்களைச் சற்றும் வீணாக்காது அச்சிடப்பட்டு வருகின்றன. வேதாந்த, நியாய, மீமாம்ஸா நாட்ய ஜ்யோதிஷ பரிபாஷைகளும் சிற்சில விடங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. முதல் பாகம் சுமார் 200 பக்கம் தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 2. முழுபுஸ்தகமும் 6-ரூபாய்க்கு மேலாகு மாதலால் ஒரு மாதத்திற்குள் 5-ரூபாய் அனுப்பிவிட்டால் முதல் பாகத்தை உடனே அனுப்பி இரண்டாவது பாகம் இனாமாக 'மோக்ஷ வழி' என்னும் 8 அணா விலையுள்ள அருமையான புஸ்தகத்தோடு இனிவேறு சார்ஜ் ஒன்றும் செய்யாமல் ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

## மோக்ஷவழி

இது பகவத்கீதை, உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள், தர்மசாஸ்திரம், தமிழ் வேதம் இவைகளை ப்ரமாணமாகக் கொண்டு அத்வைத த்வைத விசிஷ்டாத்வைத மும்மதங்களையு மனுசரித்து இக்கலியுகத்தில் சுலபத்தில் பாவங்களைத்தொலைத்துக்கொண்டு நற்கதியடைய பெரியோர்கள் அனுஷ்டித்த சுலபமான வழிகளையும், உலகத்தில் நாம் பார்ப்பவைகளையும் அவைகளால் தெரிந்து கொள்ளுபவைகளையும் நாம் இருக்கவேண்டிய முறைகளையும் எளிய தமிழ் நடையில் கூறுகின்றது. விலை அணா 8. தபால் சார்ஜ் ஒன்றுக்கும் இரண்டிற்கும் அணா நான்கே.

ஷை நூல் க்ரந்த ப்ரமாண தாத்பர்யங்களோடு ப்ராம்மணர்களுக்காக க்ரந்த தமிழ் நடையில் எழுதப்பட்டது தபால் சார்ஜ் உள்பட ரூபாய் ஒன்றே

விலாசம்:—நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்
பிரம்மஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்,
சேமம் கிராமம் திருமழிசை போஸ்ட்,
வழி பூந்தமல்லி, செங்கல்பட்டு ஜில்லா

OFFICE OF THE REGISTRAR
No.
20 JAN 1931
MADRAS

ஸ்ரீ:

॥ ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர் :—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 20] பிரமோதூதஸு அற்பசிமீ [ஸஞ்சிகை 8-12

[illegible] ।
[illegible]

[ஸ்ரீ பாகவதம். 1-9-23.]

ஸ்ரீ:

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[வித்வான். ஸ்ரீ உப. எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி.].

(முன் ஸஞ்சிகை தொடர்ச்சி.)

ஸ்ரீ பாஷ்யகாரரை யாச்ரயித்ததால் சிஷ்யர் மிகவும் பாக்யசாலியென்று மஹாராஜர் புகழ்கிறார். குரு வேதாந்த ஸித்தாந்தமே வடிவெடுத்தது போன்றவர். கண்ணன் கீதையில் 'வாத: ப்ரவததாமஹம்' என்று வாதம், ஜல்பம், விதண்டை யென்னும், வாதகதைகளில் தாம் வாதமென்னும் கதை யென்று கூறினர். எதிரியை எப்படியாவது தோற்கடித்துத் தான் பிடித்த பக்ஷத்தை வாதிக்கவேண்டுமென்னும் பிடிவாத மில்லாமல் இரண்டு பக்ஷிகளின் பலாபலத்தை தடஸ்தமான புத்தியுடன் விசாரிப்பது வாதமாகும். கீதா வார்த்தைகளையே யுபயோகித்து கதைகளில் ச்ரேஷ்டமென்று பகவான் கூறிய வாதமே உருவெடுத்து வந்தவர் ஸ்ரீபாஷ்யகாரரென்கிறார். வாதம் செய்வதில் நாடகத்தில் ஒவ்வொரு மதத்திலும் ஸ்தாபிக்கவேண்டிய எல்லா

186800

வம்சங்களையுமெடுத்து தூஷிப்பது ஸாத்திய மல்லாததால், ப்ரமாண மார்க் கத்திலிருந்து நம்பிய ஓரோர் முக்கியமான விஷயங்களை மட்டும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை பதம் பார்ப்பதுபோல் எடுத்துச் சோதித்து நிரஸனம் செய்யவேண்டுமென்று மஹாராஜர் சொல்லுகிறார்—பக்வமாகாத சோறுபோலாகும் பக்வபுத்தியும் விசாரமுமில்லாமல் தீர்மானித்த அபக்வ தத்துவங்கள். ஆத்மாவுக்குப் போஷகமான உணவு நல்ல தர்சன க்ரந்தங்கள். உடனே எதிர் வாதம் வாதிப்போரைத் தூண்டி விடுவதற்காக ஸ்ரீ பாஷ்யகாரரை ஒரு ச்லோகத்தால் புகழ்கிறார். இதனால் தமக்கு குரு நமஸ்கார ரூபமான மங்களாசரண மேற்படுவதுமன்றி எதிரிகள் வாயைக்கிளறுவது மாகும். உடையவரென்னும் மலையிலிருந்து ஸகல வித்யைகளு முற்பத்தியாகி நதிகளாக ப்ரவஹித்து ஞானப்பயிர்கள் வ்ருத்தியடைகின்றன. உடையவரென்னும் அனேக சாகைகளோடு ஓங்கிய பெரிய வ்ருக்ஷத்தின் நிழலில் ஜன்ம பரம்பரை யென்றும் ஸம்ஸாரமார்க்கத்தில் சுற்றிச் சுற்றி யுழன்று வாஸநரேணு படிந்து களைத்திருப்பவர் தம்முடைய பிறவி ச்ரமந்தீர விச்ரமத்தையடைந்து பிறவாமையைப் பெறுகிறார்கள்; உடையவர் அப்படிப் புறச் சமயங்களென்னும் அஜ்ஞான இரவுகளை அகற்றும் பால ஸூர்யராவார்; வேத வேதாந்தங்களென்னும் ஞானக்கடலை மகிழ்ந்து பொங்கச்செய்யும் பூர்ண சந்திரனுமாவார். வேதங்கள் கிரி ரூபங்களென்று வேதமே கூறியது. உடையவர் வேத பர்வதத்திற்கு ஒப்பாவார். அனேக சாகைகளை யுடைய வேதவிருக்ஷத்திற்கு மொப்பாவார். வேதமென்னும் ஞான வெளிச்சத்திற்கு விரோதியான அக்ஞான இருளைப்போக்கும் பாலஸூர்யனுமாவார். வேத ஸமுத்ரத்தைப் பொங்கச்செய்யும் சந்திரனுமாவார். ஸூர்யனில் இளம் ஸூர்யர்; சந்திரனில் வ்ருத்த சந்திரன். தானே மலை; தானே மலைமேலுள்ள வ்ருக்ஷம். தானே வேத உதயபர்வதத்திலுதிக்கும் ஸூர்யனும் சந்த்ரனுமாவார். எதிரிகளை ப்ரசண்ட ஸூர்யனைப்போல் தபிக்கச்செய்யாமல், 'தீர்க்காயுஷ்மானுனதாய் அவஹிதராய் ச்ரவணம் செய்யவேண்டும்' என்று ஸரஸ பாஷணங்களால் அவர்கள் மதியிருளை நீக்கி ப்ரபோதத்தைஉண்டுபண்டுவதால் பாலஸூர்யனுக் கொப்பிட்டது அழகு. வித்யாஸ்தானங்களென்னும் கலைகளெல்லாம் நிரம்பிய பூர்ண சந்திரனுவார். இப்படி உடையவரை ப்ரசம்ஸை செய்ததைக் கேட்டு திரைக்குள்ளிருந்து பிரதிவாதிகளின் கர்ஜனம் கிளம்புகிறது. 'தர்க்க சாஸ்த்ரம், வியாகரண சாஸ்த்ரம், மீமாம்ஸா தந்த்ரம், இவைகளில் நன்றாய் சிக்ஷிக்கப்பட்டவர்களும், வேதத்திற்குப் புறம்பான மதஸ்தர்கள் பரிக்ரஹிக்கும் பக்ஷங்களையும் பல[illegible] வைதிக மதத்தில்



சேர்த்துக்கொள்ளுவதில் கைகண்ட திறமை யுடையவர்களுமாகிய நாம் ஸபை நடுவே உத்கோஷிக்கிறோம்; ஆஸேது ஹிமாசலம் வாதாடம்பரம் செய்யு மெல்லா எதிர் மதஸ்தர்களையும் பஞ்சாகவும், துரும்பாகவும், பதர் நுனியாகவும்கூட மதிக்கமாட்டோம்' என அவர்கள் கர்ஜனம். இதைக் கேட்டதும் ஸேநாபதி சிஷ்யரைத் தூண்டுதல் செய்ததின்பேரில் அதிகோபத்துடன் சிஷ்யர் பதில் சபதம் கூறுகிறார். தன் சிரஸூக்கு ஒரு உபயோகமும் தன் பாதத்திற்கு ஒரு உபயோகமு முண்டென்கிறார். உடையவர் ஸ்ரீஸூக்திமண முடையாரடிகள் தன் சென்னிமேலென்றும், புறச் சமயப் பற்றால் கர்வாக்னிமண்டி யெரியும் மனமுடையார் சென்னிமேல் தனது இடது பாதம் வைக்கப்பட்டதாக லக்ஷணையாக அர்த்தங்கொள்ள வேணுமென்றும் கூறுகிறார். யதிராஜ ஸப்ததியிலும் இந்த ச்லோகமுளது. இது மிகவு முத்தமான வார்த்தையாவென்று ஆக்ஷேபம் வரக்கூடுமென்று சங்கித்து ஸ்வாமியே அதன் கருத்தை விளக்குகிறார். 'வாதயுத்த ஸமயத்தில் சலிக்காத ஸ்வாமி பக்தியால், அனுமாருடைய உக்தியைப் போலாகும் இந்த வீராப்பு' என்று மஹாராஜருடையவுரை. 'ஆயிரம் இராவணர்களும் யுத்தத்திலெனக்கு ப்ரதிபடமாகாரென்று அநுமாருடைய கோஷம். ஹநுமத்ஸமரான குருவிவர். ஹநுவென்பது ஞாநத்தையும் சொல்லும். ஞாநம் நிறைந்தவர் ஹநுமான்; சௌர்யமும் நிறைந்தவர். ஸ்வாமி தாஸ்யத்திலவருக்கு மேற்பட்டவரில்லை; சத்துருக்கள் விஷயத்தில் ஔத்யத்திலு மவருக்கு மேற்பட்டவரில்லை. யுத்தத்தில் வீராவேசப் பேச்சுக்கு வரம்பில்லை. இந்த வார்த்தையை முக்கியமான வர்த்தமுடையதாகக் கொள்ளக்கூடாது; இதை லக்ஷணையாக வர்த்தம் கொள்ளவேணு மென்பதையும் 'லக்ஷ்யதாம்' என்று ஸூசிக்கிறார் போலும். ஒருவன் மற்றொருவனுடைய தலையை மிதிப்பானென்றாலவன் ஜயிப்பானென்று தானர்த்தம். இங்கிலீஷ் பாஷையிலும் இதேமாதிரி அர்த்தத்தில் இந்த சப்தங்களை ப்ரயோகிப்பதுண்டு. மஹாபாரதத்தில் ஆதிபர்வத்தின் 219-வது அத்யாயத்தில் 'பாண்டவர்கள் நம்முடைய கண்களையும் மற்ற வரசர்களுடைய கண்களையும் கட்டிவிட்டு, த்ருபத மஹாராஜனுடைய புத்திரியை மணம் புரிந்ததால், நம்மெல்லோர் பேரிலும் அவர்களுடைய இடதுகால் வைக்கப்பட்டது' என்று துச்சாஸநன் சொல்லுகிறான். அதேமாதிரி இங்கேயுமர்த்தம் கொள்ளவேணும். இடது காலை வைப்பதென்று ப்ரயோகிப்பது ப்ராசீன வழக்கமென்று மஹா பாரத ச்லோகத்தால் தெரிகிறது. இங்கே 'வாமம்' என்று இடதைச் சொல்லாமல், 'அதக்ஷிணம்' என்று ப்ரயோகிப்பதால் நிர்தாக்ஷிண்யமாக வென்றும்

ஸூசிக்கிறார். 'படைக்களத்தில் தாக்ஷிண்யம் கிடையாது' என்று கருத்து. 'பதம் லக்ஷ்யதாம்' என்றவிடத்தில் 'பதம்' என்பதற்கு 'சொல்' என்றும் பொருள் கொள்ளலாம். 'பதம்' என்கிற பதத்திலும் லக்ஷணையை ஆச்ரயிக்க வேணுமென்று ஸூசிக்கிறார். ஸ்வாமி பக்தியால்வந்த வார்த்தையென்பதால் 'ராஜஸூய யாக ஸபையில் ,ஸஹதேவனுடைய இதேமாதிரியான சொல்லையும் ஞாபகப்படுத்துகிறார். ராமானுஜனாகிய கண்ணனிடம், பக்தியினால் கண்ணனைத்வேஷிப்பதே பொழுது போக்காகவுடைய சிசுபாலாதிகளை யுத்தேசித்து இதே மாதிரியான வார்த்தை ஸஹதேவன் வாயில் வந்ததுபோல இவருக்கும் இராமானுஜனிடம் பக்தியினால் இப்படி சொல்லுதித்ததாகச் சொல்லலாம். இந்த சபதச் சொல்லைத் தற்புகழ்ச்சி யென்று ஆக்ஷேபிக்கக் கூடாதென்று குருசொன்னபோதிலும் ; சிஷ்யர்தாம் அவச்யமாயும் அயுக்தி பூர்வகமாயும் ஆத்மச்லாகை யென்னும் தோஷத்தைச் செய்துவிட்டதாக நினைத்து அந்தத் தோஷத்தை நீக்க தேசிகர்களையும் அவர்கள் தர்சனத்தையும் புகழ்கிறார். தன்னைப் புகழ்ந்த தோஷத்தை நமக்கு ஞானமளித்த ஆசார்யர்களையும் தர்சனத்தையும் புகழ்தலால் க்ஷாபணம் செய்வது உசிதம்,

ச்ருதிகளென்னும் தேவிமார் ஸ்த்ரீகளை இந்திராக்ஷியைப் போல அவிதவைகளாயிருக்கவேணுமென்று ஆசீர்வதிக்கிறார்கள்; பரம மங்களைகளான அந்தத் தேவிமாரை தம்முடைய ப்ரியமான நாயகராகிய பரமாத்மாவிடத்தில் சேரவொட்டாமல், சைதன்யமும் பும்ஸ்த்வமுமில்லாத ப்ரக்ருதியினிடத்திலும், குணலேசமில்லாத உருவமற்ற ஏதோ ஒன்றிலும், ப்ராப்தரல்லாத அயல் புருஷரிடமும் கருத்துடையதாகக்காட்டி வைதவ்யத்திற்கு மேற்பட்ட அஸஹ்யமான வேதனையை யனுபவிக்கச்செய்வார் பரவாதிகள். அந்தத்தேவிமாரைத்தமது நாயகனாகிய ஸ்ரீ ய:பதியை காடமாக அணைக்கும்படி கடனை செய்து அவர்கள் துயரத்தைத்தீர்த்து ப்ராசீனமானஸமீசீனந்யாயமார்க்கத்தை யதிபதியானவர் ப்ரகாசப்படுத்தாமலிருந்தால், ஸர்வமங்களங்களுக்கும் மூலமான ச்ருதிதேவிகள் மாங்கல்ய விரோதமான அவஸ்தையை யடைந்து வருந்துவதுமன்றி அந்தத்தேவிகள் கருத்தை பிளக்க அழகிய அருமையான நூல்களை இயற்றிய அரும்பெருமுனிவரும் அவமானத்திற்கிடம் பெறுவர். சாந்தி ரஸமொழுகும் மொழியுடையவ்யாஸர் ஹாஸ்யரஸத்துக்குப் பாத்திரமாவார்; பிறர் வ்யாக்யானங்களின்படி அவர் ஸூக்திக்குக் கருத்துச்சொன்னால், அவர் மூலக்கிரந்தங்கள் நகைப்புக்கிடமாகும். வேதோப ப்ரம்ஹணத்திற்கென்றே இயற்றிய ராமாயணத்தின் நிகமனத்தில் இவ்வுலகையெல்லாம்



படைத்த ப்ரம்ஹ தேவன் ஜகத்முழுவதும் பகவானுடைய சரீரமென்று கூறியதாக மொழிந்த ப்ராசேதஸரென்னும் வால்மீகிபகவானையும் தங்களுடைய சேதஸிலிருந்து வெளியே நழுவவிட்டார்களென்கிறார். பிரிவில்லாமல் கலந்திருந்த வேதங்களை பிரித்து வ்யாஸம் செய்தவர் வ்யாஸர் ; அவருடைய ஸூத்ரங்களுக்கு கலப்பாக உரை செய்வதால், வ்யாஸரென்னுமவருடைய பெயரே மாறும்படி செய்கிறார்கள். வேதமென்னும் கல்பவ்ருக்ஷத்தின் கிளைகளிலுட்கார்ந்து அந்த விருக்ஷத்தின் பழங்களைத்தாம் கோதி பிறரனுபவிக்கும்படி கீழே நழுவி விழச்செய்யும் சுகரை அவர்கள் தங்களிஷ்டப்படி யெல்லாம் தங்கள்வாயால் சொல்லிவைத்து அதைப்போல் திருப்பிச்சொல்லும் கிளிப் பிள்ளையாக்கிவிட முயல்கிறார்கள். வ்ருத்திக்காரரான போதாயந மஹர்ஷியை திரும்பவும் திரும்பவும் முதல் வர்ணகமாக எடுத்து உதாஹரித்துப்பிறகு தப்பாகவும் வீணாகவும் பாதித்து வேறு வர்ணகமாக உரைஎழுதுகிறார்கள். போதாயநர் எங்களுடைய போதத்தின் பொருட்டும், உங்களுடைய வீண் வாதத்தின் பொருட்டுமாகிறார்' என்று வேடிக்கையாகக்கூறுகிறார். இந்த விஷயத்தைத் தனியாக இன்னமொரு ச்லோகத்திலும் விஸ்தரிக்கிறார். விவேக மஹாராஜர் இவருடைய சலிக்காத குருபக்தியால் இவர் யாரைத்தான் வாதத்தில் ஜயிக்கமாட்டாரென்று சொல்லுகிறார். இதனால் தம்முடைய வாதசக்தியெல்லாம் தம்முடைய ஆசார்யசக்தியால் தமக்கு ஏற்பட்டதென்று ஸ்வாமி தம்முடைய அபிப்ராயத்தை வெளியிடுகிறார். குருபக்தி அபங்குரமாயிருப்பதால், வாதத்தில் பங்கம் வராதென்று கருத்து. ஸித்தாந்தத்தின் ஸஹஜமான வலிமையைக்கொண்டே நான் ஜயத்தை யாசம்ஸிக்கிறேன், மஹாராஜர் நன்றாய் கவனிக்கவேணும்; ஸ்ரீயாஷ்யகாரரின் பாஷணங்களினழகைப் பார்க்கவேணும். ஸ்ரீபாஷ்யத்தில் ஒருக்காலும் பாதிக்கப்படாத போதாயனர் மொழிகளின் தேனொழுகுகிறது. சாரீரகசாஸ்திரங்களின் அதிகரணங்களை ஒன்றுக்கொன்று விரோதமில்லாமலும், புநருக்தமில்லாமலும் சுத்தமாய் வகுத்திருக்கிறது; ஒரு அதிகரணத்தில் அநேக ஹேதுக்களால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வமுண்டென்று வாதித்து, அதற்கடுத்த அதிகரணத்தில் கர்த்ருத்வம் பொய்யென்றும், அதற்கடுத்த அதிகரணத்தில் கர்த்ருத்வம் ஈச்வராயத்தமென்றும், அடுத்தடுத்தார்ப்போல் ஒன்றுக்கொன்று விரோதமாக வ்யாக்யானம் செய்யாமல், விரோத கந்தமே யில்லாமலுரைசெய்திருக்கிறார். புத்திமான்களுடைய தூக்கமற்ற ஆநந்த ரஸநாடியைத்தொட்டு எழுப்பி நிரதிசய ஹர்ஷத்தை யுண்டாக்கும் இவர் க்ரந்தம்' என்று சிஷ்யர் கூறுகிறார். தம்முடைய கல்விகேள்வியின் பெருமையை "நான் கணாதருடைய

தர்சனத்தை பரிபூர்ணமாய் வேண்டுமளவும் பரிசயம் செய்தேன்; அக்ஷபாதரென்னும் கௌதமமுனியுடைய தர்சனத்தை நான் பெரியோரிடமோதினேன்; என்னுடைய மூளையும், சதையும் மீமாம்ஸாமயமாயிற்று; ஸாங்க்யத்தையும், யோகத்தையும் அடிக்கடி எண்ணினேன், அறிந்தேன்; இருட்டடைந்த வழிகளில் கண்தெரியாமல் திகைத்துத்திண்டாடும் புறமதத்தை நிரஸிப்பது எமக்கு என்ன ச்ரமம்" என்றுகூறுகிறார். இரண்டு மீமாம்ஸைகளையும் ஒன்றாகக் கூறியது அழகு. பெரியோர்கள் தம்மை மீமாம்ஸா மாம்ஸளாத்மாவாகச் செய்து வளர்த்தார்களென்றும், ஸத்பக்ஷத்தில் சேர்த்துக்கொள்ளத்தகுந்ததென்று தாம் நியாயபரிசுத்தியிற் கூறும் அக்ஷபாத தர்சனத்தை பெரியோர்களிடம்சிக்ஷை செய்ததாகவும், வைசேஷிகத்தையும், ஸாங்க்ய யோகங்களையும் தாமே பரிசீலனம் செய்ததாகவும் கூறுகிறார். தத்துவங்களை எண்ணுகிறதே தங்கள் பெருமையென்று பிருதுகூறும் ஸாங்க்ய யோகதர்சனங்களைத் திரும்பத்திரும்ப எண்ணினேனென்கிறார். அக்ஷபாதரென்கிற பெயரோடு ஒத்து வருவதற்காகக்கணாதரென்று கூறாமல் கணசரணரென்று கூறுகிறார். சரணமென்பது பாதத்தையும், பக்ஷிப்பதையும் சொல்லும்.

வாதமாரம்பிப்பதற்கு முன் புறமதத்தரெல்லோரும் சேர்ந்து வேதாந்தியை எதிர்க்க வருகிறார்கள். காட்டாற்று வெள்ளம் கல்லையும் மண்ணையும் உருட்டிக்கொண்டு சப்தித்துக்கொண்டு ஓடிவந்து சற்று நேரத்திற் கெல்லாம் ஓய்ந்து போவதுபோல் பிரதிவாதிகள் மிகுந்த கலக்கத்துடன் பொருளில்லாத கடினமான சப்தங்களை வர்ஷித்துவிட்டு சீக்கிரத்தில் ஓய்வார்கள். நல்ல நதிகள் தெளிவான ஜலத்தைப் பெருக்குவது போல், தெளிந்த வர்த்தங்களை மதுரமான சொற்களால் ஸ்வச்ச ப்ரவாஹமாக நல்லவாதிகள் பெருகுவார்கள். 'வசிகதடினீ' என்று காட்டாற்றுக்குப் பெயர் இந்த ச்லோகத்தில் சொன்ன விஷயத்தை சண்ட மாருதத்தில் மஹாசார்யர் 'வசிகதடினீ வர்ஷாரம்பந்யாயம்' என்று கூறுகிறார். புத்த, ஜைனாகமங்கள் தேவபாஷையிற் செய்யப்படாமல், மாகதீ, பாளீ, சௌரஸேநீ, லாடீ, கௌடீ முதலிய ப்ராக்ருதங்களி லெழுதப்பட்டுள்ளது. அதனால் அந்த மதங்களும் ஸம்ஸ்க்ருதமல்ல வென்று வேடிக்கை 'ஹவ்யாநுவவத்தேஷு' என்கிற ஸூத்திரத்தின் வ்யாக்யானத்தில் பாமதியில் பௌத்த ஸம்ஸ்க்ருதக்ரந்தங்கள் அனேக அபசப்தங்களை ப்ரயோகிக்கிறதாக வெடுத்துக்காட்டி யிருக்கிறார். அந்த ப்ராக்ருத பாஷைகளெல்லாம் தமக்கு நன்றாய்த் தெரியுமென்று சிஷ்யர் கூறுகிறார். வித்யாப்யாஸம் செய்யும் காலத்திலேயே ப்ராக்ருத பாஷைகளையும்



அவைகளின் இலக்கணங்களையும் ஸ்வாமி கற்றறிந்திருக்க வேணுமென்பது திண்ணம். அவர்கள் பாஷையிலேயே அவர்களுக்குப்பதிலுரைக்கிறேனென்று சிஷ்யர்கூற, குரு தேவ பாஷையிலேயே வாதம் செய்யும்படி நியமிக்கிறார். இங்கே பரமதங்களை ஸ்தாலீ புலாக ந்யாயத்தை யவலம்பித்து முக்கியமான இரண்டொரு அம்சங்களைமட்டும் அதிவிசித்ரமாயும், நாடகத்துக்கேற்றபடி ஹாஸ்ய ரஸங்கலந்தும், கண்டனம் செய்யும் க்ரமத்தை ஸம்ஸ்க்ருதபாஷையால் செய்தால்தான் நமக்குத் தெரியுமாதலாலும், ஸம்ஸ்க்ருத பாஷையையே இங்கு கைப்பற்றியதற்குக் கருத்தென்று சொல்லலாம். நாடக விதிகளின் நிர்ப்பந்தத்தை யநுஸரித்து இங்கே ப்ராக்ருதத்தை யுபயோகிக்க யாதொரு நிர்ப்பந்தமுமில்லை.

புறச்சமயங்களை நிரஸனம் செய்வதில் ப்ரம்ஸ ஸூத்ரத்தின் இரண்டாவது அத்யாயத்தின் இரண்டாம் பாதத்தில் கைப்பற்றிய க்ரமத்தை இங்கு யநுஸரிக்கிறார். அந்தப்பாதத்தில் முதலில் ஸாங்க்யத்தை எடுத்ததுபோல இங்கேயும் அதை முதலிலெடுக்கிறார். சில வம்சங்களில் வேதாந்தத்திற்கு ஸாங்க்யம் நெருங்கினதானபடியாலும், யுக்தி மாத்திரத்தில் ஹேதுக்களைக் கொண்டு ஸாங்க்யம், யோகம் முதலியவைகளை ஹநநம் செய்யக்கூடாதென்று சாஸ்த்ரமே சொல்லுவதாலும், ஸாங்க்யத்தை முதலிலெடுக்கிறார். ஸாங்க்யத்திற் கடுத்தார்ப்போல், அதற்கு ஸந்நிக்ருஷ்டமான யோகத்தையும் இங்கே எடுக்கிறார். இரண்டாவது அத்தியாயத்தினிரண்டாம் பாதத்தில் யோகத்தை எடுக்காவிட்டாலும், முதல் பாதத்தில் முதலதிகரணத்தில் ஸாங்க்யத்தைத் தள்ளிவிட்டு அதே நியாயத்தால் யோகத்தையும் தள்ளினதாகுமென்று அங்கே கூறப்பட்டதை யநுஸரித்து, இங்கேயும் ஸாங்க்யத்திற்குப் பிறகு யோகம் எடுக்கப்பட்டது.

ஸாங்க்ய மதத்தை குரு ஒரு ச்லோகத்தாலநுவாதம் செய்கிறார். ஈச்வரக்ருஷ்ணரியற்றிய ஸாங்க்யகாரிகை ஆர்யாவ்ருத்தத்தில் ரசனை செய்யப்பட்டது. அதன் முடிவில் ஆர்யமதியாகிய தம்மால் ஆர்யைகளால் பாரம்பர்யமாக வந்தஸாங்க்ய ஸித்தாந்தம் தம்மால் சுருக்கிப் பாடப்பட்டதென்றும் பரமர்ஷியான கபில முனியால் அது முதலில் ஸமாக்யானம் செய்யப்பட்டதென்றும், பவித்ரமான அந்த உத்தம ஞானத்தைக் கருணையினால் அம்மாமுனிவர் ஆஸுரி என்னும் முனிக்கு ப்ரதானம் செய்தாரென்றும், ஆஸுரியும் பஞ்சசிகருக்குக் கொடுத்ததாகவும், பஞ்சசிகர் அதை விரித்துரைத்ததாகவும்,

அவரிடமிருந்து சிஷ்யபரம்பரையாகத் தமக்குக் கிடைத்ததென்றும் கூறுகிறார். அதை யநுசரித்து இங்கே ஸாங்க்ய ஸம்ப்ரதாயத்தின் பூர்வாசிரியர்களைக் கூறி அவர்கள் முனிகளென்கிறார். தேஹாத்மாபிமானமென்றும், ப்ரக்ருத்யாத்ம ப்ராந்தியென்றும் சொல்லப் படும் தோஷத்தை நீக்க ப்ரக்ருதி வேறு, ஆத்மா வேறென்று நன்றாய்ப் பிரித்து இந்தத் தந்திரத்தில் காட்டப்படுகிறது. அதுவரையில் அது உபகாரந்தான். ப்ரக்ருதியையும் புருஷனையும், நியமனம் செய்வதாக வேதங்களில் படிக்கப்பட்ட பரமபுருஷனைமட்டுமவர்கள் படனம் செய்யமாட்டோமென்கிறார்கள். வேத ப்ரமாணங்களைக் கவனியாமல், தம்முடைய யோகஸித்தியால் தாம் கண்டது மட்டுந்தான் உளதென்று ஸாதித்து ஆயிரக்கணக்கான வேத சிரஸ்ஸுகளுக்கு பூஷணமான சூடாமணியை மறுதளிக்கிறார்கள். 'ஈச்வராஸித்தே:' என்று ஈச்வரனுக்கு ஸித்தியில்லையென்கிறார்கள். இவர்கள் ஸித்தர்களாம். ஈச்வரன் இந்த ஸித்தர்களுக்கு ஸித்திப்பதில்லையாம். ச்ருதிப்படிக்கு ஈச்வரனை இவர்கள் படனம் செய்ய மறுதளிக்கிறார்கள். இவர்கள் சாஸ்த்ரம் காட்டிய வழியில் நிவ்ருத்தி தர்மங்களை யநுஷ்டித்து ஈச்வராநுக்ரஹத்தினால் சித்தத்தை சுத்தம் செய்து கொள்ளாமல் தான் தோன்றியாக ஜ்ஞானயோகம் செய்கிறோமென்றும், ஸித்திராகிறோமென்றும் வீணாக நினைக்கிறார்கள். [illegible] என்கிற சாஸ்த்ரப்படி நிஷ்காமமான கர்மாநுஷ்டானத்தால் மட்டும் சித்தம் சுத்தமாகும்; யோகத்துக்கும் அதிகாரமேற்படும். இந்த வழியில் சித்தத்தை சுத்திசெய்து கொண்டு, யோகத்துக்கு அதிகாரம் ஸம்பாதிக்காமல் யோகமாரம்பித்து கர்மத்தையும் விட்டுவிடுகிறபடியால், இவர்கள் புத்தி பாபத்தாலேயே மேலும் மேலும் கவரப்படுகிறபடியால், இவர்களுக்கு ஈச்வரன் விஷயமான ஞானமுண்டாகிறதில்லை. ஸமீசீனமான ஜ்ஞானமல்லது க்யாதி தங்களுக்குண்டென்று இவர்களபிமானம். வாஸ்தவத்தில் இவர்களுடைய புத்திகள் பாபத்தால் தகையப்பட்டுளதென்கிறார். 'ஆர்யமதி' யென்ற ஈச்வர கிருஷ்ணர் புகழ்ந்து கொண்டது சரியல்ல வென்றும் இதில் ஸூசிக்கிறார்.

(இன்னும் வரும்.)

# தாரித்ரியம்—பரமாஞ்சனம்.

[ஸ்ரீ உப. தோட்டாலம் வேணுகோபாலாசாரியர்.]

---

ஒருவன் தன் செல்வத்தை யிழந்து தரித்திரனாகிறானென்பது மிகவும் பரிதாபமானதே. அப்படிப்பட்டவனைக் காணுங்கால் 'ஐயோ பாவம் இவன் செய்த பாபத்தின் பலனிது. இவ்வாறு இவன் அநுபவிக்க நேர்ந்தது' என்று உலகத்தாரும் சொல்வதுண்டு. படித்தவர்களும் இவ்வாறே கருதுகின்றார்கள். ஆனால் புராதன கதைகளையும் முன்னோர்களின் சரித்திரங்களையும் கவனித்தால் பாபத்தின் காரணமாக தரித்திரனாவதோடு சிலர் புண்ணியத்தின் மூலமாகவும் தரித்திரராவார்கள் என்று விளங்கும்.

உலகத்தில் நல்லது கெட்டது என்று இருவகைப் பட்டிருக்கிறது. தேகத்திற்கு அநுகூலமானவைகளையும் அதற்காக வேண்டிய வஸ்துக்களையும் 'நல்லவை' என்றும் அப்படிக் கல்லாதவைகளை கெட்டவை என்றும் சொல்வது ஒரு விதம். இரண்டாவது, ஆத்மாவின் க்ஷேமத்திற்காக தேஹம் ஏற்பட்ட படியால் ஆத்மாவின் க்ஷேமத்திற்கான ஸாதனங்களையும் அவைகளை யொட்டிய விஷயங்களையும் நல்லது என்றும், அல்லாதவைகளை கெட்டவை என்றும் சொல்வது இரண்டாவதாகும். தேஹத்தினின்றும் ஆத்மாவுக்கு உள்ள வேறுபாட்டை அறியாதவன் தேஹத்தையே தானெனக் கருதுவதால் தேகத்திற்கு வேண்டியவைகளே தனக்கு அனுகூலமென நினைக்கிறான். அதற்கு வேண்டியவைகளை ஸம்பாதிக்க முயலுகிறான். கிடைக்குங்கால் சந்தோஷமும், கிடையாத போது வெறுப்புங் கொள்கிறான். ஆத்மாவின் விஷயத்தை யறிந்தவனோ அவ்வாறில்லை. ஆற்றைக் கடந்து அப்புறம் செல்லவேண்டிய ஒருவன் தான் ஆற்றைக் கடப்பதற்காகக் கைக் கொண்ட ஓடத்தை ஆறு கடக்கு மளவும் அதற்கு யாதொரு கேடும் வாராமல் நன்கு காப்பாற்றி வைத்துக்கொண்டு ஆற்றைக்கடந்தவாறே அதை யாதொரு படியும் கவனியாமல் விட்டு விடுமாப் போலே இவனும் இச்சரீரத்தைக் கொண்டு தன் ஆத்மாவிற்கு வேண்டிய ஸௌகரியங்களைத் தேட முயன்று அவை கிடைத்தவுடனே இச் சரீரத்தை விட்டகலவே விரும்புவான். அல்லாது, ஆறு கடக்க ஓடத்திலேறியவன் அதன் அழகைக் கண்டு அதை விட்டகல மனம் வாராமல் அதிலேயே யிருந்து அதை ஆற்றின் வழியே போக விட்டால் அது கடைசியாகக் கடல் சேர்ந்து மோதுண்டு கடலில் மூழ்கி அதில் ஏறியவனையும் கடலில் மூழ்கச் செய்யும். ஆற்றைக் கடந்து அப்புறம் போகவேண்டுமென்று உணர்ச்சியுள்ளவனோ அவ்வாறு செய்யத் துணிய மாட்டான். இது போலவே இந்த சரீரத்தைக் கொண்டு ஸம்ஸாரக் கடலைக் கடக்கவே இச்சரீரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. “[illegible]” என்பதை இங்கு அநுஸந்திப்பது. ஆகையால் இவனுடைய லக்ஷ்யம் வேறான படியால் அதற்கு அநுகுணமான ஹிதமே இவனுக்கு ஹிதமாகும்.

விலங்கிடப்பட்டவன் அவ்விலங்கை திடப்படுத்திக் கொள்ள நினைப்பது போல் க்ஷுத்ர புருஷார்த்தங்களை ஆசைப்பட்டு பெரும்பாலோர் ஸம்ஸாரத்தை திடமாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். அதற்குக் காரணம் விஷயானுபவத்தில் பிறக்கும் ருசி. இது பரம புருஷார்த்த ருசி யுண்டாகாமல் தடுத்து தன் ஸ்வரூப ஞானத்தையும் போக்கி க்ஷுத்ர விஷயங்களில் போக்யதா புத்தியை உண்டு பண்ணுகிறது. இப்படி க்ஷுத்ர புருஷார்த்த ருசியுடனேயே செல்லுகிறவனுக்கும் ஏதாகிலும் ஒருவித யாத்ருச்சிக ப்ராஸங்கிக ஸுக்ருதங்கள் என்கிற ஏதாகிலும் ஒரு வ்யாஜத்தை முன்னிட்டு ஸர்வேஸ்வரன் அவர்களின் ருசியை மாற்றி திருத்திப் பணி கொள்ளுகிறான். அப்போது வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தாதிகளான பிரபல பிரதிபந்தக வர்க்கங்களாலே சிலர் ஐச்வர்யாநுபவம் முதலியவற்றில் வ்யாமுக்தராய் அவற்றினின்றும் மீளாத ஸ்திதியிலிருந்தால், அவர்களுக்கு ஆல்லைச்வர்யம் நஷ்டமாகும்படிச் செய்து, ஏழ்மையைக் கொடுத்து ஐச்வர்ய மதாந்தனாயிருந்த நிலையை தாரித்ரிய மாகிற அத்யுத்கிருஷ்ட மான அஞ்ஜனத்தால் நீக்கி, லோகத்தை அத்யந்தம் விஷயமாக பார்த்திருந்தவனை இப்போது அத்ருஷ்டாந்தத்தால் ஸர்வத்தையும் ஸமானமாகக் காணும்படிச் செய்து பின் க்ரமேண மோக்ஷாதிகாரியாக்கிவிடுகிறான். பாகவதத்தில் :—

"[illegible] |
[illegible]" ||

என்றும் "[illegible]" என்றும் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது.

முன்னொரு காலத்தில் குபேரனின் குமாரர்களான நளகூபர மணிக்கிரீவன் என்ற விருவர்களும் ருத்ரனுக்கு கிங்கரர்களாக வமர்ந்து [illegible]ர்களாய் ஒருநாள் கைலாஸ மலையின் பக்கத்தில் மதுபானம் செய்து ஸ்திரீகளுடன் கலந்து காட்டில் திரிந்து கடைசியில் கங்கையிலிறங்கி ஜலக்ரீடை செய்யும் பொழுது தற்செயலாய் நாரத முனிவர் அங்கு செல்ல அவரைக் கண்டதும் வஸ்திரமில்லாமலிருந்த அந்த ஸ்திரீகள் பயந்து எழுந்து வஸ்திர முடுத்திக் கொள்ள நளகூபர மணிக்ரீவர்கள் மாத்திரம் ஆடை யுடுக்காமலிருந்தார்கள். என்ன செய்யலாம். ஸ்வயம் தேவ குமாரர்கள். திரிலோகாதிபதியான ருத்ரனுக்கு அனுசரர்கள். ஐச்வர்ய மதாந்தர்கள். மதுபானம் செய்தவர்கள். இவர்கள் அச்சமயம் நாரதரின் வருகையை யுணரவே யில்லை. ஆனாலும் பரம பாகவதோத்தமரான நாரத மஹர்ஷியின் தர்சனம் வீணாகுமோ.

"[illegible] |
[illegible]" ||

என்றல்லவோ [illegible]ம் புகழப்பட்டிருக்கிறது. உடனே நாரதருக்கு இரக்க முண்டாயிற்று. இவர்கள் ஸத்குலீனர்களாயும் ஸர்வக்ஞனை ருத்ரனை யாச்ரயித்திருந்தும் ஐச்வர்ய மதாந்தர்களாய் கண்ணிழந்தவர் போலானார்கள். இவர்களுக்கு தகுந்தபடி கண் சிகித்ஸை செய்ய வேண்டும். நேத்ரரோக



முள்ளவனுக்கு அஞ்ஜன மிடுவதே பொருத்த மானது. ஐச்வர்ய மதத்தால் அந்தரானவர்களுக்கு தாரித்ரிய மென்னும் அஞ்ஜனத்தைப் போட்டால் உடனே அவர்கள் கண் பெற்றெழுந் திருப்பார்கள். ஐச்வர்ய மதத்தால் இத்தேகத்தை ஜராமரண வர்ஜித மென்றே நினைத்து தயையில்லாமல் பல ஜந்துக்களையும் ஹிம்ஸிக்க முன் வருகிறார்கள். ஆகையால் இவர்களுக்கு தாரித்ரியாஞ்ஜநமே பொருத்த மானது என நினைத்து ஓர் கோரமான சாபத்தைக் கொடுத்தார். ஏனெனில் தேஹமோ, தேவஜாதியைச் சேர்ந்ததே யாயினும் அதற்குக் காரணமாயுள்ள புண்ணிய பாபங்கள் அது நசித்து மரித்தபின் புழுக்களாகவும் கொளுத்திய பின் சாம்பலாகவும் நாய் முதலிய ஜந்துக்கள் பக்ஷித்தால் அமேத்யமாகவும் கருதப் பட வேண்டி யிருக்கிறது. இவ்வித கேவலமான தேஹத்தின் பொருட்டு பிராணிகளை ஹிம்ஸிப்பது தகுமோ? பிழைத்திருக்கும் பொழுதும் இத்தேஹம் யாரைச் சேர்ந்த தென்பது நிலையில்லாதது. மாதாபிதாக்கள் பெற்றதால் அவர்களுடைய தென்றும், அன்ன மிடுகிறவன் தனக்காக வேற்பட்ட தென்றும், விலைக்கு வாங்கியவன் தன் சுகத்திற்காக வென்றும், நெருப்பு தன்னுடைய தென்றும், பக்ஷிகள் தங்களுக்கு தெய்வம் கொடுத்த அன்ன மென்றும், நாய் தன்னுடைய தென்றும், மனைவி தனக்காகத் தானென்றும் அவரவர்கள், பலபடியும் கருதும் படி யிருக்கிறது. உள்ளிருக்கும் ஆத்மாவிற்காக தேஹம் அமைந்திருக்கிற தென்பதை யாரும் அறிவதில்லை. இப்பொழுது இவர்களுக்கு தாரித்ரியத்தைக் கொடுத்தால் கண் உண்டாவதுடன் மோக்ஷத்திற்கு முதற்படையான '[illegible]' என்கிற நிலையு முண்டாகும். காலில் முள் தைத்தவன் மற்றவருக்கு இவ்வேதனை யுண்டாக லாகாதாவென்று எண்ணுவது போல் தரித்ரன் தான் படும் துன்பத்தைக் கொண்டு தன்னையே த்ருஷ்டாந்தமாக வைத்துக் கொண்டு எல்லோரிடமும் அன்பு கொள்கிறான். தரித்ரனுக்கு குலகர்வம் வித்யாகர்வம் முதலியன நசித்துவிடும். எவரும் இவனை லக்ஷ்யம் செய்யார்கள். ஆகாரப் பொருள்களும் கிடைக்க மாட்டா. அதனால் சரீர சோஷணம் தன் கடையாக உண்டாகி விடும். அதுவே இவனுக்கு பெரிய தவமாகும். ஏனெனில் சாஸ்திரங்களில் சரீர சோஷணத்தையே பெருந் தவ மென்கிறார்கள். பசியால் தேகம் உலர இந்திரியங்களும் உலரும். ஹிம்ஸையில் ருசி பிறவாது. தரித்திரனுக்கு ஸாதுக்களின் சேர்க்கை வெகு சுலபம். அதனால் விஷய ஸங்கம் ஒழியும். பின் சீக்கிரத்தில் முக்திக்கும் வழி பிறக்கும். இவர்கள் ஐச்வர்யமதம் ஒழிந்து ஸ்வரூபக்ஞானம் பிறக்குமாறு இவர்கள் நளகூபர மணிக்ரீவர்கள் நெடுநாள் தாவரமா யிருக்கட்டும். அந்நிலையிலும் நம்முடைய அனுகிரஹத்தால் இவர்களுக்கு இந்த ஸ்மிருதி யழியாமலிருந்துமென் மேலும் அநுதாபம் பிறந்து வைராக்ய முண்டாய் பகவத் விஷயத்தில் ருசியுண்டானால் பின் ஒரு காலத்தில் பகவானுடைய ஸாந்நித்யத்தைப் பெற்று இவர்கள் நல்ல கதியை யடைவார்களாக வென்று நாரதர் அனுக்ரஹித்தார். இதை ஸாமான்ய நீதியில் சாபமெனக் கூறலாமானாலும் இது அவர்களுக்கு அனுக்கிஹமே யாகும். மகான்கள் அனுக்ரஹிக்க சபிக்கிறார்களே யல்லது நிக்ரஹிக்க வல்ல. இம்மாதிரி சபிக்காவிடில் வெகு நாளைக்குமவர்கள் நல்ல கதி யடைய வழி யிராது. [illegible] என்றபடி இதுவுமொரு எம்பெருமான் செய்து வைக்கும் அனுக்ரஹத்தின் பிரகாரமிருக்கும் படி.

# விசிஷ்டாத்வைத ஸித்தாந்த குருபரம்பரை

(ஸ்ரீமான் ஒய். ஸுப்ப ராவ்)

---

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த பரம்பரை மிகவும் ப்ராசீனமானதென்பதை டாக்டர் திபோ (ஸ்ரீ பாஷ்யத்தை ஆங்கில பாஷையில் தர்ஜமா செய்த பாஸ்சாத்ய வித்வான்) கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீ சங்கராசார்யருக்கும் முந்தியதான ஸநாதனமான ஒரு ஸித்தாந்தத்தை வெளியிடுவதாகவிருந்து கொண்டு, ஸ்ரீ சங்கராசார்யர் சொல்லியுள்ள விஷயங்களுக்கே ஸமாதானமாக விருப்பதுடன் ஸூத்ரங்களுக்கு சப்தார்த்தங்களுடனில்லாது இன்னும் ஸூக்ஷ்மமான அர்த்த விசேஷங்களையும் நாம் தெரிந்து கொள்ள உபயோகமாகவிருக்கிற தென்பதற்கு டாக்டர் திபோ அத்யந்தம் ஸமீசீனமான காரணங்களையும் எடுத்துச்சொல்லி யிருக்கிறார். இதற்கு அவர் இரண்டு முக்கிய ஆதாரங்கள் காட்டியிருக்கிறார் (1) ஸ்ரீராமாநுஜர் வ்ருத்திக்காரரான போதாயனர் க்ரந்தத்திலிருந்தும் பாஷ்யக்காரரான த்ரமிடாசார்யர் க்ரந்தத்திலிருந்தும் அடிக்கடி ஆதாரங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவர்கள் இருவர்களைப் பற்றியும் அத்வைத பாஷ்யங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ சங்கராசார்யர் க்ரந்த வியாக்யானங்களிலிருந்து ஏற்படுகிறது. (2) அத்துடன் ராமாநுஜீயாள் ‘பாகவதர்’கள் அல்லது பாஞ்சராத்ரர்களுடன் நெருங்கிய ஸம்பந்தமுடையவர்கள். ப்ர்ம்ம ஸூத்ரம் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் நான்கு ஸூத்ரங்களின் பாஷ்யத்தில் பாஞ்சராத்ர ஸித்தாந்தமே உபபாதிக்கப்பட்டிருக்கிற தென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த குருபரம்பரையைக் கவனிப்பவர்களுக்கு டாக்டர் திபோ கூறியுள்ள இந்த இரண்டு விஷயங்களும் ஸ்வரஸமாகத் தோன்றுமாதலால் மற்ற ஆதாரங்களையும் கொண்டு இதைப்பற்றி விசாரம் செய்ய உத்தேசித்திருக்கிறேன்.

## போதாயனரும் த்ரமிடரும்

ஸ்ரீ சங்கராசார்யர் பிரஸ்தாபிக்கும் வ்ருத்திக்காரரையும் த்ராவிடாசார்யரையும் ஸ்ரீராமாநுஜர் தமது க்ரந்தங்களில் பிரஸ்தாபிக்கும் வ்ருத்திக்காரர் த்ரமிடாசார்யர்களுடன் ஒன்றுபடுத்துவது சரியில்லையென்பதற்கு 1915-ம் வருஷத்திலேயே நான் சில காரணங்கள் வெளியிட்டிருக்கிறேன். சங்கரர் ‘அந்யரென்று’ பிரஸ்தாபித்து அவருடையதினின்றும் வேறுபட்ட அர்த்தத்தை ஸூத்ரங்களுக்குச்

---

* இந்த வ்யாஸம் ஸ்ரீமான் ஒய். ஸுப்பராவ் என்பவரால் பூனாவில் ப்ரசுரம் செய்யப்படும் ‘Review of Pholosophy and Religion’ என்ற ஆங்கில மாஸ பத்திரிகையில் எழுதப்பட்டது. இதில் அவர் தம் ஸொந்த அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தாலும் மேற்கொண்டு, விசாரத்திற்கு இடம் கொடுக்கக்கூடுமென்பதற்காக இது இங்கு ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது.



சொல்லியிருக்க, அந்த ‘அந்யர்’ வ்ருத்திக்காரர்தான் என்று சங்கரர் வ்யாக்யாதாக்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட விடங்களில் ஸ்ரீராமாநுஜர், சங்கரர் சொல்லியுள்ள அபிப்பிராயங்களை மறுக்கவாவது அல்லது தாம் ஸாதித்துள்ள விஷயங்களுக்கு போதாயனர் ஸூக்திகளின் ஆதாரமிருப்பதாகவாவது சொல்லவில்லை. சங்கராச்சாரியார் பிரஸ்தாபிக்கும் வ்ருத்திக்காரர் போதாயனராக விருக்கும் பக்ஷத்தில் ராமாநுஜர் இப்படி ஏதாகிலும் ஒருவிதமாக எடுத்துச்சொல்ல நேரிட்டிருந்திருக்கும். இந்த ஆக்ஷேபத்தை நான் முன்னமேயே எடுத்துக்காட்டி யிருக்கிறேன். ஆனால் இன்னும் பலர் இவ்விருவரும் ஒன்றுதான் என்ற அபிப்பிராயமுள்ளவர்களாக விருக்கிறார்கள். சென்னை மஹாமஹோபாத்தியாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள் இவ்விதமே அபிப்பிராயப்பட்டு அதற்கு சங்கர ராமாநுஜ க்ரந்தங்களிலிருந்து விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆகவே இதில் மேற்கொண்டு விசாரம் செய்யவேண்டுவது அவசியமென ஏற்படுகிறது. சங்கராசார்யர் பிரஸ்தாபிக்கும் வ்ருத்திக்காரரும் போதாயனரும் ஒன்றுதான் என்பதற்கு பின் வருமாறு இப்பொழுது புதிதாகக் காரணம் கூறப்படுகிறது. ப்ரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் பல இடங்களில் சங்கராசார்யர் ஒரு வ்ருத்திக்காரரைப்பற்றி பிரஸ்தாபிப்பதாக வ்யாக்யானங்களிலிருந்து ஏற்படுகிறது. தமது பாஷ்ய ஆரம்பத்தில் 3-3-53ல், ப்ரம்ம மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கும் கர்ம மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கும் உபவர்ஷர் ஒரு பாஷ்யம் எழுதி யிருப்பதாக சங்கரர் பிரஸ்தாபிக்கிறார். இந்த உபவர்ஷர் வ்ருத்திக்காரர் என்று ஆனந்த கிரியும் ராமாநந்தரும் சொல்லுகிறார்கள். ஆகையால் உபவர்ஷர் போதாயனராக விருக்கவேண்டு மென்று ஏற்படுகிறது. ஏனென்றால் கர்ம மீமாம்ஸை ப்ரம்ம மீமாம்ஸை ஆகிய இரண்டும் ஒரே சாஸ்திரமென்று அவர் அபிப்பிராயப்படுகிறாரென சொல்லப்படுகிறது. ஆனால் இந்த முடிவு பல வேறு விஷயங்களை முதலில் அத்யாஹாரஞ் செய்து கொள்ளும்படியாகச் செய்கிறது. முதலில் சங்கராசார்யரோ அல்லது அவரது வ்யாக்யாதாக்களோ உபவர்ஷர்தான் போதாயன வ்ருத்திக்காரரெனச் சொல்லவில்லை. இரண்டு மீமாம்ஸைகளும் ஒன்றென்ற விஷயமாக உபவர்ஷருக்கும் சங்கரருக்கும் அபிப்பிராய பேத மிருப்பதைப் பற்றியும் அவர்கள் பிரஸ்தாபிக்கவில்லை. இரண்டாவதாக சங்கராசார்யர் தமது பாஷ்யத்தில் நெடுவதும் பிரஸ்தாபிக்கும் ஒரே ஒரு வ்ருத்திக்காரர் தான் இருந்திருக்கிறாரென்று நாம் நிச்சயமாக நினைக்கக்கூடுமா? கீழே பிரஸ்தாபிக்கும் விஷயங்களிலிருந்து இது இல்லையென ஏற்படக்கூடும். முதல் ஸூத்ரத்தில் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாவென்ற ஸமாஸத்தை ப்ரஹ்மணோஜிஜ்ஞாஸா வென்று பிரித்திருக்க பூர்வ மிருந்த வ்ருத்திகாரர் ப்ரஹ்மணேஜிஜ்ஞாஸா வென்று பிரித்திருப்பதாக அவர் வ்யாக்யாதாக்கள் ஏக மனதாகச் சொல்லி யிருக்கிறார்கள். சங்கரருடைய கர்மணி ஷஷ்டி வியுத்பத்தி வ்ருத்தியந்தரத்தில் சொல்லப்பட்டுள்ள சேஷ ஷஷ்டிக்கு எதிராக விருப்பதாக அவர்கள் பின்னால் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு வ்ருத்திக்காரர்களும் போதாயனராக விருப்பதற்கில்லை. ஏனென்றால் இந்த இரண்டு வ்யுத்பத்திகளையும் ராமாநுஜர் நிராகரித்து சங்கரர் வ்யுத்பத்தியையே ஒப்புக்கொண்டிருக்கிறார். அத்துடன் உபநிஷத்தில் சொல்லியுள்ள

உபாஸநா விதிக்கு ப்ரஹ்மம் உள்பட்டதென்று ஸ்தாபிக்கும் (1-1-4ல்) இந்த வ்ருத்திகாரர் அத்வைதியாகவே யிருக்கவேண்டும்.*

ஏனென்றால் 'ஸூக்ஷ்மவேத ஸூக்ஷ்மவஸவதி' என்ற ச்ருதி வாக்யத்தை யெடுத்து உதாஹரிக்கிறார் சங்கரர் கண்டிக்கும் ப்ரபஞ்ச விலயவாதிகளும் அத்வைதிகளாகவே யிருந்ததாக ஏற்படுகிறது. அவர்கள் அபிப்ராயத்தைப் பற்றிய வாத மடங்கிய அதிகரணத்தில் ஒரு வ்ருத்திகாரரைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்ருத்திக்காரரை போதாயனராகவோ அவரைச் சேர்ந்தவராகவோ நாம் நினைப்பதற்கில்லை. சங்கரருக்கு வேறுபட்டதான ஸித்தாந்தங்களுடைய இதர அத்வைதிகளும் இருக்கின்றனரென்பது ராமாநுஜருக்குத் தெரியாத விஷயமல்ல. ஸமன்வய ஸூத்ரத்தில (1-1-4) த்யானநியோக வாதிகளையும் பிரபஞ்ச விலயவாதிகளையும் அவர் கண்டிக்கும்பொழுது அவரது வ்யாக்யானகர்த்தா முன் பிரஸ்தாபிக்கப்பட்டவர்களை ஜரன்மாயாவாதிகள் என்று வழங்குவது கவனிக்கக்கூடிய விஷயமாகும். ஆகவே இதிலிருந்து சங்கரருக்கு முந்தி பல வ்ருத்திகாரர்கள் இருந்திருக்கிறார்களென்றும், அவர்கள் எல்லோரும் அத்வைதிகளாக விருந்திருக்கிறார்களென்றும், ஸ்வயூத்யா: என்று சங்கரர் அவர்களைச் சொல்லிக்கொள்ள இடமிருந்திருக்கிறதென்றும் ஏற்படுகிறது. இதில் இன்னும் ஸந்தேகம் இருக்குமானால் சங்கரருடைய ஸூத்ரபாஷ்யத்தின் மிகவும் ப்ராசீனமான வ்யாக்யானத்தைப் பார்த்தால் இதில் தெளிவேற்பட்டுவிடக் கூடும். 'பஞ்சபாதிகாவில்' மூன்றுவித வ்ருத்திகாரர்கள் இருந்ததாகச் சொல்லி அவர்கள் ஸூக்திகளும் சுருக்கமாக அந்த க்ரந்தத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. (ஆகவே இந்த விஷயங்களிலிருந்து வ்ருத்திகாரஸ்ய போதாயநஸ்யைவஹி உபவர்ஷ இதி ஸ்யாந்நாம என்று உபவர்ஷரென்றே போதாயனருக்கு மற்றொரு பெயர் இருக்கலாமென்பதாக ஸ்ரீவேதாந்த தேசிகன் தத்வாலோகத்தில் சொல்லி யிருப்பதை அதிகம் கவனிக்கவேண்டுவதில்லை) அத்துடன் சங்கரருக்கு அடுத்த சிஷ்யரான ஸுரேச்வரர் அவரது ஸம்பந்த வார்த்திகையிலும் மற்ற க்ரந்தங்களிலும் சங்கரர் ஸித்தாந்தத்திற்கு விருத்தமான பல அத்வைத ஸித்தாந்தங்களை எடுத்துச்சொல்லி கண்டித்திருக்கிறார். ஆகையால் இப்பொழுது ஸத்தியாக போதாயனர் இவர்களை யெல்லாம் வேறுபட்ட தனி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தி யென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆனால் இவர் யார், எப்பொழுதிருந்தாரென்பது இன்னும் தெளிவாக ஏற்படவில்லை.

### த்ரமிடாசார்யர்.

த்ரமிடாசார்யரும் சங்கராசார்யர் பிரஸ்தாபிக்கும் த்ரவிடாசார்யரை விட வேறுபட்டவர்தா னென்ற எனது ஆதி அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற அவசியமு மேற்படவில்லை. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த

* இதை பாஸ்கரர் கண்டோக்தியாகச் சொல்லியிருக்கிறார். அவர் பாஷ்யத்தில் ஸவத்ர த்ரவ்யாத்வைதம் மதாநாம் ப்ரக்ருதாநாம்வேதாந்தேஷு ப்ருதி ப்ரதிவிபாதநே ஸநய: என்று சொல்லி யிருப்பது கவனிக்கத் தக்கது.



பரம்பரையில் ப்ராசீனரான ஸ்ரீயாமுனாசார்யருடைய ஸித்தித்ரயத்தில் ஒரு பாஷ்யக்ருதைப்பற்றிப் பிரஸ்தாப மிருக்கிறது.

ஸமவதாஸ்வாச்ரயணைர்தேசகாலைர்த்ரவ்ய ஸூத்ராணி வ்ருணீ தாநி விவ்ருதாநி ச வஸிஷ்டமம்ஹீர ஹாஷிணா ஹாஷ்ய க்ருதா (ஸித்தித்ரயம்). இவர் தான் த்ராமிடாசார்யராக விருக்கவேண்டுமென்று ராமாநுஜீயர்களால் நினைக்கப்படுகிறது. ஆனால் சங்கரரோ அல்லது அவர் வ்யாக்யாதாக்களோ தாங்கள் பிரஸ்தாபிக்கும் த்ராவிடர் ஸூத்ரங்களுக்கு பாஷ்யஞ் செய்திருப்பதாக பிரஸ்தாபிக்கவே யில்லை. அத்துடன் சங்கரர் த்ராவிடரைப்பற்றி ஆசார்யை: (சாந்தோக்ய பாஷ்யம்) என்று பழைமையான குருவாகவும் ஆகமார்த்தங்களை அறிந்தவராகவும் (மாண்டூக்யகாரிகை) ஸம்ப்ரதாயவிதாகவும் (ப்ருஹதாரண்யகம்) சொல்லுகிறார். இந்த த்ராவிடாசார்யர் ஸ்ரீராமாநுஜாசார்யர் பிரஸ்தாபிக்கும் த்ரமிடாசார்யரைப்போல் ஸகுண ப்ரமவாதியாகவிருந்தால் ஸ்ரீசங்கரர் இவ்விதம் அவரைப்பற்றிச் சொல்லுவதற்கு இட மில்லை. கடைசியாக நான் குறிப்பிட்டுள்ள இரண்டு ஸந்தர்ப்பங்களையும் பார்த்தால் இந்த த்ராவிடாசார்யர் ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு எதிரானவராக விருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் ஆனந்தகிரி எழுதுவது கவனிக்கக் கூடியதாகும். ஸ்ராயஸம்யித ராஜபுத்ரஸ்ருதிகா ஸம்பந்தமாக அவர் தசவஸ்ருதிவாக்ய ஸைகம் பரம் தம் ஸ்வய: ஸ்வஸ்ருதிவாக்யஸிதம் கேடயெஷ்ருவிஷாஆயம் ஸூசிதம் என்று எழுதியிருக்கிறார். இவ்விதம் விசிஷ்டாத்வைத பக்ஷத்திற்கு விரோதமாகவுள்ள த்ராவிடாசார்யரின் இந்த வாக்கியங்களை ஸமந்வயப்படுத்த ஸ்ரீராமாநுஜர் ப்ரயத்தனப்படவில்லை. இப்படி த்ராவிடரை எடுத்து ஸ்ரீசங்கரர் பிரஸ்தாபித்திருக்கும் ப்ரகரணமும் கவனிக்கக் கூடியது. ப்ருஹதாரண்யகவாக்யத்தை யெடுத்துச் சொல்லும் ப்ரகரணத்தில் ப்ரத்யகாத்மா ப்ரஹ்மத்தையே சேர்ந்த பாகமல்லவா வென்ற விஷயம் சர்ச்சை செய்யப்படுகிறது. ச்ருதியில் சொல்லியுள்ளபடி ஜ்வாலையில் பொரி கிளம்புவது போல் ஜீவாத்மா ப்ரஹ்மத்தின் பாகமாக விருக்கலாமென்று எதிர்பக்ஷிகள் சொல்லுகிறார்கள். இந்த உதாஹரணம் சரியில்லை யென்றும், ப்ரஹ்மம் இவ்விதம் தனித்துப் பிரிக்கக்கூடிய தில்லை யென்றும் சங்கரர் சொல்லுகிறார். ஆகவே அநுபவத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் ஒத்து இதற்கு அர்த்தஞ் செய்யவேண்டும். சரீரசரீரிபாவத்தில் ஜீவாத்மா பரமாத்மாவின் பாகமாக விருக்கக் கூடுமென்ற விசிஷ்டாத்வைத பக்ஷத்தை சங்கரர் இங்கு எடுக்காமலே யிருப்பது ஆச்சர்யமாகத் தோன்றலாம். ஆனால் இம்மாதிரி ஒரு வேதாந்த ஸித்தாந்தம் இருக்கிறதென்பதை அவர் தெரிந்துகொள்ளவில்லை யென்பது அடுத்தார்ப்போல் காணப்படும் அவருடைய பின்கண்ட வாக்கியத்திலிருந்து ஏற்படுகிறது. ஸ்ரீ சங்கரர் எழுதுவதாவது:—'ஸர்வேஷ்வபி உபநிஷத்ஸு விஜ்ஞாநாத்மபரமாத்மநோ ரைகத்வம் ப்ரதிபாதயிதும் ப்ரவ்ருத்தேஷு ஸர்வேஷாமுபநிஷத்வாதிநாம் அதாவது எல்லா உபநிஷத்களிலும் உபநிஷத் வாதிகளுக்குள் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுதான் என்ற விஷயத்தில் இரண்டுவித அபிப்பிராயமில்லை யென்பதாகும். இங்குதான் த்ராவிடாசார்யரின் வாக்யமும் எடுக்கப்படு

கிறது. 'அத்ர ச ஸம்ப்ரதாயவித ஆக்யாயிகாம் ஸம்ப்ரசக்ஷதே' என்று பிரஸ்தாபிக்கிறார். ஸம்ப்ரதாயம் தெரிந்தவர்கள் ஒரு கதை சொல்லுகின்றன ரென்று ஆரம்பிக்கிறார். ஆகவே இந்த த்ராவிடாசார்யர் ஒரு அத்வைத ஆசாரியராக விருந்திருக்கிறு ரென்றும் அவரைப் பற்றிய அடையாளம் இப்போது நமக்கு ஏற்படவில்லை யென்றும் நாம் ஏன் எதிர்பார்க்கக் கூடாது ?

இரண்டு த்ராவிடாசார்யர்களும் ஒன்று என்பதற்கு ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் இரண்டு ஆதாரங்கள் காட்டுகிறார். முதலாவது என்னவென்றால் ஸங்க்ஷேப சாரீரகத்தில் (III—221) த்ரமிட பாஷ்யத்திலிருந்து ஸ்ரீபாஷ்யகாரர் ஒரு விஷயத்தை யெடுத்துச் சொல்லி யிருக்கிறார். இந்த க்ரந்த கர்த்தாவான ஸர்வஜ்ஞாத்மமுனி ஸுரேச்வரருக்கு ஸமகாலமாய் அவருடைய சிஷ்யராக விருந்திருக்கிறபடியால் த்ரமிடர் ஸுரேச்வரருக்கு முந்தி யிருந்திருக்கவேண்டு மென்று ஏற்படுவதாக ஸ்ரீ சாஸ்திரியார் சொல்லுகிறார். ஆனால் ஸர்வஜ்ஞாத்ம முனி ஸுரேச்வரருடைய சிஷ்யரல்லவென்று நினைக்க பல காரணங்களிருக்கின்றன. ஆனால் ஸங்க்ஷேப சாரீரகத்தின் எட்டாவது ச்லோகத்தைக் கொண்டே இம்முடிவு செய்வது உசிதமென்று எனக்குப் படவில்லை. அதிலும் இரண்டு ச்லோகங்களிலும் குருவின் பெயர் தேவேச்வரரென்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வஜ்ஞாத்மமுனி ஸுரேச்வரருக்கு ஸமகாலமென்றே வைத்துக் கொள்ளுவோம். அப்படி யென்றாலும் ஸ்ரீயாமுனரும் அவருக்குப் பின் பட்டவர்களும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கே உறைவிடமாக விருந்ததாகக் கருதப்படும் அப்படிப்பட்ட ஸகுணப்ரஹ்மவாதியை தெரிந்திருந்ததாக நினைக்க இடமில்லை. ப்ரஹ்மநந்தி என்ற வாக்யகாரரைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பதிலிருந்து இவர்கள் இரண்டு பேரும் அத்வைதிகள் என்றே காட்டிக் கொண்டிருப்பது தெரியவரும். ஸர்வஜ்ஞாத்மாவின் க்ரந்தத்தின் மூன்றுவது அத்யாயத்தின் 217-வது ச்லோகத்திற்கு மதுஸூதன ஸரஸ்வதி எழுதியுள்ள வ்யாக்யானத்தில் ப்ரஹ்மநந்தியின் பின்கண்ட வாக்யத்தை யெடுத்தெழுதி யிருப்பதிலிருந்து நான் மேலே சொல்லியுள்ளதற்கு இன்னும் ஆதார மேற்படுகிறது. ஆத்ரேயவாக்யகாரேண ப்ரஹ்மநந்திநாபி [illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரஸம்ஸ: || ந ஸம்வ்யவஹாரமாத்ரத்வாத்'' இதி (ஸங்க்ஷேப சாரீரகம்)

ஆகவே பின்வந்த விசிஷ்டாத்வைதிகள் தங்களுடைய த்ரமிட பாஷ்ய காரரையும் டங்க வாக்யகாரரையும் சரியானபடி அறியாமல் அநவதானத்தினால் அவர்களுடைய ஸநாமாக்களான அத்வைதிகளுடன் அவர்களை ஒன்று படுத்தி விட்டார்களென்று இதிலிருந்து நாம் நினைக்க வேண்டி யிருக்கவில்லையா ?

சாஸ்திரியார் இரண்டாவதாகச் சொல்லியுள்ள காரணத்தில் திருமழிசையாழ்வார் த்ரமிடா சார்யராக விருக்கலாமென்று கூறியிருக்கிறார். ஆனால் த்ர



மிடா சார்யர் என்பது திருமழிசையாழ்வாரா வென்பதை இந்த த்ராவிடாசார்ய வ்யவஹாரத்தினின்று தனித்துப் பரிசீலனை செய்யவேண்டும்.

ஆகவே இதில் மேற்கொண்டு விஷயம் தெளிவு பண்ணப்பட்டாலல்லது போதாயனரோ த்ரமிடரோ யாரென்பது ஏற்படவில்லை. சங்கரர் காலத்தில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மிருந்ததா, யிருந்தால் அது எத்தகையதாக விருந்த தென்றுவது இவர்கள் பெயர்களிலிருந்து ஏற்படவில்லை.

## பாகவதர்கள்.

பாகவதர்களெனப்படுவோருக்கும் பின் வந்த ராமாநுஜீயாளுக்கும் என்ன ஸம்பந்தமென்ற இந்த வ்யாஸத்தில் இரண்டாவது பாகத்தைப் பரிசீலனை செய்வோம். பாகவதர்களுடைய ஸித்தாந்தமும் ராமானுஜீயர்களுடைய ஸித்தாந்தமும் ஒன்றே யென்று டாக்டர் தீபோ நினைத்துவிட்டபடியால் அவ்விதம் நினைப்பது சரிதானவென்பதையே அவர் பராமர்சிக்கவில்லை. பாகவதர்களுடைய ஒரு ஸித்தாந்தத்தை பாதராயணர் ஆக்ஷேபித்திருப்பதாக ஸ்ரீசங்கரர் சொல்லியுள்ளதை பாதராயணர் ஆதரித்திருப்பதாகவே ஸ்ரீ பாஷ்யகாரர் அபிப்பிராயப் பட்டிருப்பதைக் கொண்டே அவர் திருப்தி யடைந்து விட்டாரென்று ஏற்படுகிறது. பாகவதர்களைப் பற்றியும் ராமாநுஜீயாளைப் பற்றியும் பண்டித ராமமிச்ர சாஸ்திரி எழுதியுள்ளதுபோல் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுவதையே இவர் நம்பி யிருக்கலாம். ஆனால் மஹா பாரதத்தில் நாராயணீய பாகத்தை நன்கு பரிசீலனை செய்திருந்தால் இவ் வபிப்பிராயத்தை அவர் மாற்றிக்கொள்ள நேரிட்டிருக்கும். இந்த நாராயணீயத்திலிருந்தே வைஷ்ணவ மத மேற்பட்டிருக்கிறது.

இந்த பாகத்தின் 339-வது அத்யாயத்தில் வாஸுதேவ ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தன் முதலிய அவதாரங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதை சங்கரர் தமது அத்வைத ஸித்தாந்தத்திற்கு அநுகூலமாக அர்த்தஞ்செய்து கொள்ளலாம். ஆனால் இங்கு பிரஸ்தாபிக்கப்படும் வ்யூஹாவதாரத்திற்கும் ஸ்ரீபாஷ்யகாரர் தமது ஸ்ரீபாஷ்யத்தில் பிரஸ்தாபிக்கும் (ஆனந்தா பிரஸ் பக். 116) விபவ, ஸூக்ஷ்ம தசைகளுக்கும் எவ்வித ஸம்பந்தமுமிருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன் ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் ஆகிய இவர்கள் ஜீவன், மனஸ், அஹங்காரம் ஆகியவற்றிற்கு அதிஷ்டான தெய்வங்கள் என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்திருப்பதற்கும் இங்கு இடமில்லை. அது மாத்திரமல்ல. இந்த நாராயணீயத்திலிருந்து அத்வைதத்திற்கு ஆதாரமானதென சங்கரர் சில ச்லோகங்களை அடிக்கடி எடுத்துக்காட்டி யிருக்கிறார். 350-வது அத்யாயத்தில் பின்வரும் ச்லோகங்கள் காணப்படுகின்றன.

பஹவ: புருஷா: புத்ர த்வயா யே ஸமுதாஹ்ருதா: | ஏவமேதததி-
க்ராந்தம் த்ரஷ்டவ்யம் நைவமித்யபி || ஆச்ரயம் து ப்ரவக்ஷ்யாமி ஏகஸ்ய
புருஷஸ்ய தே | பஹூநாம் புருஷாணாம் ஸ யதைகா யோநிருச்
யதே || ததா தம் புருஷம் விச்வம் பரமம் ஸுமஹத்தமம் | நிர்குணம்
நிர்குணா பூத்வா ப்ரவிசந்தி ஸநாதநம் ||

*

இங்கு ஆத்மாக்கள் நிர்குண ப்ரம தசையையே யடைவதாகச் சொல்லப் படுகிறது. முக்தாத்மா நிஜ ஸ்வரூபத்தை யறிந்து அதாவது பரமாத்மாவுக்குத் தான் பரதந்த்ரன் என்று உணர்ந்து அவனுடைய சரீரமாக விருப்பதாக ([illegible] தச்சரீரதயா [illegible]—ஸ்ரீபாஷ்யம்) ஸ்ரீபாஷ்ய காரர் சொல்லுவதற்கு இது நேர் விரோதமாக விருக்கிறது. ராமாநுஜீயாளும் பாகவதர்களும் ஒன்று என்பதாக வித்வான்களும் நினைத்து வந்திருக்கிறபடியால் பாஞ்சராத்ரிகள் அல்லது பாகவதர்கள் அத்வைதிகளுடன் ஸம்பந்தப்பட்டவர்க ளென்ற எண்ணமே யாருக்கும் ஏற்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட விஷயங் களைப் பார்த்தால் இதில் அவ்வளவாக ஆச்சர்யப்பட வேண்டுவதில்லை. ப்ரத்ய காத்மாக்களின் ஸ்திதியைப்பற்றிய ஸித்தாந்தத்தையே சங்கரர் ப்ரதானமாக மறுத்திருக்கிறார். பாகவதர்களும் ராமாநுஜரைப்போல், வாஸுதேவன் ஜீவாத் மாக்களை விட ([illegible]....[illegible] விலக்ஷண: [illegible]--வேதாந்த தீபம்) வேறுபட்டவன் என்பதாக நினைத்திருந்தால் அந்த முக்கிய விஷயத்தை சங்கராச்சாரியர் ஆக்ஷேபிக்காமலிருந்திருக்கமாட்டார். இந்த அதிகரண பாஷ்ய ஆரம்பத்தை நிஷ்பக்ஷபாதிகள் கவனித்தால் சில்லரை பாகங்களில் தவிர மற்றப் படி பாஞ்சராத்ர தத்துவங்கள் வைதிக மதாநுஸாரிகளென்ற எண்ணமே சங்கர ருக்கு இருந்ததென நினைக்கப்படும். ([illegible]—சங்கர பாஷ்யம்). மற்றொரு ஆசார்யர் கூறுவதி னின்றும் ராமாநுஜீயாளைப் போலில்லாமல் பாஞ்சராத்ரிகள் முக்த தசையில் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் சிறிதும் வித்தியாஸமில்லை யென்று ஸ்தா பிப்பதாக ஏற்படுகிறது. பாஸ்கராசார்யர் தமது ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத் தில் [illegible] என்றெழுதுகிறார்.

ராமாநுஜ ஸித்தாந்தம் பாகவதர்களுடைய ஸித்தாந்தத்திற்கு எந்த அம்சங்களில் ஒத்ததாகவிருக்கிறதென்பதை அறிய மேற்சொன்ன விஷயங்களி லிருந்து பாஞ்சராத்ர சாஸ்திரத்தை நன்கு பரிசீலனை செய்யவேண்டியது அவசிய மாகிறது. இதில் தெளிவேற்படும் வரையில் பழைய பாகவத ஸித்தாந்தத்திற் கும் ராமாநுஜ ஸித்தாந்திற்கும் ஸம்பந்தமிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை எடுத்துச்சொல்லுவதில் ஸ்ரீபாஷ்யமே சிறந்த க்ரந்தமென எல்லோராலும் கருதப்படுகிறது. ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் விசேஷங்களிருந்தாலும், அப்பய்ய தீக்ஷிதரின் சிவார்க்கமணி தீபிகையில் இது விசேஷித்துக் கொண்டாடப்பட்டிருந்தாலும் ராமாநுஜ பாஷ்யத்தையே இது திரும்பக் கூறுவதாகவிருக்கிறது. ராமாநுஜீய வைஷ்ணவர்கள் பிரபலர்களாக விருப்பதாலும் அவர்கள் மனதில் ஸ்ரீராமாநுஜன் விசேஷமாகக் குடிகொண் டிருப்பதாலும், ஸ்ரீபாஷ்யத்தை ஒரு ஸாமான்ய நூலாக மாத்திரம் நாம் நினைத்து அபிப்பிராயம் வெளியிடுவதற்கில்லை. இந்த க்ரந்தம் மிகவும் முக்கியமான தென்பதை நாம் கவனிக்கவேண்டும். தமது க்ரந்தம் நெடுவதும்



அவர் எடுத்துக் கூறியிருக்கும் பல பூர்வாசார்ய வாக்யங்களும் இத்தேச வேதாந்த ஸித்தாந்தத்தைப் பரிசீலனை செய்வோருக்கு விசேஷ ஸ்வாரஸ்யத்தையுண்டுபண் ணக் கூடியவை. நல்ல வேளையாக தக்ஷிண தேசத்தில் இவ்விஷயங்களை யெல் லாம் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற ஒரு எண்ணமும் இப்பொழுது ஏற்பட் டிருக்கிறது. சமஸ்கிருத க்ரந்தங்களுடன் ஸ்ரீவைஷ்ணவ சைவ தமிழ் க்ரந்தங் களும் சேர்த்துப் பரிசீலனை செய்யப்படுமானால் ஸ்ரீபாஷ்யகாரர் பிரஸ்தாபிக்கும் போதாயனர், திரமிடர், டங்கர் முதலிய பூர்வாசார்யர்கள் வெறும் பெயர்கள் மாத் திரமல்ல, சிறந்து விளங்கும் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த பரம்பரையில் மிக வும் முக்கிய புருஷர்களென்பது நன்கு தெரியவரும்.

---

## மதங்களின் சாயைகள்.

[ஸ்வாமி ஸ்ரீ. என். எஸ். ஆச்சாரியார்]

உலகத்திலுள்ள மனிதர் ஒவ்வொருவரும் தந்தமக்கு துக்க மொன்றுமே நேரக் கூடாதென்றும் ஸர்வ ஸௌக்கியங்களும் ஸித்திக்க வேண்டு மென்றுமே ஸர்வதா கோரிக் கொண்டிருக்கின்றனர். அக்கோரிக்கை ஈடேறுவதற்காகத் தந் தம்மாலான பிரயத்தினங்களைச் செய்வதற்கும் இவர்கள் பின்வாங்குகிறதில்லை. ஆனால் ஆயிரத்தி லொருவருக் காயினும் அம்மனோரதம் நிறைவேறிற்றென் பதை மட்டும் எவருங் கண்டதே யில்லை. எங்கு பார்த்தாலும் ஸுகமும் துக்க மும் ஸம்மிச்ரமாகக் கலந்து பிசரிக் கொண்டிருக்கின்றதே யன்றி கலப்பற்ற ஸந்தோஷத்தைக் கனவிற்கூடக் காணப் பெறுவதில்லை. இதொரு விசித்திரம். இது நிற்க இதிலும் பெரியதான மற்றொரு ஆச்சரிய முண்டு. அதென்ன வெனில் நீர் உமது ஸுகத்திற் கென்று அல்லும் பகலுமாக அரும்பாடு படுகின்றீரே, அந்த நீர்தான் யார், என்கிற உம்மைப்பற்றிய வுண்மையை நீர் நன்கு தெரிந்து கொண்டீரா? என்றொரு கேள்வி பிறந்தால் அதற்குப் பளிச் சென்று பதிற் சொல்லுகின்றவர் இப்பார்தன்னில் பதினாயிரத்திலொருவரா வது இருக்கின்றாரோ வென்பது ஸந்தேஹந்தான். ஒரு வஸ்துவின்மீது ஸாதா ரணமானப் பிரேமையை வைத்திருப்பவர்கள் கூட அதனைப் பற்றிய விசேஷங் களை யெல்லாம் நன்கறிந்து கொண்டிருக்கின்றனர். உதாஹரணமாக ஒரு வருக்கு மாம்பழத்தில் அபிருசி அதிக மிருக்கின்ற தென்று வைத்துக் கொள் வோம். அவருக்கு, நல்ல பழமொன்றின் நிறமிப்படி யிருக்கும், உருவிப்படி யிருக்கும், இரஸமிப்படி யிருக்க வேண்டும், வாஸனை யெப்படி யிருக்க வேண் டும் என்பதெல்லாம் ஒன்று தவறாமல் தெரிந்தே யிருக்கின்றது. ஆனால் அவ ருக்கு அம் மாம்பழத்திற் கூட, தன்னிட முள்ள வளவிற்கு பிரீதி யிருக்கின்ற தென்பதற்கில்லை. தன்னுடைய வின்பத்திற்காகவே அவ்வினிய கனியை யவர் தேடுகின்றாரேயன்றி தனக்கு வேண்டாமென்று தோன்றிய போது அதனையே

வீசி எறிந்தும் விடுகிறானன்றோ? இம்முறை மாம்பழமொன்றிற்கு மட்டு மல்ல. வீடுவாசல் தோட்டம் துரவு பெண்டு பிள்ளை நண்பர் உறவினர், என்றெல்லாம் அபிமானிக்கப் படுகிற புறப் பொருட்களெல்லா வற்றிற்கும் இக்கெதி துல்யமானதே தான். தமக்கு அனுகூல மென்று தோன்றும் வரையில் இவற்றை வைத்துக் கொண்டு வெகுவாகக் குலாவுகின்றவரே, ஒரு ஸமயம் இவற்றையே பிரதிகூலமென்று கருதி விட்டால் உதறித் தள்ளிவிட்டு விலகி விடுகின்றானன்றோ? எனவே, எவருக்கும் அகப் பொருளான தானென்கிற ஆத்மாவேதான் உண்மையான பிரேமைக்குத் தகுந்த விடம். தன்னையே நேசிக்காமலிருக்கின்ற ஒரு பிராணியை யாராகிலும் இவ்வுலகத்திற் கண்டவருண்டோ? உயிர் வாழ்க்கையை வெறுத்துத் தூக்கிட்டுக் கொள்ளுகின்றவரும் அப்படிச் சாவதிலும் தமக்கு ஒரு நன்மையை யெண்ணியே யல்லவா மாண்டுபோக வழிபார்க்கின்றனர். எனவே, ஆத்மாவென்பது பிராணிகள் யாவற்றிற்கும் நிகரற்ற பிரீதிக்கு எல்லை நிலமான தென்க. மற்றைய பாஹ்யார்த்தங்களின் மீதும் பிராணிகளுக்குச் சிறிதளவோ அல்லது விரிவாகவோ பிரீதி யுண்டாகின்றதென்றாலும் அந்தப் பிரீதிக்கும் தத்தம் ஆத்மாவின்கண் அவற்றிற்கு ஆழ்ந்து கிடக்கின்ற பிரேமையே காரணமே யன்றி அது அப் புறப்பொருட்களின் பால் நேரிலுண்டாகிய தல்ல. இந்த மர்மத்தை பிருஹதாரண்யகோபனிஷத்திலுள்ள ஒரு வாக்யம் மிக்கத் தெளிவாக விளக்கி யிருக்கின்றது. அது சொல்வதென்ன?

நவா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி! ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி। நவா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா பவதி। ஆத்மனஸ்து காமாய ஜாயா ப்ரியா பவதி।

உலகத்தில் ஸ்திரீ புருஷப் பிரபிருதிகள் அன்யோன்யம் நேசத்துடனிருப்ப தெல்லாம் தந்தம் க்ஷேமத்தைக் கருதியே யன்றி பரஸ்பரர் பொருட்டாக வல்ல, என்பது இவ்வாக்கியத்தின் திரண்ட பொருள். இதனால் நாம் கீழ்ச் சொல்லிய படி பிராணி ஸாமான்யத்திற்குத் தந்தம் ஆத்மாவே பிரியதமமானது என்கிற அர்த்த ஸாரம் வற்புறுத்தப் படலாகிற தன்றோ? ஆகவே ஸகலப் பிராணிகளுக்கும் தானாகிற ஆத்மாவே பரமப்பிரிய மென்றால் அத்தகைய அருமையான தன்னை, அதாவது ஆத்மாவை, அறிவிற்சிறந்தவரென்று கொண்டாடப் படுகின்ற மானிடருங் கூட ஆயிரத்தி லொருவரேனு மறிந்து கொள்ளாமலிருப்பது ஒரு பரமாச்சரிய மல்லவா? இதனை இம்மட்டில் விட்டு வைத்து முன்னதற்குச் செல்லுவோம்.

உமது அனுகூலத்தைப் பெறவென்று அனேக காலமாக அரும்பாடு படுகின்றீரே. அதேன் தானின்னுங் கிடைத்த பாடில்லை? நல்லது, பிரதிகூலத்தை யாவது விலக்கி வைத்துக் கொள்வோ மென்று வெகு பாடு பட்டீரே. அதுவும் சற்று அகன்றேனும் நின்ற தென்பதையுங் கண்டிலோமே? இதன் காரணத்தை இன்னதென்று தெரிந்து கொண்டீரா? மெத்த ஸமர்த்தரான நீர் இப்படி ஸங்கடப்படலாகுமோ? என்றொரு கேள்வி கேட்டாலோ எல்லோரும்



மௌனத்தையே தான் ஸாதிக்கின்றனர். எனவே, மனிதர் பெரும்பாலும் பரமப் பிரியதமமான தம்மைத் தெரிந்து கொள்ளவுமில்லை. அத்தகைய தமது அனுகூலங்கள், தாம் கோரியபடி கிடைக்காமல் தடைப்படுவதன் காரணத்தையுங் கண்டறியவில்லை யென்றேற்படுகின்றது. என்றாலும் இவ்வறியாமையை மனதினால் நினையாமலே மாந்தர்கள் தந்தமக்குத் தோன்றுகிற அனுகூலப் பிரதிகூலங்களைக் கூட்டுவது கழிப்பதிலேயே நாட்டமுள்ளவராக தாராளமாய் பிரவிருத்தித்துக் கொண்டிருப்பது தான் பெரிய மாயமாயிருக்கின்றது. இது ஸாதாரணமாக மனித ஸ்வபாவமாயிருந்தாலும் மேதாவிகளான சில தீரர்கள் மட்டும் இவ்வஞ்ஞானப் பிரவாஹத்தில் முற்றிலும் மூழ்கிப்போய் விடுகிறதில்லை. அவர்களும் மற்றவரோடொக்க முதன் முதலில் தமக்கு ஹிதமென்று தோன்றியதைச் சேகரித்துக் கொள்ளவும் அஹித மென்று தோன்றியதை விலக்கித் தள்ளவும் தான் பிரவிருத்திக் கின்றன ரென்றாலும் அவர்களுக்கு நடுவே இச்சங்கை யொன்று ஜனிக்கலாகின்றது. யான், எனக்கு அது வேண்டும் இது வேண்டு மென்று அனவரதம் பாடுபடுகின்றேனே. என்னை யாரென்று நான் தெரிந்து கொண்டேனா? என்னையே யான் இன்னான் இனி யானென்று தெரிந்து கொள்ளா திருக்கும் வரையில் எனக்குத் தேவையென்ன, அதற்குப் பாதையென்ன என்று கண்டு பிடிப்பதெங்ஙனங் கூடும்? என்னைப் பற்றியும் எனக்கு வேண்டியது வேண்டாதது பற்றியு முள்ள உண்மையை யானுணர்ந்து கொள்ளா திருக்கும் வரையில் எனது பிரயத்தின மொன்றும் ஸார்த்தகமாகா தென்பதோடு பரிஹாஸத்திற்கு மன்றோ இடமாயிருக்கும்? ஒருவர் ஒரு பதிகத்தைக் கவனஞ் செய்து தனது நண்பரிடங் காட்டினாராம். நண்பர் அதனைப் படித்துப் பார்த்து விட்டு ஸரி, இதன் பொருளென்ன சொல்லுமென்று வினவினாராம். அதற்கவர் சுலோகத்தை மாத்திரந்தான் கவி கட்டி யிருக்கின்றேன். அர்த்தத்தை இனிமேல் தான் பண்ணியாக வேண்டும் என்று விடை யளித்தாராம். இதென்ன கூற்று? பொருளை மனதில் உருப்படுத்திக் கொண்ட பின்பே யன்றோ சுலோகத்தைச் செய்யலாகும். அதுவின்றி அவர் எதை வைத்துக் கொண்டு தான் அக்காதையை வரைந்தாரோ? அது போலல்லவோ நம் கதையு மாகும். ஆகவே, நான் யார்? என்று தீரர்களான மேதாவிகள் தாமாகவே விசாரிக்கத் தொடங்குகின்றனர்.

இவ்வாத்ம விசாரணையின் மூலமாய் தம்மைப்பற்றி ஒருவிதமான முடிவிற்கு வந்து விட்டால் அதற்குமேல் தமக்கு அனுகூலமான புருஷார்த்த மெது, அதனை ஸாதித்துக் கொள்வதற்கான மார்க்க மெது, நாம் வேண்டாத அனர்த்தங்க ளெல்லாம் என் தான் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன, அவற்றை நிவர்த்திக்கும் உபாயந்தானென்ன? என்பதை யெல்லாம் தீர்மானிப்பதில் அதிக சிரம மிராது. மாலை யென்று தெரிந்துவிட்டால் அதனை மார்பில் அணிந்து கொண்டு ஆனந்திக்கலா மென்பது ஸுலபமாய்த் தோன்றி விடு மன்றோ? ஆனால் மேதாவிகளான பலர் இவ்வாத்ம தத்வத்தைக் கண்டுபிடிப்பதற்காக அரும் பாடுபட்டிருக்கின்றன ரென்றாலும் அவர்களெல்லோரும் ஒரே விதமான முடிவிற்கு வந்து விட்டார்களென்று மட்டுஞ் சொல்லுவதற்கில்லை.

அவரவர் தம் தம் அறிவிற்கேற்றவாறு வெவ்வேறு விதமான ஸித்தாந்தத்தையே தான் செய்து வைத்திருக்கின்றனர். ஆத்ம தத்வமென்பது அவ்வளவு ஸுலபமாகக் கண்டறிய முடியாத அபூர்வ வஸ்து போலும். மேலும் நமது கைக்குக் கிடைத்திராத பொருளொன்றைப் பற்றி நாம் ஸங்கற்பிக்க ஆரம்பித்தோமானல் அக்கற்பனையில் நமக்கு நெடுநாளாக வுள்ள அனுபவம், அதன் மூலமான வாஸனை, அதனுலுண்டாகிய ருசி, இவை யெல்லா மொன்று சேர்ந்து சித்திரம் போல் அவ்வஸ்துவை நம்மனதில் வரைகின்றனவே யன்றி அப்பொருளின் யதார்த்தமான ஸ்வரூபம் அங்கு பிரதானமா யிருப்பதில்லை. குடியிருக்கச் சொந்தமான வீடில்லாதிருக்கின்ற ஒரு குடும்பி நல்ல வஸதியுள்ள வொரு கிருஹத்தைக் கிரயத்திற்கு வாங்க வேண்டு மென்று மனோரதிக்கின்றார். விவாஹிக்கப் பெண் கிடைக்காமல் தவிக்கின்ற பிரும்ஹசாரி யொருவர் தாமொரு கன்னியைப் பற்றிக் கனவு காண்கின்றார். அங்கெல்லாம் அவர்களின் மனோரதத்திற்கு அனுகுணமாக அவ்வஸ்துக்கள் நிர்மிக்கப் படுகின்றனவே யன்றி அவற்றின் யதார்த்தியம் பிராதான்யத்தைப் பெறுகின்ற தில்லையே? இது கொண்டு அக்கற்பனைகளில் வஸ்துக்களின் யதார்த்தாம்சம் ஒன்றுமே யில்லை யென்றுஞ் சொல்லி விட முடியாது. வீடு வாங்கியான பின் அவர் முன் மனோரதித்தது போன்ற அறைகள் சில அதிலமைந்திருக்கக் கூடும். விவாஹித்த பெண்ணுக்கும் முன்னெண்ணி யிருந்த குணங்க ளேதேனும் பொருந்தியு மிருக்கலாமன்றோ? இவ்வுதாஹரணத்தைக் கொண்டு எந்த ஸித்தாந்தத்திலும் உண்மையிருக்கின்ற தென்பதை நன்றாய்ச் சொல்லக் கூடுந்தான். ஆனல் பற்பல ஸமயவாதிகளாலுங் கற்பிக்கப் படுகின்ற தத்வங்களில் சிறிதளவு கூட நியூனதிரேகமின்றி எல்லா அம்சங்களும் உள்ளது உள்ளபடியே உருக்கொண்டிருக்கின்றனவென்று சொல்லுவது கேவலம் ஸாஹஸமே யாகும். இப்படிப் பூர்த்தியில்லாதிருப்பது மதங்களுக்கு ஒரு பெருமையே யன்றி, ஒரு குறையாக மாட்டாது. மதமென்பது வளர்ந்து கொண்டே போய்க் கொண்டிருக்கின்ற மஹத்தானதொரு பல விருக்ஷம். இந்த மறுக்க முடியாத இரஹஸ்யத்தை மட்டும் மறந்து விடாமலிருந்தால் ஈதொரு குறை யென்கிற தப்பெண்ணம் மனதில் தோன்றவே தோன்றாது. சிலர், மதங்களெல்லாம் தத்வப்ரக்ரியா பாகங்களில் ஏக ரூபமாயிராமல் பலவாறாகப் பிரிந்து போயிருப்பதை ஒரு குறையாகக் கூறுகின்றனர். இது ஸரியல்ல. அவ்வோ மதப் பிரவர்த்தகர்களான ஆசிரியர்களும் தத்தம் மனதிற்கு யதார்த்த மென்று தோன்றியதையே மாந்தருக்கு உபதேசிக்க முன்வந்தன ராதலின், தந்தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவ யுக்திகளை யொட்டியும் தந்தமக்குக் கிடைத்துள்ள பிரமாணத்தை யநுஸரித்தும், தந்தம் மனச்சாக்ஷியின்படியே, அர்த்த தத்வங்களை நிர்ணயித்து, அத்தகைய ஸ்வாபிப்பிராயங்களை உள்ளதை யுள்ளபடியே அவ்வாப்த்தர்கள் ஹார்த்தமாக வெளியிட்டருளி யிருப்பது பெருமையே யன்றி அதிற் குறை கூறுவதற்கு இடமென்ன விருக்கிறது? கூட்டிலேறிய முப்பது பெயர்களும் ஒரு அக்ஷரங் கூட மாறாதபடி ஒரே பாடமாக ஸாக்ஷியத்தை ஒப்பித்தாற்றான் அந்த ஸாக்ஷியங்களை நம்புவது தென்பது சிரம மாகும். அப்படி ஒத்துப் பேசிக் கொண்டு அந்ரு



தத்தை ஸ்தாபிக்க முற்பட்ட அவ்வப்ராமாணிகரைப் போலன்றி இப்பெரியார் பின்ன பின்னப்ரகாரமாகவேனும் ஹார்த்தமாயுபதேசித்திருப்பது போற்றற்பாலதே யன்றோ?

மேலும் லௌகிகமான ஸாதாரணப் பொருட்களைப் பற்றி ஒரே பிரமாணத்தை அவலம்பித்து நின்று போதிக்கின்றவரான ஒரே குருவினிடத்திற் கேழ்க்கின்ற பலருள் ஒருவர் உள்ளதை யுள்ளபடியே உணர்ந்து கொள்ளுகின்றார். வேறொருவர் வேறுவிதமாக கிரஹிக்கின்றார். மற்றொருவர் மாறுபாடாக அறிகின்றார். இன்னு மொருவருக்கோ வெனில் ஒன்றுமே விளங்க வில்லை. இது இப்படியிருக்க அத்தியந்த அதீந்திரியமான ஆத்ம தத்வத்தைப் பற்றிப் பெறுவதற்கென்று ஒரே மார்க்கத்திற் செல்லுகின்றவர் கூடப் பிரிந்து போவது ஸஹஜந்தானே? இவ் விஷயத்தை ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் பின்வரும் வாக்கியத்திஞல் விளக்கி யிருக்கின்றார்கள்.

ஜொகெவி னகஸாத்ரோ: ஶ்ரூணாதாம் கஸ்யசிதயாவகு வ்ருதி வத்யதெ । கஸ்யசியயாவகு । கஸ்யசிவபரீதம்! கஸ்யசிஹுவ்ருதிவத்யதெ! கிமு வக்தவ்ய தீந்த்ரிய ஶாத்தகவம் ॥

ஆனல் இப்படி மதங்கள் பற்பல வேறுபாடுள்ளனவாயிருந்தாலும், பரிபூர்த்தியில்லாதவை களாகவே தானிருந்தாலும் கூட, எல்லா மதங்களிலும் மாந்தர்கள் பற்பல வகையில் முன்னேறி வருவதற்கான முறையிலே தான் அர்த்த தத்வங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன வென்னும் வகையில் ஸந்தேஹமே யில்லை. ஆதலால் எம்மதத்திலும் புத்திமான்கள் கிரஹித்துக் கொள்ள வேண்டிய ஸாராம்சங்கள் ஏராளமாயிருக்கின்றன வென்று கூசாமற் கூறலாகும். எனவே, என்னுடையது தவிர மற்றதெல்லாம் அபஸித்தாந்த மென்று ஸாதிக்கத் தலைப்படுவது விபரீதமான ஸாஹஸமாத்திரமே யென்பது மன்றி "திறமென்று தந்தம் மதத்தையே தாமதச் செய்கையொடு முளரவறிவார்" என்று தாயுமானவர் கூறியது போல் அக்ஞான காரியமுமாகும். ஆனதினாற்றான் நம் பெரியோர்கள் தந்தம் மதத்திலும் அதன் கொள்கை கோட்பாடுகளிலும் அதற்கு உத்தேச்யமான தெய்வத்தி னிடத்திலும் உறுதியான பற்றுள்ளவர்களாயிருக்கையிலும், புறச்சமயங்களையும் அவற்றிற் குள்ள ஔசித்ய விசேஷங்களைக் கொண்டு பிரசம்ஸித்திருக்கின்றனர். இவ்வளவு மட்டுமல்ல. அவ்வெல்லாச் சமயவழிகளும் நாம் வழிபடுகின்ற, ஸர்வப் பிரபஞ்சஸ்வாமி யாதல் பற்றி ஸர்வ ஸமமாய் ஸர்வஸுஹ்ருத்தாயு மிருக்கின்ற, தமது இஷ்டதைவம் ஒன்றின் ஆணையின் படியே தோன்றியவைகளாதலால் அவ்வோவழியில் நடந்து அவரவரும் பயன் பெறலாமென்பதில் சிறிதளவும் ஸந்தேஹமில்லை' யென்றும் ஸாதிக்கின்றனர். இவ்விஷயத்திற்கு ஒரு உதாஹரணத்தை இங்கு எடுத்துக் காட்டுகின்றோம்.

புருஷார்த்தப்ரபோதம் என்கிற கிரந்தத்தில் ஒரு பிரகரணத்தில் சார்வாக பௌத்த ஆர்ஹதாதி மார்க்கங்களைப் பிரஸ்தாவத்தில் வைத்துக்கொண்டு அதன் மேல்,

இம் மார்க்கங்களெல்லாம் பரஸ்பர விருத்தங்களாகவே யிருக்கின்றன வென்

றுலும் அவ்வோ அதிகாரி புருஷ விசேஷர்களைப் பற்றிய வரையில் இவை யெல்லாமே பிரமாணமாயிருப்பதைத் தடுக்க எவராலு மெதனாலுமாகாது. ஆனால் அவ்வெல்லா மார்க்கங்களும் ஒருதரப்பட்ட அதிகாரியைப் பற்றியவை யென்று சொல்லுவது மட்டும் பொருத்தமற்ற கூற்றாகுமே யன்றி யாம் சொல்லு கின்ற வகையில் விரோத மொன்றுமில்லை. புருஷ பேதத்தை யிட்டாவது ஸர்வ மார்க்கங்களுக்கும் பிராமாண்யத்தை கௌரமா யங்கீகரியாவிட்டால் மார்க்க மொன்றுமே பிரமாணமல்லவென்பதைக் கட்டாயமாய் ஒப்புக்கொள்ளவேண்டிய தாகும். வேத விருத்தங்களான மார்க்கங்களை மட்டும் அப்ரமாண மென்கின் றோம். வேத மார்க்கத்திற்குக் குறை யென்பது கனவிலுமில்லையென்று லோ? வேத மந்திரங்களும் ஒன்றோடொன்று முறண்படுகின்றமையால் வேத மார்க்கமும் அப்ரமாணமேதானென்று ஏனாகாது? வேத வழியிலிருந்து விலக்கப் பட்ட தாந்திரிகர்கள் வேதங்களை அப்ரமாணமென்கின்றனரே யன்றி வைதிக ரொருவருஞ் சொல்லவில்லையே யெனில்? அப்படியானல் தந்திர ஸம்பந்தமே யற்ற வைதிகர்கள் அத் தந்திரங்களை அப்ரமாணமென்கின்றனரே யன்றி தாந்திரி கர் எவருஞ் சொல்லவில்லையே யென்று கேள்வி திரும்பி விடாதா? ஆகவே விசித்திரமான அனந்த கர்மத்திற்கு அதீனமாக நானாவித அதிகார பேதங்களைப் பெற்றிருக்கின்ற அவ்வோ புருஷ விசேஷர்களைப் பற்றிய வரையில் உலோகாயத முதலாக வேதாந்த மீறாகவுள்ள ஸர்வ மார்க்கங்களும் பிரமாணமாய் நின்று பயனளிக்கின்றனவென்க. இப்பொருள் கொண்ட புருஷார்த்த ப்ரபோதத்தி லுள்ள சுலோகங்கள் சிலவற்றை இங்கு வரைகின்றோம்.

ஸர்வவிருத்தைச்சைவைதே தேஷாம் ஸர்வத்ரதாம் ।
பும்விஶேஷாந் ஸமுத்திஶ்ய ப்ராமாண்யம் கேவலாயதே ॥
ப்ராமாண்யம் ஸர்வஶாஸ்த்ராணாம் ஏகமுத்திஶ்ய யோ வதேத் ।
வ்யாஹதம் தத்வாக்யமேவ ந தத்வாக்யம் நஸம்ஶய: ॥
ப்ராமாண்யம் ஸர்வஶாஸ்த்ராணாம் பும்பேதாதி விநைவ சேத் ।
தர்ஹி ச கஸ்யாபி ஶாஸ்த்ரஸ்ய ப்ராமாண்யம் நைவ ஸித்த்யதே ॥
ஶாஸ்த்ரே வேதவிருத்தா யே தேஷாமேவாப்ரமாணதா ।
ஸ்வப்னேபி வேதஶாஸ்த்ரஸ்ய நைவாஸ்த்யப்ரமாணதா ॥
ஸந்தா வேதமந்த்ராணாம் ஸர்வத்ர விருத்ததா ।
அதோऽப்ரமாணதா வேதஶாஸ்த்ரஸ்ய நஹ்யேவ கதம் ॥
வேதாப்ராமாண்யகம் வேதஶாஸ்த்ரபஹிஷ்க்ருதா: ।
வதந்தி தாந்த்ரிகா ஏவ ஸர்வதா வைதிகா ந ச ॥
தர்ஹி தந்த்ராப்ரமாணத்வம் தந்த்ரஸம்பந்தவர்ஜிதா: ।
வதந்தி வைதிகா ஏவ ஸர்வதா ந து தாந்த்ரிகா: ॥
விசித்ரானந்தகர்மாதீநாதிகாரிவிபேதத: ।
லோகாயதாதி வேதாந்த ஶாஸ்த்ராணாம் ஸார்த்தகம் ஸதா ॥

இப்படி ஸமரஸமான பாவனையை வெளிப்படுத்தி விட்டு பரம வைதிகரான இந்த கிரந்தகர்த்தா, என்றாலும் ஸமஸ்த புருஷார்த்தங்களுக்கும் ஸாதகமான



வைதிக மார்க்கமானது மற்ற மார்க்கங்களெல்லாவற்றிலும் மேலானது என்கிற ஸ்வாபிப்ராயத்தையும் மேலுள்ளதான,

ததா விஶேஷோ ஶாஸ்த்ராணாம் தத்த்வஸ்ய ஸாதக: ।

என்கிற சுலோகார்த்தத்தினல் ஸ்பஷ்டமாய்ச் சொல்லி விட்டார். இனி மஹா புருஷார்த்தம் ஸித்திப்பதற்கு மற்றைய மார்க்கங்களினலாகு முதவி யொன்றுமில்லையா? இதுதானு நீர் அவற்றைக் கொண்டாடியதன் ஸாரம்? என்றொரு கேள்வியெழ, இல்லை யில்லை. அம்மார்க்கங்களுக்கும் முக்திக்கும் ஸம்பந்தமேயில்லை யென்பதில்லை. ஸாம்ராஜ்ய ஸ்தாநத்தைச் சேர்த்துவைக்கின்ற இராஜபாட்டையான வேத மார்க்கத்திற்கு வந்துசேர அவைகள் கிளைவழிக்களாக நிலவி நின்று உதவுகின்றனவே.

தத்ராபி ஹேதவஸ்ஸந்த்யுதி அஹஞ் தி கோ வதேத் ॥

என்று அப்பதிகத்தின் பிற்பகுதியால் அதற்கும் தக்கபடி ஸமாதானத்தைக் கூறி யிருக்கின்றார்.

ஸூத ஸம்ஹிதையில் யக்ஞவைபவ கண்டத்தில் இருபத்தி யிரண்டாவது அத்தியாயத்தில் வேதம், வேதானுஸாரிகளான சாஸ்திரங்கள், வேத பாஹ்யங் களான லோகாயதாதி தந்திரங்கள், இவ்வெல்லா மார்க்கங்களும் ஈசுவரனலே யே நிர்மிக்கப்பட்டவைகளென்றும் அதுகொண்டு அவைகளெல்லாம் ஒருமிக்கப் பிரமாணங்களே யென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. எப்படி யெனில்?

அத தத்ஸம்ப்ரவக்ஷ்யாமி ஶாஸ்த்ராணாம் நிர்ணயம் ।
புரா ஶ்ராயா ஸஹிதா யயம் ஸ்ருஷ்டம் சாநிவர்த்திவா: ॥
வேதாம்ஶ்ச ஸர்வஶாஸ்த்ராணி புராணம் பாரதம் ததா ।
வேதாங்கான்யுபவேதாம்ஶ்ச காமிகாத்யாகமானபி ॥
காபாலம் லாகுலம் சைவ ததா பாஶுபதம் த்விஜா: ।
ததா பாஶுபதம் ஸோமம் பைரவம் பூர்வஶாஸனம் ॥
தேஷாமேவாவபேதாம்ஶ்ச பஞ்சராத்ரம் ஸஹஸ்ரஶ: ।
விஷ்ணுனோக்தானி ஸாத்த்வதானி பஞ்சராத்ராகமானபி ॥
லோகாயதம் ததா ஶாஸ்த்ரம் பௌத்தம் விஸ்தரஸம்யுதம் ।
ஆர்ஹதம் திகம்பரம் ஸாங்க்யம் யோகம் ததைவ ச ॥
அநேக ஹேதுலிங்கானி ததா ஶாஸ்த்ராணி ச ।
நிர்மமே பரஸ்ஸாக்ஷாத் ஸர்வஜ்ஞஸ் ஸர்வகாரணம் ॥

இப்படிப் பரமேச்வரன் லோகானுக்கிரஹார்த்தமாக ஸங்க்ரஹித்துக் கூறிய அர்த்தங்களையே அவ்வீசனின் திருவருளால் மஹா பாக்கியசாலிகளான மஹர்ஷி கள் முதலானோர் விவரித்துக் கூறி யிருக்கின்றனரென்றும் அதனலேயே அவை கள் பரமப் பிரமாணங்களாக ஏற்கப்பட்டிருக்கின்றனவென்றும் அதிகாரி பேதங்களைக் குறித்துப் பிறந்திருக்குமவற்றைக் குதர்க்கங்களைக் கொண்டு கெடுக்கலாகாதென்றும் மேலுள்ள சில சுலோகங்கள் சொல்லுகின்றன.

த்ரைலோக்யாஜைவ ஸம்ஸ்ருஷ்டி ப்ரஜஹிதவாக்யஸம்பதா: ।
லிங்கவிசுத்தாயதாயக்ஷா தாக்ஷஸாசுத்ராஸ்தையெவ ச ॥
உபநயப்ய உபநிஷத்ராப்ய உஹாஹாமாந்த ஜொதஸா: ।
தாத்ருவ விஸ்தரெணைவ ஸம்க்ஷேபெணைவ வா வபத: ॥
கூவஷ்ணி தாநி ஜாதாநி க்ஷிதாநி ஜநீஷிபி: ।
தகெஷரெதெஹி ஜாமஷாஸ்த நஹாஜவத்ர ஜநீஷிபி: ॥

இம்மாதிரியுள்ள பிரமாண வர்க்கங்களை யனுஸரித்து சிவாக்ரயோகி என்கிற பெரியார் சிவக்ஞானபோதம் என்கிற ஸூத்திரத்திற்கு விரிவுரையான சிவாக்ரபாஷ்யம் என்கிற தமது நூலில், எனவே, இவைகளெல்லாமே பரம ஆப்த்த தமரான பரமேசுவரனுலருளப் பெற்றவை யென்பதில் வாசி இலேசங் கூடவில்லையாதலால் வேதம் முதலாக உலோகாயதமீருகவுள்ள மார்க்கங்களெதிலுங் காணுகட்டும் விருத்தங்களான கிரியாம்சங்களில் ஸாத்விக ராஜஸ தாமஸ குணவததிகாரிக்கிரம தாரதம்யத்தைக்கொண்டு கிரஹணுக்கிரஹணம்போன்றும் உதிதாநுதிதஹோமம் போன்றும் வறையரையுள்ள விகற்பத்தையே தான் அங்கீகரிக்கவேண்டும். இதுவன்றி முழுவதும் பாதித்துவிடுவதென்பது கூடவே கூடாது. இன்றேல் மார்க்காந்தரத்தோடும் ஸ்வசாகாந்தரத்திற்குள்ளுங் கூட விரோதமிருப்பதால் வேதத்திற்குக்கூட பிராமாண்யமில்லாமற் போய்விடு மென்று அவர் கூறி யிருக்கின்றார்.

ஸவஸ்ய ஷூத்ராக்ஷவா விபெஷோக் வெதாதி ஷொகாயதாஷெஷ உாபெஷஷ ஸவஷாத் விரஷெஷ க்ரியாம்பெஷ ஸாக்ஷிகராஜஸ தாம ஸ தஷக்ஷ ஷாதுயிகாரி தாரதமெநர ஹணாஹணவக், உதிதாந தித ஹொஜவஷ்வஜ வஷித விகஷ்ப ஸவ. நத ஸவஷாஸ்நாபாய: । கநஜ யாஜாமஷாஹராவெக்ஷயா பாவாஹராவெக்ஷயாவா விரொயெவெத ஸஷ்ராவி ப்ராமாணுமு நஸ்ஜா தி.

இனி மதங்களின் அர்த்த பாகங்களான தத்வம், அனுஷ்டானம், என்கிற இரண்டினுள் அனுஷ்டானத்தைப் பற்றிய வரையில் அதிகாரி பேத நிபந்தனமாக ஆசார விகல்பங்களைச் செவ்வனே வியவஸ்தை செய்துவைக்கக் கூடுமாறு லும் விகல்பத்திற்கு அநர்ஹமான தத்வ பாகத்தைப்பற்றிய செய்தி யென்ன? என்றொரு கேள்வியெழ, அதற்கும்,

சார்வாகம் முதலான ஆகமங்களிலுள்ள வாக்கியங்கள்கூட நேர்முகமாகவோ அல்லது பொருளின் வழியாகவோ பரமேச்வரனுலேயே சொல்லப்பட்டவைகள்தான். ஆங்கு சிவன் முதன் முதலில் புறப்பொருட்களான புத்திராதிகளையே ஆத்மாவென்று அபிமானித்துப் பேணுகின்றவராயும் அன்னம் பானம் ஆகியவற்றுலுண்டாகின்ற லௌகிக ஸுகத்தையே பரமபுருஷார்த்தமென்று பிரமித்துப் போயிருக்கின்றவராயும் அதி தாமஸ மந்தமதிகளுமான அதிகாரிகளை யுத்தேசித்து, புத்திரர்களான புறப்பொருளொன்றுமே ஆத்மாவல்லவென்றும் கடல்போன்ற துக்கத்தினிடையே மறைந்து கிடக்கின்றதும் தேன்பட்ட விஷம்



போலத் தித்திக்கின்றதுமான லௌகிக ஸுக மெதுவும் ஆத்மாநுரூபமான புருஷார்த்தமாக மாட்டாதென்றும் போதனை செய்துவைத்து, அப்படி போதிக்கப்பட்டவர்களுக்கு ஸூக்ஷ்மத்தை கிரஹித்துக் கொள்வதற்கான ஸாமர்த்திய மில்லாதிருப்பதைக் கண்டு அவர் புத்தி நிலைகொள்வதற்காக ஸ்தூலமான தேஹத்தையே ஆத்மாவென்றும் இத்தேஹ மழிந்துபோவதே மோக்ஷமென்றுமுபதேசித்து ஒவ்வொரு மனிதரும் தந்தம் ஆயுட்காலத்தில் லோகத்திற்கு ஹிதமாக நடந்துகொள்ள வேண்டிய கடமைகளைச் சமத்துகின்றனவான பற்பல லௌகிக தர்மங்களை விளக்கியருளினர். பிறகு தாம் காட்டிய லோகாயத தர்ம வழியைக் கடைப்பிடித்து நின்று லோகஹிதங்களைத் தம்மாலான வரையில் தாராளமாய்ச் செய்து கொண்டிருக்கின்ற உதாரகுணமுள்ள உத்தம புருஷரிடத்தில் உவப்படைந்த ஈச்வரன் தன்னருளால் அவர் மனம் முன்னிலுந் தெளிவடைந்திருக்கும் நிலையை யுணர்ந்து அவர் ஐயோ! இத்தூலதேஹத்தை ஆத்மாவென்று நினைத்திருந்து விட்டேனே, இது ஆத்மாவென்று நினைப்பதற்கு அர்ஹமாகத் தோன்றவில்லையே, என்று ஸந்தேஹிக்கின்ற ஸந்தர்ப்பம் பார்த்து இத்தேஹமானது ஆத்மாவாகாது தான். ஆத்மாவென்பது தேஹேந்திரியாதி விலக்ஷணமானவொரு தனித் தத்துவமன்றோ? என்கிற பௌத்தக்கொள்கையை உபதேசித்தருளுகின்றார். பிறகு அவர் அதிலும் பக்குவமடைந்து பரமவிரக்தராக வானபின் அஹிம்ஸாதிப் பிரதானமான ஆர்ஹத தத்துவத்தை யுபதேசிக்கின்றார். அதிலுந்தேறி சாந்தரா யிருக்கின்ற அவர்களுக்கும் படிப்படியாக பிராஜாபத்திய வைஷ்ணவ சைவ ஸ்மார்த்த ஸித்தாந்தங்களை யெல்லாஞ் சொல்லி வைத்து முடிவில் ச்ரௌத மார்க்கத்தையுமுபதேசித்து பிரஜைகள் உஜ்ஜீவிப்பதற்கான உபாயத்தைச் செய்து தந்தருளி யிருக்கின்றார், என்று சிவாக்ரபாஷ்யத்திலேயே பதிற் கூறி யிருக்கின்றார்.

ஆனால் இப்படிப் படிவரிசை கட்டவேண்டியதவச்ய மென்றாலும் நீர் கொடுக்கின்ற நம்பர் வாரியாகத் தான் அப்படிகளை யமைக்கவேண்டுமென்கிற அவச்யமென்ன? அவரவர் மனப்போக்கின்படி ஸோபானக்கிரமங்களை மாற்றியும் வைத்துக்கொள்ளலாமன்றோ? என்றொரு பிரச்னங் குறுக்கிட அதற்கும் அந்த கிரந்த கர்த்தாவே இப்படிப் பிரத்யுத்தரத்தை விடுத்திருக்கின்றார். விரோத பரிஹாரார்த்தமாக ஸோபானக்கிரமத்தை அங்கீகரிக்க வேண்டியது அவச்யமாகிவிடவே இனி, லோகாயதாதி தந்திரங்களைப்பற்றி சிஷ்டஜன பரிக்கிரஹாம்சத்தில் தாரதம்மியமிருப்பதாலும் பின் பின்னுள்ள சாஸ்திரங்கள் முன் முன்னுள்ள சாஸ்திரங்களை நிராகரித்துக்கொண்டே பிரவிருத்திக்கின்றமையினுலும் யாம் காட்டிய முறைப்படி ஸோபானக்கிரமங்களைக் கற்பிப்பதே யுக்தமான தென்கின்றார். இவ்விஷயமான அவர் தம் பாஷ்யத்திலுள்ள வாக்கியங்கள் சிலவற்றை இங்கு வரைகின்றோம்.

அாவஷாகாதுர மஜயெஜவிவரக்ஷூ ஸாக்ஷாதஷஷ்ராநா ஜப்ஷரொகஜெவ ।
ததவய்ஜம ஜஹா ஸ்வ காதி தாஜவும் உஜஜிம பாஹஜாஜ் வக்தாதீநா
தவெநா ஹிஜநீஜாநம ஜெள்கிக் ஸுஷவஜெவ வாஜவ்யவஷாதஷெவ

ந நூநம் அதிகாரிணாம் ப்ரதிபத்த்யர்த²ம் நாநாத்வம் த⁴ர்ம: | ஸ்ம்ருதி ஶ்ரௌதலௌகிக ஸாத⁴நஸ்ய அவரபரபா⁴வோத்க்ருஷ்டத்வம் ப்ரதிபாத³யதி தஸ்ய பௌ³த்³தா⁴தி³பா⁴ஷ்யஸ்ய ஸமுத்கர்ஷஸ்ய ஸூத்ரேண ஸாத⁴நதயா ஸம்யக் தேஷாம் ஶாஸ்த்ராணாம் ச பரஸ்பரோத்கர்ஷஸ்ய ப்ரதிபாத³யதி | ப்ரத²ம: தத்த்வ ஜ்ஞாநார்த²ம் ப்ரவ்ருத்தஸ்ய ஶ்ரேயஸ்கரத்வம் தந்மாத்ரம் லோகஸித்³த⁴ம் தேஷாம் ஶ்ரத்³தா⁴ ப்ரவ்ருத்திதாநுபபத்தே: ப்ரமாணாத்⁴யாஸக்த் நிராகரணாய ஶாஸ்த்ராணாம் அவதாரயதி | ஸர்வஸ்ய ஸ்வார்த்த² ப்ரவர்த்தநக்ரமேண ப⁴க³வத ஏவ கல்ப்யதே | விஶேஷாவிஶேஷஸ்ய க்ரமேண ப்ரவர்த்தநக்ரமே லோகாயதாதீநாம் விஶிஷ்டஸ்ய ஶ்ருதார்த²த்வேந உக்தப்ராயத்வம் ஸர்வஸ்ய ஸ்வஸ்ய ஸ்வஸ்ய நிராகரணேந ப்ரவர்த்தநம் உக்தப்ரவர்த்தநக்ரமேண விஶேஷாபி⁴தா⁴நம் யுக்தமேவ |

இவ்விசேஷத்தை கருணாகரனை பரமேசுவரன் காவஷேயரெனப்படுகின்ற திருக்கூட்டத்தாருக்கு உபதேசித்தருளியதாக ஸூதஸம்ஹிதை சொல்லுகின்றது. அதனை இச்சிவாக்ரயோகி தமக்குப் பிரமாணமாக எடுத்துக் கூறுகின்றார்.

மஹத்தான பாக்கியத்தைப் பண்ணிய மஹர்ஷிகளே! நீங்களெல்லோருங் கேளுங்கள். உத்தமமான தர்ம மர்மத்தை உங்களுக்கு யான் சுருக்கமாகக் கூறுகின்றேன். சாஸ்திரவிதிவாயிலாக வந்ததல்லவானாலும் மனிதரின் புத்தி சக்தியைக்கொண்டு கற்பிதமேயானாலும் உலகத்தின் சிரேயஸ்ஸில் சிரத்தையுள்ளதான எக்காரியமும் தர்மமென்றே மதிக்கப்பெறும். அதுவும் தேவதாராதனரூபமாயிருந்தால் முன்னதிலும் சிலாக்கியமாகும். அது தானும் ஏதேனுமொரு மூலப்பிரமாணத்தை அவலம்பித்ததாயிருக்குமானால் இன்னும் சிரேஷ்டமாகும். ஸமூலமான தர்மங்களுக்குள் புத்தாகம தர்மத்தைப்பற்றி வருமவற்றை யான் சிரேஷ்டமென்று சொல்லுவேன். புத்தாகம தர்மத்தை விட ஆர்ஹதாகம மூலமான தர்மங்களை தர்மக்ஞர்கள் விசேஷித்துக் கொண்டாடுகின்றனர். அதையும் விட பிராஜாபத்யாகமத்தை யவலம்பித்து வந்தவதனை தார்மிகர் பெரிய தென்கின்றனர். அதனையும் விட விஷ்ணுவாகம தர்மமே மேலான தென்று யான் அழுத்தமாய்ச் சொல்லுவேன். வைஷ்ணவ தர்மத்தையும் விட சைவ தர்மமே சிறப்பு வாய்ந்த தென்பதிற் சந்தேஹமே யில்லை. சைவ தர்மங்களையும் விட ஸ்மிருதியிற் சொல்லிய தர்மங்களே மஹத்தரமானவை. ஸர்வ ஸ்மார்த்த தர்மங்களையும் விட, ஹே முனிச்ரேஷ்டர்களே! ச்ரௌததர்மமொன்றையே பரமோன்னத மென்றறியுங்கள்.

ஶ்ருணுத்⁴வம் ஸர்வே ஸம்க்ஷேபாத் மஹாபா⁴கா³ மஹர்ஷய: |
வதா³மி ஸம்க்ஷேபேண த⁴ர்மரஹஸ்யம் உத்தமம் ||
ஶாஸ்த்ரீயோ லௌகிகோ வாபி யோ த⁴ர்ம: ஸம்ப்ரகீர்த்தித: |
ஶ்ரேயஸ்யா ஸஹிதோ யஸ்து ஸோऽபி த⁴ர்ம உதா³ஹ்ருத: ||
நிர்மூலோ வி ஸம்ப⁴வேத் ஏவ கல்பிதோऽபி மநீஷிபி⁴: |
தே³வதாராத⁴நாகாரோ யஸ்து: ஸ ஶ்லாகி⁴ததர: ||



தே³வதாராத⁴நாகாரோ ஹி ஸமூலோ யஸ்து கல்பித: |
யஸ்து: ஶ்ரேஷ்ட²தமோ ஜ்ஞாத: ஸமூலேஷு ஶ்ருதிகா: ||
ஸமூலேஷ்வபி யே ஶேஷா பௌ³த்³தா⁴க³மஸமீரிதா: |
ஸ து ஶ்ரேஷ்ட² இதி ப்ரோக்தோ மயா வேதா³ந்தபாரகா³: ||
பௌ³த்³தா⁴க³மோதி³தாத் த⁴ர்மாத் ஆர்ஹதாக³மசோதி³த: |
ஸ து ஶ்ரேஷ்ட² இதி ப்ரோக்தோ யாஜ்ஞிகைர்விப்ரபுங்க³வை: ||
ஆர்ஹதாக³மசோதி³தாத்³ த⁴ர்மாத் ப்ராஜாபத்யாக³மோதி³த: |
ஸ து ஶ்ரேஷ்ட² இதி ப்ரோக்தஸ்ஸர்வை: தத்த்வவேதி³பி⁴: ||
ப்ராஜாபத்யாக³மப்ரோக்தாத்³ த⁴ர்மாத் தி³வ்ய: பராவர: |
ஸ து ஶ்ரேஷ்ட² இதி ப்ரோக்தோ மயா விஷ்ணாக³மோதி³த: ||
விஷ்ணாக³மோக்தாத்³ த⁴ர்மாத்து வேத³வேதா³ந்தபாரகா³: |
ஶைவாக³மோதி³தோ த⁴ர்ம: விஶிஷ்டோ நாத்ர ஸம்ஶய: ||
ஶைவாக³மோதி³தாத்³ த⁴ர்மாத் ஸ்ம்ருத்யுக்தோ ஹி மஹத்தர: |
ஸ்மார்த்தேப்⁴ய: ஶ்ரௌதத⁴ர்மஸ்து விஶிஷ்டோ முநிஸத்தமா: ||

பரம நாஸ்திகமான சார்வாகாதி மதங்கள் பரம ஆஸ்திகமான வேத ஸௌதத்தை யேறுவதற்குப் படிகளாகத் தானெப்படி யாகும்? அவைகள் அதப்பாதாளத்தில் அழுத்திவிடும் பாறைகளே யன்றோ? என்றொரு கேள்வியெழ,

ப்ரத்யக்ஷத்³ருஷ்டோ ராஜா பரமேஶ்வர: என்று சார்வாக மதத்திலும் அரசனிலும் ஈசனைச் சொல்லப் பட்டிருக்கின்றானன்றோ? இனி அதுவே பரம ஆஸ்திக கிருத்தியமான ஈசுவரோபாஸனத்திற்கு அங்குரார்ப்பணம் போலாகி விடவில்லையா? மனதென்கிற ஒரு ஜடத்திரவியத்தில் பிரும்ஹ திருஷ்டியைச் செய்யச் சொல்லுகின்றதான் மநோ ப்³ரஹ்மேத்யுபாஸீத என்கிற உபநிஷத் வாக்யத்தை உபாஸனசாஸ்திர மென்று உத்கோஷிக்கின்ற யாம் ஞான, பல, வீர்ய, ஐச்வர்யாதி நானாவித குணஸம்பன்னனை இராஜ வ்யக்தியை ஈசுவர னென்கிற சார்வாக ஸம்பாஷிதத்தை எதற்காக நாஸ்திகவாத மென்று தள்ள வேண்டும்? குணமாக யல்லவோ கொள்ள வேண்டும்! என்று அதற்குத் தகுந்தாற்போல சாதுர்யமாக ஸமாதானத்தைக் கூறி விட்டு இப்படித் தாம் சொல்லியதற்கு,

யேந கேநாப்யாகாரேண ஜநைர்தே³வோ ஹ்யுபாஸித: |
தத³ப்⁴யாஸாத் க்ரமாந்மார்க்³கே³ விஶிஷ்டே நிரதோ ப⁴வேத் ||

என்பதைப் பிரமாணமாகவுங் காட்டியிருக்கிறார். இது நிற்க அன்ய மார்க்க ஞானங்களெல்லாம் கிரமமாக வேதமார்க்கத்தின் மீது ருசியை யுண்டாக்குகின்ற வகையில் உதவுகின்றன வென்பதையும்,

வேதா³ந்தே ஜநிதஜ்ஞாநே தோ³ஷலேஶோऽபி பாவநம் வேதா³ |
அந்யத்ர ஜநிதம் ஹி வேத³நம் வேத³மார்கா³தி³ காரணம் க்ருதாக: ||

என்கிற பிரமாணத்தைக் காட்டி உபபாதித்து மிருக்கின்றார்.

இங்கு சொல்லப்பட்டிருக்கும் ஸோபானபங்க்திகளின் முன்பின் கிரமத்தைப் பற்றி அனேகருக்கு அனேக விதமான அபிப்பிராய பேதமிருக்கக் கூடுமானாலும் எல்லா மதங்களிலும் நன்மைகள் நிறைந்து கிடக்கின்றனவென்றும் அவைகளெல்லாம் மாந்தரை நல்லிடத்திற்குக் கொண்டு செல்லுகின்ற ஸன்மார்க்கந்தானென்னும் நானாபிப்பிராய முள்ள மனிதரெல்லோரும் ஏகாபிப்பிராயத்துடன் ஒத்து வருவதற்கு ஈர்ஷை முதலான தோஷங்களிருந்தாலன்றி ஈஷத்தேனும் வேறு காரண மிராது.

எனவே, இந்த நியாயத்தைக் கொண்டும் இன்னும் புத்திக்கு விசேஷவிகாஸத்தைக் கொடுத்து அதனால் நிகரற்ற ஸந்தோஷத்தை யளிப்பதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கின்றவொரு ஏற்றத்தை யெண்ணியும் புத்திமான்களெல்லோரும் பற்பல மதங்களையும் கற்க வேண்டியது மிக்க அவச்யமாகின்றது.

ஆனால் நம் தேசத்திய தற்கால நிலைமை அவ்வோமதங்களின் ஸித்தாந்த தத்வங்களை தாராளமாய்ப் பிரதி பாதித்துக் கொண்டு இரத்தின தீபங்கள் போல விளங்குகின்ற முற்காலத்திய கிரந்தங்கள் ஏராளமாயிருக்கையிலும் அவற்றை நேரில் கற்றறிவதற்கு நம்பாரத மக்கள் பெரும் பாலோருக்கு ஸந்தர்ப்பத்தை யளிப்பதாக வில்லை யென்பதை சொல்லத் தேவை யில்லையே? இந்நிலையில் ஸதாசார்ய கடாக்ஷத்தால் அவற்றைக் கற்றிருப்பவர் சிலருளரானால் அவர்கள் தாம் கற்றிருக்கின்ற விரி நூல்களின் பொருள்களைச் சுருக்கி யெடுத்துத் தொகுத்து தேச காலங்களுக்கு அனுரூபங்களான பாஷாவிசேஷங்களில் தமது புத்தி சக்திக்கு அனுஸாரமாக எழுதி வெளி யிடுவது அவர்தமக்கு அறிவைப் புகட்டிய ஆசிரியர் குழாத்திற்கும் ஸர்வவித்யைகளுக்கும் ஏகோத்தேச்யமான உத்தம தைவதத்திற்கும் அதன் விபூதிகளான புத்திமன் நிவஹத்திற்கும் புரிந்தவொரு அநர்க்கமான கைங்கர்யமாகும், என்று பெரியோர் சிலர் அடியேனை ஆசீர்வதித்து ஆக்ஞாபிக்க அடியேனுடைய சிற்றறிவிற்கு எட்டிய வரையில் மிக்க அச்சத்தோடும் பணிவோடும் நவனீதம், என்கிற எனதறிவு போன்றே சிறியதான நூலொன்றைப் பெரியாரருளால் எழுதி முடித்தேன். அதில் சார்வாக தார்க்கிக ஸாங்கிய பௌத்த ஆர்ஹத ஔபனிஷதங்களெனப் படுகின்ற ஆறு மதங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன.

அது போலவே இவ்வேதாந்த தீபிகைக்கும் சில விஷயங்களை எழுதித்தர வேண்டுமென்று எனது நண்பர் சிலர் நியமிக்க அவ்வாறு மதங்களின் ஸித்தாந்தங்களை அப்புத்தகத்தை வாங்கிப் படித்துத் தெரிந்து கொள்வது ஸுலபமாயிருக்கு மாதலால் இவ்விடத்தில் அம்மதங்களுக்குள்ள அன்யோன்ய ஸம்பந்தங்களையும் ஒன்றிற் கொன்று சிற்சில பாகங்களில் அநிவார்ய மாயேற்பட்டிருக்கின்ற வேற்றுமைக்கு மூலமான காரணங்களையும் விவரித்துக் காட்டு கின்றதான நெடிய வியாஸ மொன்றை மதங்களின் சாயைகள், என்கிற இத்தலைப் பெயருடனேயே கிரமமாக எழுதிக் கொண்டு போய் அவ்விஷயத்தைப் பூர்த்தி செய்யலாமென்பதை உத்தேசித்து அதற்கொரு முகவுரை போன்று இதனை யெழுதலானேன். ஸங்கல்பம் ஒத்து வந்தால் அடுத்த ஸஞ்சிகையிலிருந்தே மேல் விஷயங்களும் கிரமமாக பிரசுரிக்கப் படலாம். தாஸனுக்குச் சொந்தமானது ஏதுவுமில்லை, எல்லாம் எனையாளும் ஈசன் செயல்.

# அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதியது.]

---

அறிவிற்சிறிய அடியேன் இங்கு விண்ணப்பிக்க எண்ணங்கொண்டது அத்யவஸாயத்தைப் பற்றியதாகும். அத்யவஸாயமென்பது ஒரு விஷயத்தைப் பற்றின மனவுறுதியேயாகும். ஒரு பலத்தைக்கருதி ஒரு தர்மத்தை அநுஷ்டிக்கப் புகுந்தவனுக்கு மனவுறுதி நிலைத்து நிற்குமாகில் பலம் அரியதாயிருந்தாலும் அதனுடைய ஸித்தி விளம்பிக்கிறதில்லை. அந்த மனவுறுதி யில்லாதிருந்தால் பலம் எளியதாயிருந்தாலும் அது ஸித்திப்பது அருமையாகும். ஒரே தர்மத்தைப் பலர் அநுஷ்டிக்கப்புகுந்தவிடத்தில் அவரவர்கட்குண்டாகும் அத்யவஸாய தாரதம்யாநுகுணமாக அவரவர்கட்கு ஏற்படக்கூடிய பலத்திலும் தாரதம்யங் காணலாம். ஆகவே தர்மத்தை அநுஷ்டிப்பதைக் காட்டிலும் அதிலுண்டான பாவபந்தமே மேன்மையுடையதாயிருக்கும்.

நம்முடைய இதிஹாஸ புராணங்கள், ஒரே தர்மத்தை அநுஷ்டிக்கப் புகுந்தவர்களிடத்திலும் வெவ்வேறு தர்மத்தை யநுஷ்டிக்கப் புகுந்தவர்களிடத்திலும் பல ஸித்தியிலும் தாரதம்யத்தைக் காட்டிப் பலத்திலும் தாரதம்யத்தைக் காட்டுகின்றன. இவற்றிற்கெல்லாம் ஒருட்கருத் திருத்தல் வேண்டும். அஃதாவது காயக்லேச ஸாத்யமான (சரீரப்ரயாஸையால் ஸாதிக்கத்தக்கதான) சாமான்ய தர்மாநுஷ்டானத்திலுங்கூட பாவபந்த தாரதம்யங்கொண்டு பல வைஷம்யம் (பிரயோஜனத்தின் வேறுபாடு) ஏற்படுமானால் சரீர பிரயாஸையின்றிக்கே பாவஸம்பந்தமாத்திரத்தையே கொண்டமையப் பெற்ற சரணாகதி நிஷ்டைக்கு அத்யவஸாயபூர்த்தி (உண்மையான மனவுறுதி) அவசியம் வேண்டுமன்றோ!

சரணாகதி நிஷ்டையாவது.—அறிவுடைய ஆத்மாக்கள், அறிவில்லாத அசேதனங்கள் என்ற இவையனைத்தும் எம்பெருமானுக்குச் சரீரங்களாம். எம்பெருமான் சரீரியாயிருப்பான். சரீரியே சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைநாடி யத்தனஞ்செய்யத் தக்கவன். சரீரத்துக்கு தனியே ஒருயத்தனமென்பதில்லை. அதுபோல நம்முடைய நன்மைக்கு அவனே கடவன்; நமக்கு அதுக்கு வேண்டிய மனவுறுதியில்லையென்கிற இவனுக்குண்டான அறிவுக்குப் பிரயோஜனமான துணிவுடன் திருஷ்ட பலம் (இருக்கும் நாள் சரீரம் நிலைத்திருப்பதற்கு வேண்டிய பலம்) நம்முடைய கர்மாதீனமாயிருக்கும்; அதிருஷ்டபலம் (பரலோகத்திலடையக்கூடிய பகவத்பிராப்தி முதலிய பலங்கள்) ஈசுவரனிட்ட வழக்காயிருக்குமென்ற உறுதிகொண்டு இவ்விரண்டு பலங்களையும் உத்தேசித்து ஒருவித யத்தனமுமில்லாதிருக்கையாம்.

இப்படித் தன்னுடைய பல ஸித்திக்காக ஒரு யத்தனமுஞ்செய்யாமல் கையொழிந்திருக்கும் நிலைமை சிறந்த ஜ்ஞாநாதிகருக்கும் உண்டாவதரிது. அத்யவஸாயமில்லாதிருப்பானாகில் அது அவனுக்கு அவத்யத்தை (கெடுதியை) விளைவிக்கும். இதனை "வ்யவஸாயமில்லாதவனுக்கு இதில் அந்வயம் ஆமத்தில் போஜனம்போலே" என்று அருளிச்செய்ததாலறியலாம். அஃதாவது—மனவுறுதியில்லாதவனுக்கு இதில் சம்பந்தம் அஜீர்ணத்தில் உண்பதுபோல அநர்த்தத்தை விளைக்குமென்பதாம். அத்யவஸாய

* (சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி 'ஹரிஸமய திவாகரம்' என்ற மாஸ பத்திரிகையில் எழுதியுள்ள வ்யாஸம்.)

பூர்த்தியில்லாது (கலங்காத மனவுறுதியில்லாது) ப்ரவிருத்தி வாஸனையே மேலிட்டுப் பகவத்ப்ராப்தியில் உத்கடேச்சை (மிகுந்த இச்சை) உடையவர்கட்காகவே பக்தி முதலிய உபாயங்களைச் சாஸ்திரம் காட்டிக்கொடுத்தது. எவ்வளவு சிறந்த ஜ்ஞாநாதிகருக்குங்கூட இவ்வத்யவஸாயமுண்டாவது அருமையென்றும், அப்படி அது உறுதிப்படவுண்டானால் அவனுக்குண்டாகும் மோக்ஷமென்கிற பகவத்ப்ராப்தி அவனுடைய ஸ்வரூபத்திற்குச் சேர்ந்ததாயிருக்குமென்றும். இவ்விஷயத்தைச் சுகர் சுருதிகீதையின் ஆதியில் ஒரு சுலோகத்தால் பரீக்ஷித்துக்கு உபதேசித்தாரென்றும் முன்பு இப்பத்திரிகையில் என்னால் எழுதப்பெற்ற "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்" என்ற வியாஸத்தில் வெளியிடப்பட்டன.

இப்படிப்பட்ட அத்யவஸாயம் சாஸ்திர ஜ்ஞாநமடியாக வருவதானால் அருமைப்படுமென்று கருதியே எம்பெருமான் ஆழ்வார்களை நிர்ஹேதுகமாக விஷயீகரித்து அவர்களுக்கு இந்த அத்யவஸாயமுண்டாகும்படி கடாக்ஷித்தருளினன். ஔபதேசிகமாக (உபதேசங்கொண்டே அறியக்கூடியதாக) பரம்பரையாக உபதேசிக்கப்பெற்று வருகிறது. ஆக ஒரு பிரகாரத்தாலும் சலிப்பிக்கக்கூடாததாய் (அசைக்கமுடியாததாய்) பலிக்குமோ? பலியாதொழியுமோ? என்கிற சந்தேகத்தை அறவே ஒழிக்கச்செய்து அநுஷ்டாநத்திலே ஊன்றிநிற்கச் செய்வதாயுள்ள அத்யவஸாயமுண்டாகவேண்டுவதே சாஸ்திரத்தின் உட்கருத்தாகும்.

ஒருவனுக்கு ஒரு கார்யத்தைத் தொடங்கி நடத்தக்கூடிய சக்தி யுண்டானால் அது ப்ரவிருத்தி வாஸனையாலுண்டானதாகும். இது இவனுக்கு அநாதியாக ஏற்பட்டிருப்பதால் நிவிருத்தியை (கையொழிந்திருக்கும் நிலையை) பிரயோஜனமாகக்கொண்ட இவ்வத்யவஸாயமுண்டாவதில்லை. இது விஷயத்தைக்குறித்து "உய்யக்கொண்டார் விஷயமாக உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்று லோகதேசிகன் அருளியதையும் இங்கு நோக்கத்தக்கது. அஃதாவது.—உய்யக்கொண்டார் என்பவர் ஒரு வித்வான்; இவர் தத்வத்தை நன்கறிந்தவர்; உபாயங்களை உபதேசிக்கப் புகுந்த சாஸ்திரங்களை ஆராய்ந்து அதன்படியே ஒழுகுமவராயிருந்தார்; இவரது நன்னிலை கண்ட உடையவர் திருவுள்ளமிரங்கியருளி, 'இவருக்கு நிவர்த்தி சாஸ்திரத்தில் அத்யவஸாயத்தை யுண்டு பண்ணி வைப்போம்' என்று அவருடைய சமயத்தை எதிர்பார்த்து 'எம்பெருமானையே உபாயமாகப்பற்றிப் பிறிதொரு ப்ரவிருத்தியின்றியிருப்பதே தக்கது' என்று அருளிச்செய்தார். இதுகேட்ட உய்யக்கொண்டார், 'தேவரீர் அருளிச்செய்த அர்த்தவிசேஷம் மிகவும் அழகாகவிருக்கிறது: ஆனால் அடியேனுக்கதில் ருசிபிறக்கவில்லை: என்செய்வேன்' என்றனர். அப்பொழுது எம்பெருமானார் 'நீர் வித்வானாயிருக்கின்றீராதலால் அர்த்தத்துக்கிசைந்தீர்; பகவத் கடாக்ஷமில்லாததினால் அவ்வர்த்தம் நெஞ்சிலூன்ற அதன்படி ஒழுகவேண்டுமென்பதில் ருசியுண்டாகவில்லை' என்று அருளிச்செய்தார் என்பதாம்.

* ஸத்வோத்ரிக்தரான எம்பெருமானார் அந்த வித்வானைக் கடாக்ஷித்து உபதேசிக்கும்போது அது பலியாதொழிவானேன்? பகவத் கடாக்ஷத்திலும் பாகவத கடாக்ஷம் சிறந்ததன்றோவெனில்; இவ்விஷயத்தில் எம்பெருமானார் திருவுள்ளம் ஒருவிதமாகும். அஃதாவது, இவ்வர்த்தத்தில் ருசி விசுவாசம் பிறந்து, அநுஷ்டானம் வரை நடந்து செல்ல அத்யவஸாயம் உண்டாவதெல்லாம் தன்னுடைய பாண்டித்யத்தாலல்ல; கடாக்ஷ விசேஷத்தாலாகுமென்பதை யாவருக்கும் புலப்படுத்தவேண்டுமென்பதற்காகக் 'கடா

* ஸத்வோத்ரிக்தர்--ஸத்வகுணத்தை யுண்டுபண்ணுகின்றவர்.



க்ஷிக்காமல் உபதேசிப்போம்' என்று கருதினாரென்பதாம். இதனை, பிராட்டியார் இராவணனை நோக்கி 'இவன் துர்ப்புத்தி நீங்கி உஜ்ஜீவிக்கக்கடவன்' என்று அநுக்ரஹிக்காமல் ஒரு காரியப் பாட்டால் "மித்ர மௌபயிகம் கர்த்தும்" என்று தொடங்கி உபதேசஞ்செய்தனள் என்பதனாலுமறியலாம். மேலும் இவ்விஷயம் பின்வரும் வியாஸத்தில் வெளியாகும்.

வேதார்த்த ஸாரங்களை உள்ளபடியுணர்ந்து பலருக்கும் தெளிவாய் உபதேசித்ததுவே காரணமாக வேதாந்தாசார்யரென்று பிருதுபெற்ற நிகமாந்த தேசிகன், † "உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மண முநேர் பவதா விதீர்ணம் । ச்ராவ்யம் வரம் தததுபந்த மதாவலிப்தே" என்று தம்முடைய நிலையை உறுதியாக அருளிச்செய்ததனால் இவர் எம்பெருமானையே உண்மையாகப் பற்றியவரென்பதும், சரணாகதி முதலிய உபாயாந்தரங்களிற் பற்றற்றவரென்பதும் வெளியாகும். இந்த நிஷ்டையையுடையவராகிய இவர் பிறருக்குபதேசிக்கும்போது சரணாகதியில் உபாயத்வத்தை ஏறிட்டுபதேசித்தார். இதனை ஆராய்ந்து பார்க்கும்போது எம்பெருமானே அடைதற்குரிய பலமாகவும், அதுக்குவேண்டிய உபாயமாகவும் உறுதிகொண்டு * திருஷ்டாதிருஷ்ட பலன்களை உத்தேசித்து அவற்றையடைதற்குரிய உபாயத்தில் நசையற்றுக் கையொழிந்திருக்கும் நிலைமை எவர்க்குமுண்டாவது அரிதாமென்று ‡ சரணாகதியை அதிகார கோடியிலே கொண்டு உபதேசித்தாரென்பதே வெளியாகும். இவ்வாறு கொள்ளாதபோது இவர் விப்ரலம்பகோடியிற் சேர்ந்தவர் (பிறரை வஞ்சிக்கப்புகுந்தவர்களின் கோஷ்டியைச் சார்ந்தவராவர்) என்று கருதும்படி நேரும். ஆகையால் எம்பெருமானை யொழிய வேறு பலங்களில் ஆசையொழித்து, அவனை யடையவேண்டி (ப்ரவிருத்தி வாஸனை மேலிட்டிருப்பதால்) உபாயாந்தரங்களில் ஆசை யதிகரித்து, அதிலும் கடினோபாயங்களில் முயல்வதற்குச் சக்தியற்றி

* திருஷ்டபலம்—இவ்வுலகில் அநுபவிக்கும் பிரயோஜனம்.

அதிருஷ்டபலம்—பரலோகத்தில் அநுபவிக்கும் பிரயோஜனம்.

† இந்த சுலோகம் நிகமாந்த தேசிகன் நம்பெருமானைநோக்கி அருளிச்செய்தது. இதன் பொருளாவது—அர்ஜுனனையும், விபீஷணாழ்வானையும் வியாஜமாகக்கொண்டு வெளியிட்டருளிய வார்த்தையை (என்னையே சரணமாகவடைவாய்; நான் உன்னை முக்தனாம்படி செய்கிறேன் என்று அர்ஜுனனை நோக்கியும், என்னைத் தோழமைகொள்ள வந்தவனை அஃதாவது சரணமடைய வந்தவனை நான் ஒருநாளும் விட்டுக் கொடேனென்று விபீஷணனை நோக்கியும் அருளிச்செய்த வார்த்தையைக்கொண்டு எம்பெருமானாருக்கு விசுவாசம் பிறக்கும்படிச்செய்து 'உம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகட்கும் மோக்ஷங்கொடுக்கிறோம்' என்று உறுதியாக அருளிச்செய்து, அவருக்குத் தேவரீர் கொடுத்த வரத்தைக்கேட்டு, அவருடைய ஸம்பந்த ஸம்பந்தங்கொண்டு களித்துத் திரிகிற அடியேன்மீது கிருபை செய்தருளவேண்டும் என்பதாம்.

‡ "ஸ்வர்க்கத்தில் இச்சையுடையவன் ஜ்யோதிஷ்டோம யாகத்தைச் செய்யக்கடவன்" என்பதில் ஸ்வர்க்க விஷய இச்சை ஜ்யோதிஷ்டோமத்திற்கு உபாயமாகமாட்டாது; ஸ்வர்க்க விஷயமான இச்சையுடையவன் அவ்வேள்வி செய்தற்கு அதிகாரியாவான். எனவே அந்த இச்சை, அவ்வேள்வி செய்தற்கு அதிகாரயோக்யதையையுண்டுபண்ணித் தருதற்குரியதாயிருக்குமென்று கொள்வதுபோல, சரணாகதியானது ஸர்வேச்வரனை வரித்தற்குபாயமாகமாட்டாது. சரணாகதிநிஷ்டையுடையவன் எம்பெருமானை யுபாயமாகக் கொள்வதற்கு அதிகாரியாவன். சரணாகதியானது எம்பெருமானை உபாயமாகவரிப்பதற்கு அதிகார யோக்யதையை உண்டுபண்ணித் தருவதற்குரியதாயிருக்குமென்று கொள்ளவேண்டும். அக்கருத்துடன் தேசிகன் உபதேசித்தருளினர்.

ருக்கும் அதிகாரிகளை நோக்கியே சரணாகதிக்கு உபாயத்வத்தை ஏறிட்டு அருளிச்செய்தாரென்றே கொள்ளவேண்டும்.

சரணாகதியில் உபாயத்வபுத்தி செய்யும் அதிகாரிகள் 'மோக்ஷமென்கிற புருஷார்த்தம் நமக்கே ஏற்பட்ட நன்மையாகும்; நம்முடைய நன்மைக்கு நாமே முயலவேண்டிய தவசியம்' என்ற ஊக்கமுடையவர்கள். அவராவார் எம்பெருமான் இரங்கியருள் செய்வதற்காக உபாயானுஷ்டானம் செய்பவர்.

சாஸ்திரங்களில் ஏற்பட்ட நித்ய கர்மங்கள் முழுமையும் எம்பெருமானுடைய பிரீதியை உத்தேசித்தே அநுஷ்டிக்கப்படுகின்றன. பாகவதம் மூன்றாவது ஸ்கந்தம் முப்பத்தொன்பதாவது அத்யாயத்தில் கபிலர் தேவஹூதிக்கு உபதேசிக்கும்போது பகவத் பக்தியுள்ள அதிகாரிகளில் அவரவர்களின் குணகுணங்கொண்டு பேதங்காட்டிச் செல்லும்போது பத்தாவது சுலோகத்தில் இவ்வதிகாரியை ஸாத்விக பக்தர்களில் மத்யமாதிகாரியாகக் காட்டியிருக்கிறது.

புத்திரனிடத்தில் பிதாவுக்குத் தன்னடையே பிரீதியுண்டாவதுபோல எம்பெருமானுக்குச் சேதனரிடத்துத் தன்னடையே பிரீதியுண்டாகும். பெரும்பாலும் எம்பெருமானுக்குச் சேதனர்களிடத்தில் பிரீதியுண்டாகாமைக்குச் சேதனர்கள் செய்கின்ற தீயவொழுக்கமே காரணமாகும். சொற்படி நடக்காத தீயவொழுக்கமுடைய புத்திரர்களிடத்தில் பிதாவுக்கு அன்பு உண்டாகாதன்றோ! சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்கள் எம்பெருமானுடைய ஆஜ்ஞாரூபங்களாதலால் நாம் அவற்றைக் கைங்கர்யமாகச் செய்யக் கடவோம்' என்று மனவுறுதிகொண்டு அநுஷ்டிப்பவர்களை ஸாத்விக பக்தர்களில் உத்தமாதிகாரியென்று குறிப்பிடப்பெற்றுளது. முன்னுரைக்கப் பெற்ற மத்யமாதிகாரிகளை நோக்கியே சரணாகதிக்கு உபாயத்வமுண்டென்று தேசிகன் அருளிச்செய்தாரென்று கொள்ளவேண்டும்.

பெரியவாச்சான்பிள்ளை "கல்லெடுத்து கல்மாரிகாத்தாய்" என்ற பாசுர வியாக்யானத்தில் 'அவ்வுபதேசம் நமக்காகவன்று' என்று உபதேசித்துள்ளார். இங்ஙனம் இவர் அருளிச்செய்த விஷயம் விரிவாக 'வைஷ்ணவ ஸித்தாந்த ஸாரத்தில்' எடுத்துரைக்கப்பட்டது.

சரணாகதி நிஷ்டையில் பூரணமான அத்யவஸாயம் உண்டாவது அருமையாம். இனி, இது முக்யமாவென்பதை விளக்குவதற்கு இதன் பெருமை எடுத்துரைக்கப் பெறும் :—

முன்பு குறிப்பிட்டபடி, உலகத்தில் சாதாரண தர்மாநுஷ்டானத்திலும் அத்யவஸாயம் திடமாகவுண்டானால் பலஸித்தி தாமதமின்றிக் கிடைப்பதும், அத்யவஸாயங் குறைந்தால் பலம் எளிதாயினும் ஸித்திப்பதற்குத் தாமதப்படுதலும், ஒரே தர்மத்தைப் பலர் அநுஷ்டிக்கப்புகுந்தவிடத்தில் அத்யவஸாய பேதத்திற்குத் தகுதியாகப் பலபேதமுண்டாவதும் காணலாம். மேலும் இவற்றைத் துருவன், விச்வாமித்திரன், திரௌபதீ, தமயந்தீ, ஸாவித்திரீ, ஏகபத்னீ என்ற இவர்களின் சரித்திரங்களாலும், அத்யவஸாயம், சரணாகதி நிஷ்டையிலிருக்கவேண்டிய முறையை ஜனககுல ஸௌந்தரியின் (சீதாபிராட்டியாரின்) அநுஷ்டானத்தாலும் எடுத்துரைத்து இவ்விஷயத்தைப் பூர்த்தி செய்கிறேன்.



துருவன் என்பவன் உத்தானபாதன் என்ற அரசனுடைய மூத்த மனைவியின் வயிற்றிற் பிறந்தவன். இவ்வரசனுக்கு இளைய மனைவியிடம் மிகுந்த விருப்பமுண்டு. அவள் வயிற்றிலும் ஒரு புதல்வன் பிறந்தான். அவன் பெயர் உத்தமனென்பது. ஒரு நாள் அரசன் மடியின்மீது உத்தமனிருப்பதைக்கண்ட துருவனும் அவன் மடியின் மீதமர்ந்தான். இதைக்கண்ட உத்தமனின் அன்னை பொறாமையுற்றுத் துருவனை நோக்கி, 'அடாபயலே! நீ என் வயிற்றிற் பிறக்கும் பாக்யமில்லாத பாபியன்றோ! அப்படியிருக்க நீ என்னருமைப்புதல்வன் உத்தமனுக்குச் சமமாக அரசன் மடியிலிருக்கின்றனையே; இவ்விருப்பு உனக்குத்தகுமோ' என்று செவிசுடும்படி யுரைத்தாள். துருவன் இந்தத் துன்புறுத்தும் மொழிகளைக்கேட்டு ஆற்றொணாத் துயரங்கொண்டு, காட்டையடைந்து ஆங்குள்ள பெரியாரிடத்தில் நிருபாதிக பிதாவான எம்பெருமானை ஆராதிக்கும் முறையினைக் கேட்டுத்தெரிந்து அரிய தவம் புரிந்தான். இவனுடைய சிறந்த தபஸுக்கு வியந்து ஸர்வேச்வரன் ப்ரத்யக்ஷமாகி, இதுவரையிலும் ஒருவரும் பெற்றிராததாய், நாட்டிற்குக் கண்காட்டியாய், பகலிரவுகளை நடத்திக்கொண்டு செல்கிற சூர்ய சந்திரன் முதலிய ஜ்யோதிச் சக்கரமியங்குதற்குக் காரணமாயிருக்கிற சிறந்த ஸ்தானத்தை யருளினான்.

துருவன் ஐந்தாவது வயதில் காடுசென்று அரியதவஞ்செய்து ஆறு மாதத்திற்குள் ஸர்வேச்வரனை ப்ரத்யக்ஷமாக்கிப் பெறுதற்கரிய பதவியைப் பெற்றதாகப் புராணங்களிற் சொல்லப்பட்டுள்ளது.

இது நிற்க; இந்நாளில் விசுவாமித்திரர் என்று கொண்டாடப்படுகிற மஹரிஷி என்பவர் முற்காலத்தில் அரசனாகவிருந்து ஆட்சிசெய்து கொண்டிருந்தபோது காட்டிற்கு வேட்டையாடச்சென்று வஸிஷ்டர் ஆசிரமம் சார்ந்தனர். அப்பொழுது வஸிஷ்டர் காமதேனுவுக்கு ஆணையிட அதுவும் விச்வாமித்திரரை விசேஷமாக ஆராதித்தது. அந்தக் காமதேனுவின் பெருமையையறிந்த விசுவாமித்திரர் அந்தக் காமதேனுவைத் தாமடைய இச்சைகொண்டு வஸிஷ்டரை வேண்டிநின்றும் படையுடனெதிர்த்தும் பயன் படாமை கண்டு, ப்ராஹ்மண்யமே உயர்ந்ததெனக்கருதி, அந்த ப்ராஹ்மண்யத்தையடையப் பேராசைகொண்டு நீண்டகாலம் தவம்செய்து தம் இஷ்டஸித்தி பெற்றதாகப் புராணங்கூறக் கேட்டுள்ளோம். இனி, துருவன் விசுவாமித்திரர் என்ற இவ்விருவரின் நிலைமையை ஆராய்வோம் :—

அறிவிலும் வயதிலும் சிறுவனாகிய துருவன் எவருமடையப்பெறாத அரிய பெரிய பலனை மிகக்குறைந்த காலத்திலடைந்தான். அறிவிலும் வயதிலும் அநுபவத்திலும் சிறந்த விசுவாமித்திரர் ஸர்வ ஸாதாரணமான ப்ராஹ்மண்யத்தைப் பெறுவதற்கு நீண்ட காலம் முயன்று பரிபவப்பட்டு மனக்கவலையுற்றுப் படாதபாடு பட்டார். இவ்விருவரில் எவ்வகையாலும் சிறியவனாகிய துருவன் அரிய பெரிய பலனைக் காலவிளம்பமின்றி எளிதிற் பெற்றதற்கும், எவ்வகையாலும் சிறந்தவராகிய விசுவாமித்திரர் ஸாதாரணமாகிய ஒரு பலனைக் கால விளம்பத்தோடு அரிதிற்பெற்றதற்கும் காரணம் யாதென ஆராயவேண்டுமாகில் உபாயாநுஷ்டானத்தில் இவ்விருவருக்குமுண்டாகிய அத்யவஸாயத்தின் தாரதம்யமே இவற்றிற்குக்காரணமாகுமென்பது விளங்கும்.

துருவனுடைய மனவுறுதி அவிசால்யம் (கலக்க அரிது). அவன் தவஞ்செய்கிற போது சிலநாள் வலது காலினாலும், சிலநாள் இடது காலினாலும் இரண்டு கட்டைவிரல்களினாலும் நின்று தவஞ்செய்தான். அப்பொழுது பூமி பாரந்தாங்க மாட்டாமல் ஆழ்ந்து நெளிந்து தத்தளித்ததாகச் சொல்லப்பட்டுளது. ஐந்து வயதுள்ள இச்சிறுவன்

கனத்தை பூமி தாங்காமைக்கு இவன் மனவுறுதியின் கனமன்றோ காரணமாக வேண்டும். இவன் தவம் புரிந்த சிலநாளில் தேவர்கள் நடுங்கினார்கள் ; இவனுடைய மனத்தின் உறுதியை ஒழிப்பதற்கு அவனது அன்னைவடிவைத்தாங்கி வந்து என் கண்ணே ! மணியே ! தெள்ளமுதே ! நீ மண்ணில் செம்பொடியாடி என் மார்பில் மன்னிடப்பெற்ற இந்நாளில் காட்டிலிருந்து கடுந்தவம் புரிவது தகுதியோவென அவன் மனமிரங்கும்படி கண்ணீர் விட்டுக்கதறி அழுது பார்த்தனர். மேலும் பேயுருக்கொண்டு பயமுறுத்தினர் இவர்கள் முயற்சி பயனற்றன. வெளியில் நடக்கும் விஷயங்களைத் தும் அவன் கண்ணிற்கும் நெஞ்சிற்கும் புலனாகவில்லை. நிமிர்ந்து மலர்ந்த தன் ஹ்ருதய கமலத்தில், ஊன்றியிட்ட அடியிணையும், கருத்து நெய்து மழைமுகில்போன்ற திருமேனியழகும், அவ்வழகு விளங்கத் திருவரை பூத்ததுபோலப் பொற்பட்டாடையும், திருமார்பில் திருவும், மறுவும், புன்முறுவலும், கரியவாகிப் புடைபரந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய தண்டாமரைக் கண்களும், கரிய திருக்குழலும், தாழ்ந்த திருமுகமும், கவித்தமுடியும் தாழ்ந்த மகர நெடுங்குழைக்காதுகளும், திவ்யாயுதங்களேந்திய வைத்தஞ்சலென்ற முறைகொண்டதொரு திருக்கையும் என்ற அவயவங்களோடு கூடிய எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹமே தியானத்திற்கு விஷமாயிருந்ததேயன்றிப் பிறிதொன்றுமில்லை.

விசுவாமித்திரருக்குத் துருவனிடத்திலுள்ள மனவுறுதி சிறிதேனுமில்லை. இவரைப் பலரும் பல படியாக ஏமாற்றினார்கள். இவருக்குக் காமக் குரோதங்களையுண்டாக்கி இவரது தவத்தை யழித்தார்கள். அக்காலத்திலே மேநகை வயிற்றில் சகுந்தலை பிறந்ததும், ரம்பையின் சாபமும், திரிசங்கு சுவர்க்கசேப விருத்தாந்தங்களும் நிகழ்ந்தன. ஆகையால் துருவனுடைய அத்யவஸாயத்துக்கும், விசுவாமித்திரருடைய அத்யவஸாயத்துக்கும் நெடுவாசியுண்டு. இதனால் அத்யவஸாயத்தின் வலிமையும், இஃதின்மையும் காரணமாகுமென்பது தெளிவாயிற்று.

இனி, ஒரு பலத்தைக்குறித்து ஒரு தர்மத்தை யநுஷ்டிக்கப் புகுந்தவர்களுக்குண்டான பிரயோஜனத்தின் தாரதம்யத்தில் அத்யவஸாயத்தின் பெருமையை விளக்கப் பதிவிரதைகளின் சரித்திரம் ஆராயப்படும்.

அருந்தவத்தினால் அனலிற் பிறந்து அருமையாக வளர்ந்த திரௌபதையின் பெருமையை நோக்குவோம். இவளுக்காகத் தனித்து ஐவரையும் மணக்கலாம்படி சாஸ்திரம் விதித்தது. இவள் அனலிற் பிறந்ததும் பெருமை விளக்கும். பர்த்தாவினுடைய அபிப்பிராயத்தைப் பின்பற்றி நடக்கவேண்டியதே எல்லாப் பதிவிரதைகட்கும் முக்ய தர்மமாயிருந்தாலும் ஐவருடைய அபிப்பிராயத்தை அநுஸரித்து நடக்கவேண்டிய அருமைப்பாடு இவளொருத்திக்கேயுளது. துருபதன் என்ற அரசன் பெருங்கூட்டத்தையுடையவன். அவனுக்கு அருமையாகப் பிறந்தவள். நாடாளும் மன்னர் ஐவருக்குப் பத்தினியாயிருந்து, அவர்கள் திக்விஜயம் செய்து ராஜஸூயஞ்செய்துகொள்ள அப்பெருமையெல்லாமடையப் பெற்றவள். துர்யோதனாதியர் பொய்ச்சூதில் தர்மபுத்திரரைச் செயித்து இவளையும் பந்தயமாக வைக்கச்செய்து வசமாக்கி, நாடெங்கும் கண்டதும் கேட்டதுமில்லாத முறையில் இவளைப் பரிபவப்படுத்த அத்துடன் தன் பர்த்தாக்களோடு காடுசென்று கஷ்டங்களெல்லாம் வஹித்தாள். மேலும் மறைந்து வசிக்க வேண்டிய காலத்தில் தன்னிற்குறைந்த தன்மையுடைய ஸ்த்ரீக்கு இழிதொழில் செய்து பின்பு கீசகன் காலினால் ஸபை நடுவே உதைக்கப்பட்டாள். இப்படி பர்த்தாக்களுடன்



தானுமிசைந்து பரிபவப்பட்டதெல்லாம் பாதிவ்ருத்ய தர்மம் பெரிதென்று துணிவு கொண்டு அவர்கள் அபிப்பிராயத்தைப் பின்பற்றிச் சென்ற முறையால் நேர்ந்தவையாகும்.

பர்த்தாக்கள் இந்திரப்ரஸ்தத்தில் தன்னைப் பெருமைப்பட வைத்ததும், பின்பு காட்டில் பலராலும் பரிபவப்படும்படி செய்ததும் இவளுக்கு ஒரே படியாயிருந்ததேயொழிய வேறில்லை. அதனாலடைந்த பெருமை உரைப்பதற்கு எளிதன்று. இவள் துர்யோதனாதியர்களால் பரிபவப்பட்ட காலத்தில் அவர்கள் விஷயமாக இவள் பிரதிஜ்ஞைசெய்து தன் கூந்தலை விரித்தனள். இங்ஙனம் விரித்த இவளுடைய பிரதிஜ்ஞையையும் நிறைவேற்றிக் குழலையுமுடிப்பிக்க வேதாந்த வேத்யமானதொரு பரதத்வம் இவளுக்குக் கையாளாய், இவளுக்காக அர்ஜுனனுக்குத் தூத்யஸாரத்யங்கள் செய்தும் 'உன்னுடைய மனோரதத்தை முடித்துவைக்கின்றேன் ; நீ நம்புவாய்' என்று உறுதிமொழி கூறியும், பகலையிரவாக்கியும் படாதபாடு பட்டதெல்லாம் உரைக்கலாகுமோ ?

இன்னும், விராடநகர ஸமீபத்தில் பாண்டவர்கள் விடுதி கொண்டிருந்த காலத்தில் கிருஷ்ணார்ஜுனர்கள் ஏகாந்தமாயிருந்த முறையை ஸஞ்சயன் கண்டு மயங்கியதாக ரிஷி கூறியிருக்கின்றார். அஃதாவது ஸத்யபாமை மடியில் கண்ணன் திருமுடியைச் சாய்த்து அர்ஜுனன் மடியில் திருவடிகளை நீட்டி வருடி விக்கவும், அர்ஜுனன் அடிகள், பக்கத்திலிருந்த பாஞ்சாலியின் மடியில் கிடக்கவும் ஸஞ்சயன்கண்டு, இஃதொரு மைத்திரி (சிநேகத்தன்மை) இருந்தபடி யென் ?' என்று வியப்புற்று, 'இனிக் கௌரவகுலம் வேரற்றது' என்று உறுதிகொண்டு த்ருதராஷ்டனிடம் சென்று அவன் நெஞ்சிடிந்துருகும்படி யுரைத்தானென்பதாம்.

இப்படி இந்நால்வரும் ஒரு படுக்கையிலிருக்க நேருவது நிகழத்தக்கதொன்றோ ! புண்யபாப கர்மங்களை அடியோடொழித்து விரஜையில் முழுகி விண்ணாட்டிற் சென்றபோது பர்யங்க வித்தையில் நேரக்கூடிய முறையை இது நினைப்பூட்டுகிறதல்லவா ?

" அஹோபாக்யம் அஹோபாக்யம் யந்மித்ரம் பரமாநந்தம் பூர்ணம் ப்ரம்ம ஸநாதநம் " என்று கொண்டாடும்படி பரதத்வத்தைத் தோழமை கொண்டமுறை த்ரௌபதிக்கு வாய்த்ததுபோல பிறர்க்கு வாய்க்கற்பாலதோ. ஸ்திரீகளுக்குண்டாகும் பெருமையெல்லாம் பாதிவ்ரத்ய தர்மத்தாலாகுமாகையிலே த்ரௌபதியின் பாதிவ்ரத்யமும், அவள் பெருமையும் வியக்கத்தக்கன.

இனி, தமயந்தியினுடைய நிலைமையை ஆராய்வோம். தமயந்தி என்பவள் விதர்ப்ப தேசாதிபதியாகிய பீமராஜன் புதல்வி. அவள் ஒருநாள் பூக்கொய்வதற்கு உத்யானவனஞ் சென்றபோது நிஷத தேசத்து மன்னனான நளனால் அனுப்பப்பட்ட சில அன்னங்கள் அவளுடன் வார்த்தையாடி நளனுடைய பெருமையைப் பேசக்கேட்டு, அவனிடத்திற் காதல் கொண்டிருந்தாள். அவள் கருத்தறிந்த பீமராஜன் அவளுக்கு ஸ்வயம்வர நாளிட்டான். இதனைக் கேள்வியுற்ற நளன் புறப்பட்டு வருகிறவழியில், தமயந்தியின் பெருமையையும், பேரழகையும் கேள்வியுற்று மணந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துடைய இந்திரன் யமன் அக்னி வருணன் என்ற இந்நால்வரும் சந்தித்தனர். இவர்கள் 'நளனைக்கொண்டே தமயந்தியை நமக்கிசையும்படி செய்யவேண்டும்' என்று கருதி நளனைப் பிறரறியாவண்ணம் தமயந்தியின் அந்தப்புரத்திற் கனுப்பினார்கள். நளன் தமயந்தியை அணுகி நின்று, 'நான் இப்பொழுது இந்திராதியர்க்குத் தூதாகவந்தேன் ; நீ அவர்களில் எவரையேனும் வரிப்பாய்' என்றுரையாடினான். அதற்கவள் 'உம்மை

யே விரும்பிய நெஞ்சுடைய நான் தேவர்களையேனும் ஒருபோதும் விரும்பேன்' என்று வெறுத்துக்கூறினாள். இதனை நளன் இந்திராதியரிடம் வந்தறிவித்தனன். இந்திராதியர் 'நளனுருக்கொண்டு தமயந்தியை ஏமாற்றிவிடவேண்டும்' என்று நளனுடைய வடிவைத்தாங்கிக்கொண்டு ஸ்வயம்வர மண்டபத்திற் புகுந்தனர். வரிக்க வந்த தமயந்தி ஐந்து நளன் நிற்கக்கண்டு கலக்கமுற்று 'நான் பாதிவ்ரத்ய தர்மத்தில் ஊற்றமுடையவளாயிருப்பது உண்மையானால் தேவர்கள் சூழ்ச்சியினின்றும் மீண்டு உண்மை நளன் என் கண்ணிற்குப் புலப்படவேண்டும்' என்று கூறினள். அப்பொழுது இந்திராதியர் தாம் கொண்ட எண்ணத்திற்குமாறாகத் தம்மை யறியாமல் பூமியிற் கால் படாமலும், கண்ணிமைபடாமலும் வாடப்பெறாத செவ்வியமாலையுடனும் நின்றனர். இவர்கள் நடுவில் நளன் பூமியிற்பாவிய கால்களும் இமைத்த கண்களும் சூடிவாடப்பெற்ற மாலையுமுடையனாய் நின்றான். அப்பொழுது தமயந்தி சந்தேகம் நீங்கப்பெற்று நளனை வரித்தாள்.

பின்னர் தமயந்தி நளனோடு நாட்டையடைந்து வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நளன் புஷ்கரனென்ற அரசனுடன் சூதாடித் தோல்வியுற்று நாட்டைத் துறந்து காட்டையணுகியபோது தமயந்தியும் தொடர்ந்து வந்தாள்., பின்பு நளனுடைய வஞ்சனையால் தமயந்தி நளனை விட்டுப் பிரிந்து வருத்தமுற்று அலைந்து திரிந்துகொண்டிருக்கிற காலத்தில் ஒரு வேடன் இவள் மீது காமுற்று வந்தனன். அவனைத் தன் பாதிவ்ரத்யத்தால் சபித்து நீறாக்கினாள்.

அதன்பிறகு அவ்வழியிற்சென்ற சில ஜனங்களைத் துணையாகக் கொண்டு ஓரிடத்தைச் சார்ந்து அவ்விடத்தில் இராப்பொழுதில் அவர்களோடு நித்திரை செய்தனள். அதுசமயம் சில காட்டானைகள் திரண்டு வந்து துயின்று கொண்டிருந்த கூட்டத்தைக் கால்களால் நசுக்கிக் கொன்றன. தமயந்தியின் பக்கத்தில் வருதற்கு அஞ்சியோடின. இந்தச் சம்பவத்தைக்கண்ட தமயந்தி ஒருவகை யால் தன் தகப்பன் நாட்டையடைந்தனள்.

இவள் இவ்வாறிருக்க நளன் கார்க்கோடகன் என்னும் பாம்பின் விஷத்தினால் தன் வடிவம் மாறினதுவே காரணமாகத் தன்னைப் பிறரறியாமல் அயோத்திக் கரசனாகிய ருதுபர்ணனிடம் சாரதியாக அமர்ந்திருந்தனன். இவன் இங்ஙனமிருப்பதைத் தமயந்தி ஒரு வகையாலறிந்து அவனை யடைவதற்காக ருதுபர்ணனிடம் செல்லுமாறு ஒரு பிராம்மணனையனுப்பினாள். அவன் ருதுபர்ணனை நோக்கி 'காட்டில் நளனைவிட்டுப் பிரிந்த தமயந்தி தன் தந்தையின் வீட்டை யடைந்து பெரியாரது அநுக்ரஹம் பெற்று மறுமுறையும் ஸ்வயம் வரத்தை விரும்பினாள்; நாளையதினமே ஸ்வயம்வரம் நடைபெறும்' என்றுரைத்தனன். இதனைக் கேட்ட ருதுபர்ணன் 'நெடுந்தூரமுள்ள விதர்ப்பதேசத்தை ஒரு தினத்திற் சென்றடைவதெப்படி' என்று திகைப்புற்றனன். இக்குறிப்பினையறிந்த நளன் 'இது தமயந்தி நம்மையடைதற்குச்செய்த சூழ்ச்சியாகும்' என்று தனக்குள் கருதி அரசனைநோக்கி 'அஞ்சவேண்டாம் ஒரு தினத்தில் விதர்ப்ப தேசங் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன், தேரில் ஆரோகணிப்பீர்' என்று ருதுபர்ணனை யழைத்துக்கொண்டு விதர்ப்ப நாட்டை யடைகின்றபோது ரதத்தின் ஆரவாரத்தைக்கேட்டுத் தமயந்தி தன்னாயகனே வருகின்றான் என்று நிச்சயித்தனள். ருதுபர்ணன் விதர்ப்பதேசத்தில் ஸ்வயம் வரத்திற்குரிய குறிகளொன்றும் நிகழாதிருப்பதைக் கண்டு மயங்கினான். நளன் தன்னுரு மாறியிருப்பதைத் தமயந்தி சில சூழ்ச்சிகளாலறிய, நளனும் தன்னுண்மை வடிவைப்பெற இருவருங்கூடித் தாய்நாட்டை யடைந்து வாழ்ந்திருந்தார்களென்பது இச்சரித்திரத்தின் ஸாரம்.



இனி, திரௌபதிக்கும், தமயந்திக்குமுள்ள தாரதம்யம் ஆராயலாகும். முன்பு தமயந்தியானவள் 'எனக்குப் பாதிவ்ரத்யத்தில் ஊக்கமிருப்பது உண்மையானால் நளனுக்கும் தேவர்கட்குமுள்ள வாசி தெரியவேண்டும்' என்று சபதம் செய்த காலத்தில், இவளை ஏமாற்றி யடையவேண்டுமென்ற எண்ணங்கொண்ட தேவர்களும் தம்மைத் தாமே இவ்வாறிருக்கிறோம் என்றறியாத நிலைமையில் இவளுக்கு அவர்கள் இன்னார்களென்று தெரிந்து கொள்ளும் நிலை நேர்ந்தது. மேலும் காட்டில் இவள் தனியிடத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது இவள் மீது துர்ப்புத்தி கொண்ட வேடன் சாம்பலானான். இவளுடன் கூடி நின்ற கூட்டத்தை அழித்து காட்டானைகள் இவளைக்கண்டு நடுங்கி ஓடின. இப்படி இவளுக்கு நேர்ந்த ஆபத்துக்காலங்களில் இவளைக் காப்பாற்றியது பாதிவ்ரத்யமேயாம்.

திரௌபதிக்குத் தமயந்தியைக் காட்டிலும் ஆபத்து விஞ்சியிருக்க அவ்வாபத்துக்களில் அப்படிப்பட்ட ரக்ஷை நேரவில்லை. துச்சாஸனன் அநீதியாக ரஜஸ்வலையாயிருந்த இவளை மயிர் பிடித்திழுத்து வீதியின் வழியாகக் கொணர்ந்து ஸபையில் நிறுத்தி வஸ்திராபஹரணஞ் செய்தகாலத்தில் இவள் வாய்விட்டலறித் தன்னாயர்களும் பல பெரியார்களும் பார்த்திருக்கப் பரிபவப்பட்டாள். தன்னுடன் தொடர்ந்து வந்த வேடனைத் தமயந்தி சபித்ததுபோலத் திரௌபதி துச்சாஸனைச் சபிக்காதொழிந்தமைக்குக் காரணம் ஆராயவேண்டும். மைத்துனன் என்று மயங்கினாளென்றும் மாமனாருக்குப் பயந்து வாளாவிருந்தாளென்றுஞ் சொல்ல வொண்ணாது. தன் தவ நிலைக்குக் குறைவுண்டாகுமென்று கூசினாளென்று சொல்வதற்கு மிடமில்லை. "பிராட்டி ஸ்வசக்தியைவிட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்" என்று லோகதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திக்கு வியாக்யானஞ்செய்தருளிய மணவாளமாமுனிகள் பிராட்டி ஸ்வரூப ஜ்ஞாந பூர்த்தியுள்ளவளாகையாலே ராவணனை "பஸ்மீபவ" என்று சொல்லி அவனைச் சாம்பலாக்கச்செய்ய வல்ல சக்தியிருக்கவும் இதைவிட்டுத் துன்பங்களையநுபவித்தாள். திரௌபதிக்கு அவ்வளவு சக்தியில்லாமையாலே மஹாஸபையில் வஸ்திராபஹாரஞ்செய்கின்றபோது லஜ்ஜையை விட்டாள் என்ற கருத்துப்பட அருளிச்செய்தார். இத்தால் திரௌபதிக்குச் சக்தியிருக்குமாகில் துச்சாஸனனை அவசியம் சபித்திருப்பாள். அஃதில்லாமையாலே சும்மாவிருந்தாளென்றே கொள்ளவேண்டும். இத்தால் தமயந்திக்குப் பாதிவ்ரத்யத்தில் அத்யவஸாயம் அதிகரித்திருந்ததெனவும், திரௌபதிக்கு அவ்வளவில்லை யெனவும் தெளிவாகின்றன.

(இன்னும் வரும்.)

---

# ஸ்ரீ தேசிகன் வைபவ ப்ரகாசிகை.

[ஸ்ரீ. உ.வே. வித்வான் திருமங்கலம் நரஸிம்மாசார்யர்.]

---

இந்த தீபிகை மூலமாய் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடைய வைபவத்தை ப்ரசுரம் செய்ய வேணுமென்று உத்தேசித்து, அது சோளஸிம்ஹபுரம் உபய வேதாந்த ப்ரவர்த்தகரான மஹாசார்யரென்று பிருது பெற்ற ஸ்ரீதொட்டயாசார்யராலே வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகை, "வேதாந்த தேசிக விம்சதி" முதலான கிரந்தங்களினால் விசேஷித்து வெளிப் படுத்தப் பட்டிருப்

பதால், முதலில் அந்த தொட்டையா சார்யருடைய வை஭வத்தை சுருக்கமாக வெளியிட்டு, பிறகு அந்த கிருந்தங்கள் மூலமாய் ஸ்ரீ தேசிகன் வைபவம், வெளியிடப்படுகிறது. அது பண்டிதர்களுக்கு விசதமாய் இருந்த போதிலும் மிதக்ஞர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று இந்த ப்ரயத்தனம் செய்யப்படுகின்றது.

ஸ்ரீ தொட்டையாசார்யர் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குள் தேஶிகரு விஷயத்தில் ப்ரக்யாத ப்ரதிபத்தியுள்ளவராகையால் தேஶிகரு ஸாதித்த க்ருந்தங்களை ஆமூலாக்ரம் பரிசீலனை பண்ணினவராக இருந்தார். அந்த காலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களில் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் முதலான மஹாசாரியர்களுடைய விசேஷ கிரந்தங்களை பரிசீலனம் செய்தவர்.

ஒரு காலத்தில் காஞ்சீபுரமென்கிற பெருமாள் கோவிலில் நவராத்ரத்தில் தாயாரும் பெருமாளும் நூத்துக்கால் மண்டபத்தில் கொலுவை அலங்கரிக்கும் போது தாஸிகளைக் கொண்டு பிரதிதினம் விசேஷமாய் ஒரு சரித்திராபினயம் நடத்துவதுண்டு. ஒரு சமயத்தில் தேஶிகன் அநுக்ரஹித்த "ஸங்கல்ப ஸூர்யோதய" நாடகத்தை அபிநயித்து அக்காலத்தில் அத்வைத ஸித்தாந்தத்தில் சிறந்த வியாபகராய் இருந்த ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் வேஷத்தை ஒருவருக்கு போட்டு வைத்து உடையவர் வேஷமும் ஒருவருக்கு போட்டு வைத்து தேஶிகரு வேஷமும் மற்றொருவர் எடுத்துக் கொண்டார். அக்காலத்தில் இதை அப்பய்ய தீக்ஷிதரும் ஸாக்ஷாத்தாய் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர் முன்னிலையில் தேசிகன் வேஷம் போட்டவர் உடையவர் எதிரில் "யதீஶ்வர ஸரஸ்வதீ ஸுரபிதாஶயாநாம் ஸதாம் । வஹாமி சரணாம்புஜம் ப்ரணதிஶாலிநா மௌலிநா" என்கிற அர்த்த ஶ்லோகத்தினால் உடையவருடைய ஸித்தாந்தத்தை பஹுமானித்தார்.

அப்பொழுது தீக்ஷிதர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை கண்டனம் பண்ண வேண்டுமென்ற அபிப்பிராயம் கொண்டு "விஶிஷ்டாத்வைதவாதம் ஜயாமி" என்று ப்ரதிக்ஞைசெய்து விசிஷ்டாத்வைதிகளை தன்னோடு வாதத்துக்கு கூப்பிடும்போது அவரோடே வாதிக்கக் தக்கவர் தொட்டையாசார்யர் தான் என்று அவரை வரவழைத்து இரண்டு பேர்களையும் வாதிக்கச் சொல்ல அவர்கள் இருவரும் பதினெட்டு நாள் வரையிட்டுக் கொண்டு வாதம் செய்யத் தொடங்கினார்கள். இப்படிக்கு இருவரும் மத்யஸ்தர்கள் முன்னிலையில் வாதம் செய்யும் பொழுது தினே தினே அப்பய்ய தீக்ஷிதருடைய கக்ஷியே மென்மேலும் வலுத்து வந்தது. தொட்டையாசார்யர் ஸமாதானம் சொல்ல முடியாமல் சிந்தாக்ராந்தராய் இருந்து கொண்டிருந்தார். இப்படி இருக்கையில் பதினேழு நாள் ஆய்விட்டது. இன்னம் ஒரு நாள் மிகுதியாய் இருந்தது. அப்பொழுது தொட்டையாசார்யராலே நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் தழைக்க வேணும் என்று எண்ணி இருந்த ஸ்வாமிகளும் இவரால் நமது ஸித்தாந்தம் விழுந்து போகும் போல் இருக்கிறதென்று தபிக்க அன்றைய தினம் ராத்திரி அந்த தொட்டையாசார்யரும் "நம்முடைய ஸித்தாந்தம் நாளை பொழுது விடிந்



தால் அபஜெயத்தை அடையும் போல் இருக்கின்றதே. இவர் சொல்லும் ஆக்ஷேபங்களுக்கு நிகமாந்த மஹா தேஶிகன்தான் ஸமாதானம் சொல்ல வேண்டும்." என்று தேசிகனை தியானித்துக் கொண்டு படுத்துக் கொண்டார். அவருடைய தியானத்தினாலே திரு உள்ளம் குளிர்ந்து தேசிகன் பிராம்ம முஹூர்த்தத்தில் அவருக்கு ஸ்வப்னத்தில் ஸேவை ஸாதித்து "ஶததூஷணி" என்று நாம் செய்த க்ரந்தம் ஒன்று உண்டு. அந்த க்ரந்தம் இன்னாரிடத்தில் இருக்கிறது. அதை எடுத்துப் பார்த்தால் இந்த ஆக்ஷேபங்களுக்கெல்லாம் கண்டனம் ஸுலபமாய்ச் சொல்லி விடலாம்." என்று ஸாதிக்க இவரும் விழித்துக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் தக்ஷணமே அந்த ஸ்வாமி திருமாளிகைக்குப் போய் "அந்த க்ரந்தம் உம்மிடத்தில் இருக்கிறதா" என்று கேட்க அந்த ஸ்வாமியும் மிக ஆதரத்துடன் அந்த க்ரந்தத்தை கொடுக்க தக்ஷணமே அந்த புடங்களை யெல்லாம் பார்த்து ஸமாதானங்களை ஹ்ருதம் பண்ணிக் கொண்டு தக்ஷணம் அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தீக்ஷிதர் வருவதற்கு முன்னமே அந்த வாத ஸ்தானத்தில் ஸித்தமாய் எழுந்தருளி இருந்தார். மத்தியஸ்தர்களும் ஸாக்ஷிகளும் முன்னாடி வந்திருக்க தொட்டையாசாரியர் அவருடைய ஆக்ஷேபங்களை வெகு சுலபமாய் கண்டித்து விட்டு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலை நாட்டினார். இந்த விஷயம் நடந்த பிறகும் கூட தீக்ஷிதர் ஜகத்காரண வாசகமான நாராயண ஶப்தத்தை ஶிவபரமாக நிர்வசனம் பண்ண ப்ரயத்தினிக்க ணத்வம் பாதிக்கிறதென்று மந்தோத்ஸாகராய் விட்டார். அது அப்படி இருக்க தொட்டையாசார்யருக்கு அது முதல் தேசிகனிடத்தில் ப்ரதிபத்தி விசேஷமாய் தலையெடுத்து அவர் ஸாதித்த க்ரந்த கோஶங்களிலேயே மேன்மேலும் ஊக்கங்கொண்டு தேசிக விக்ரஹாராதனம் இல்லாமல் தீர்த்த பானம் கூட பண்ணுகிறதில்லை என்று ஸங்கல்பித்துக் கொண்டு அதே சததூஷிணிக்கு கண்டநமாய் அத்வைதிகளால் ஏற்பட்ட "அத்வைத தீபம்" என்ற க்ரந்தத்துக்கு கண்டநார்த்தமாக ஶததூஷணிக்கு "சண்டமாருதம்" என்கிற வியாக்யானத்தைச் செய்தருளினார். தேஶிகனுடைய வைபவங்களை "நிகமாந்த தேஶிக வைபவ ப்ரகாசிகா, ஶுத்தஸத்வ விம்ஶதி:" இது முதலான க்ரந்தங்கள் மூலம் விளங்கச் செய்தார். ஶததூஷணிக்கு இன்றும் "ஶ்ரீ வரஸிம்ஹராஜீயம்" முதலான வ்யாக்யானங்கள் இருந்த போதிலும் இந்த "சண்டமாருதம்" தான் விஸ்த்ருதமான ஒவ்வொரு விஷயத்துக்கும் தக்க பரிஷ்காரத்தோடு கூடிய சிறந்த வியாக்யானமாகும். மேலும் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்த ஸப்ததி ரத்னமாலிகா" நைநாராசார்யர் அருளிச் செய்த "வேதாந்த தேசிக திநசர்யா" பாவஸ்துவேதாந்தாசார்யர் அருளிச் செய்த 'ஆசார்யசம்பு' இத்யாதி க்ரந்தங்களினால் தேசிகனுடைய வை஭வம்ப்ரசாரம் செய்யப்பட்ட போதிலும் அந்த "வை஭வ ப்ரகாஶிகா" க்ரந்தத்தினால் எப்படி தேஶிகனுடைய வை஭வங்கள் ஆநுபூர்வையாய் விளங்குகிறதோ அப்படி மற்ற க்ரந்தங்களினால் விளங்கவில்லை. அந்த வை஭வப்ரகாசிகையின் விஷயத்தை ஸங்கிரஹமாய் அந்த [illegible] களுடன் ப்ரசுரம் செய்கிறோம்.



188800.

வாதூல ஶ்ரீநிவாஸார்ய தநயம் விநயோஜ்ஜ்வலம் ।
ப்ரஜ்ஞாநிதிம் ப்ரபத்யேஹம் ஶ்ரீநிவாஸமஹாகுரும் ॥
ஶ்ரீநிவாஸமஹார்யாத்து ப்ராப்தவேதாந்த ஸம்பதம் ।
ஶ்ரீக்ருஷ்ணார்ய தயாபாத்ரம் ஶ்ரீநிவாஸகுரும் பஜே ॥

மேற் சொன்ன இந்த இரண்டு ச்லோகங்களும் தொட்டயசார்யருடைய தனியன்கள்.

கவிவாதி ஶிரோரத்நம் கல்யாணகுணபூஷணம் ॥
விஶ்வாமித்ராந்வயாஸ்பீதம் வேதாந்தகுருமாஶ்ரயே ॥

விஶ்வாமித்ர கோத்ரத்தில் அவதரித்தவராயும் கவிதார்க்கிக ஸிம்ஹம் என்று பிருது பெற்றவராயும் ஸமஸ்த கல்யாண குணங்களை பூஷணமாயுடைத்தானவராயும் இருக்கின்ற ஸ்ரீமத்வேதாந்த தேசிகனை சரணமடைகிறேன்.

வேங்கடேஶஸ்ய ஸங்கல்பாத் விஶ்வாமித்ரகுலோத்பவே ।
கண்டாவதீர்ணோ யஸ்ஸோऽபூத் தம் தேஶிககுரும் பஜே ॥

"கலௌ வேங்கட நாயக:" என்கிற பிரமாண ப்ரகாரம் இந்த கலியில் ப்ரஜா ஸம்ரக்ஷணம் திருவேங்கட முடையானைச் சார்ந்த தாகையால் உடையவருடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தமாகிற பயிர் தகுந்த வேலி யில்லாமையால் அழிந்து விடுமென்று திரு உள்ளம் பற்றி அதற்கு வேலி போடுவதற்காக தம்முடைய கண்டாம்சமாக நிகமாந்த மஹா தேசிகனை அவதரிப்பித்தாரென்று தாத்பர்யம். கண்டாநாதம் ப்ரணவ ரூபமாய் பூதப்ரேதாதிகளை வெருட்ட வல்லதாகையால் அந்த ரூபமாய் அவதரிப்பித்தாரென்பது தாத்பரியம்

திருமலை திருவேங்கட முடையானுடைய ஸங்கல்பத்தால் விச்வாமித்ர வம்சத்தில் அவருடைய சிறிய திவ்ய கண்டை எந்த வேதாந்த தேஶிக ரூபமாய் அவதரித்ததோ அந்த தேஶிகனை ஆச்ரயிக்கிறேன்.

காஞ்ச்யாம் நபஸ்யஶ்ரோணாயாம் அநந்தார்யகுரோஸ்ஸுத: ।
ஜாதோ யோ ஜநபாக்யேந ஶ்ரீமந்தம் தமஹம் பஜே ॥

ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் புரட்டாசி மாஸத்தில் திருவோண நக்ஷத்திரத்தில் ஸமஸ்த ஜனங்களுடைய பாக்யத்தாலே அநந்த ஸூரிக்குத் திருக்குமாரராய் எவர் அவதரித்தாரோ அந்த ஸ்ரீமானான தேஶிகனை நான் ஶரணமடைகிறேன்.

தோதாரம்மன், அனந்த ஸூரி என்கிற தம்பதிகள் ஸாத்விக ஶிரோமணிகளாகையால் தேசிகனுக்கு மாதாபிதாக்களாய் இருக்கத்தகுந்தவர்களென்று அவர்களுக்கு திருக்குமாரராக இவரை அவதரிப்பித்ததற்கு தாத்பர்யம். கௌஸல்யையினுடைய திருவயிற்றில் சக்கிரவர்த்தி திருமகன் 12 மாதம் வஸித்தது போல் தேசிகன் தோதாரம்மன் திருவயற்றில் 12 வருஷம் இருந்ததாய் ஐதிஹ்[illegible]லும் தேசிகனுடைய அவதார தினம் தம்முடைய தீர்த்த தினமாக இருக்க வேண்டுமென்ற தாத்பர்யத்தால் புரட்டாசி சிரவணத்தில் அவதரிப்பித்தார்.



ஜாதகர்மாதிகம் ஸர்வம் விதாயஸ்யாகரோத்குரு: ।
தம் வேங்கடேஶமநிஶம் தோதாரம்பாஸுதம் பஜே ॥

எந்த தேசிகனுக்கு, திருத்தகப்பனாராகிய அனந்த ஸூரி ஜாதகர்ம நாமகரணாதி ஸம்ஸ்காரங்களைச் செய்தாரோ, தோதாரம்மனுடைய திருக்குமாரனாகிய அந்த தேசிகனை இடைவிடாமல் பஜனம் பண்ணுகிறேன்.

சங்க்ரமம் பவஸஞ்சார ஶாந்தயே விபுராயிவ: ।
பத்ப்யாம் ஆசரயோஹ்யேதாம் தம் வந்தே வேங்கடாயிவம் ॥

நம்முடைய ஸம்ஸார ஸஞ்சாரத்தை நிவிர்த்தி செய்வதற்காக எந்த விபு இப்பூமியில் திருவடிகளால் ஸஞ்சரித்தாரோ அப்பேற்கொத்த தேசிகனை வந்தனம் செய்கிறேன்.

த்ருதீயாப்தே குரோர்யஸ்ய சௌளகர்மாகரோத் பிதா ।
புண்டரீகாக்ஷபௌத்ரம் தம் புருஷஶ்ரேஷ்டமாஶ்ரயே ॥

எந்த தேசிகனுக்கு தகப்பனர் 3வது வயதில் சௌளகர்மாவை நடத்தினரோ புண்டரீகாக்ஷருடைய திருப்பேரனும் மேன்மையான ஜென்ம முள்ளவருமான அந்த தேசிகனை ஆச்ரயிக்கிறேன்.

புண்டரீகாக்ஷ தீக்ஷிதர் ஸோமயாஜி யாகையால் அவரை எடுத்ததற்கு தாத்பர்யம் இந்த தேசிகனுடைய திருவம்சப்பிரபாவத்தைக் காண்பிப்பதற்காக.

அக்ஷராணி ததஸ்ஸர்வாண்யாசார்யாத் ஜக்ருஹே ச ய: ।
யஸ்தம் வேங்கடநாதார்யம் வந்தே தீமதாம் வரம் ॥

பிறகு எந்த தேசிகன் ஆசார்யனிடத்திலிருந்து எல்லா அக்ஷரங்களையும் க்ரஹித்தாரோ அப்பேற்கொத்த புத்திமான்களுக்குள்ளே ச்ரேஷ்டரான தேசிகனை ஸேவிக்கின்றேன்.

அநந்தார்ய குருர்யஸ்ய பிதா நந்தகுணோஜ்ஜ்வல: ।
ப்ரஹ்மோபதேஶம் அகரோத் தம் பஜே ப்ரஹ்மவித்தமம் ॥

எந்த தேசிகனுக்கு திருத்தகப்பனாகிய ஸமஸ்தமான ஆத்ம குணங்களினால் ப்ரகாசித்துக் கொண்டிருந்த அநந்த ஸூரி ப்ரஹ்மோபதேசத்தை (அதாவது உபநயந ஸம்ஸ்காரத்தை) செய்தாரோ அந்த ப்ரஹ்ம வித்தமரான தேசிகனை பஜனம் செய்கிறேன்.

மாதுலாத் விஶ்ருதார்யாத் தீமாந் ஸம்க்ருஹீத்ய ய: ।
புநருச்சாரணாபேக்ஷா ரஹிதம் தம் குரும் பஜே ॥

எந்த புத்திமானான தேசிகன் தன்னுடைய மாதுலராகிய அப்புள்ளாரிடத்திலிருந்து ஸமஸ்த வேதங்களையும் புநருச்சாரணாபேக்ஷை யில்லாதவராய் க்ரஹித்தாரோ அந்த தேசிகனை பஜனம் செய்கிறேன்.

"புத்ராநுத்பாத்ய ஸம்ஸ்க்ருத்ய வ்ருத்திம் தேஷாம் ப்ரகல்பயேத்" என்கிற மனு விதிப்ரகாரம் கர்ப்பாதானாதி, உபநயனாந்த ஸம்ஸ்காரங்களைச்

செய்ய பிதாவுக்கே முக்கியாதிகார மாகையால் அவைகளை பிதாவினிடத்திலிருந்தே பெற்றுக் கொண்டு பிறகு வேதவேதாங்காத்யயனத்திற்கு மாதுலரை ஆச்ரயித்தது இங்குதாத்பர்யம்.

ஶாஸ்த்ரீய க்ருத்யம் ஶாஸ்த்ரார்த்தம் தாத்ருஶ்லக்ஷண ஸம்யுதாம் ।
உபயேமே விதாநேந யோ மாந்யம் ஹம் ஆச்ரயே ॥

எந்த தேசிகன் ஸர்வ ஶக்தியுள்ள நல்ல ஆசார முள்ள ஸமானமான லக்ஷணங்களை யுடைய ஓர் கன்னிகையை சாஸ்த்ர விதிப் பிரகாரம் விவாஹித்தாரோ அந்த தேசிகனை நான் பஜநஞ் செய்கிறேன்.

இதனால் "தர்மார்த்தம், பிரஜார்த்தம் ஹோமார்த்தம்" என்று 3 காரணத்தால் விவாஹம் உண்டேயாகிலும் அதில் "ஹோமார்த்தம்" காம்யமாகையாலும் கலிகாலத்துக்கு தகாத தாகையாலும் அதை வர்ஜித்தாலும் தர்மப்ரஜார்த்தம் விவாஹம் ப்ரவ்ருத்தி தர்ம நிஷ்டனுக்கு ஶாஸ்திரீயமே யாகிலும் தேசிகநு நிவிர்த்தி தர்ம நிஷ்டராகையால் தர்மார்த்தமாக விவாஹித்தபடி. அப்படி நிவிர்த்தி தர்மநிஷ்டன விவாஹம் செய்ய வேண்டியது அநாவஶ்யகமான போதிலும் க்ருஹஸ்தாச்ரமம் ஸர்வோபகாரகமானதால் அதிலேயே திருவுள்ளம் பற்றின படி.

மீமாம்ஸா தர்க்கஶப்தாதி ஶாஸ்த்ராணி விம்ஶதாப்தகாத் ।
ஆவாப்ய விம்ஶத்யப்தேப்யஸ் ததஸ்ஸமாஶ்ரயே ॥

எந்த தேசிகன் பூர்வ மீமாம்ஸா உத்தர மீமாம்ஸா தர்க்க சாஸ்திரம் ஶப்த சாஸ்திரம் இது முதலான சாஸ்திரங்களை 20 வயதுக்குள் தன் மாமா விடத்திலிருந்து கிரஹித்தாரோ ஸமஸ்த வித்தைகளுக்கும் நிதியான அந்த தேசிகனை ஆச்ரயிக்கிறேன்.

ஸமஸ்தவித்தைகளையும் தன்னுடைய மஹிமையினால் தாமே அறிய வல்லவராய் இருக்கச் செய்தேயும் ஆசார்ய மூலமாக வித்தைகளை க்ரஹிக்க வேண்டுமென்ற ஶாஸ்திரார்த்தத்தை அநுஷ்டித்தபடி.

ஶ்ருத்வா ராமாநுஜ தேஶிகேந்த்ராத் வேதாந்த யுக்மம் விஹாய: ।
உத்தம மார்க்த தவ ஸ்தாத் ஸமாஶ்ரயே வேங்கடதேஶிகேந்த்ரம் ॥

வியாபகரான எந்த தேசிகன் கிடாம்பி ராமாநுஜாசாரிய ரிடத்திலிருந்து உபய வேதாந்தங்களையும் க்ரஹித்து கருட மந்திரத்தையும் அவரிடத்திலிருந்தே பெற்றுக் கொண்டாரோ அந்த வேங்கட தேசிகனை ஆச்ரயிக்கிறேன்.

இந்த வேதாந்தார்த்தங்களையும் இதர ஶாஸ்த்ரார்த்தங்களையும் அப்புள்ளாரிடத்திலிருந்து ஹித்ததற்கு காரணம் 5 வது வயதில் அம்மாளுடைய காலக்ஷேப கோஷ்டியை தண்டம் ஸமர்ப்பித்த போது அம்மாள் தேஶிகனுடைய அவதார மஹிமையை வெளிப்படுத்தி ஆசீர்வதித்த காலத்தில் அப்புள்ளாருக்கு "எனக்கு இவனுக்கு காலக்ஷேபம் சொல்லும்படியான அவஸரம் வார்த்தக மூலமாய் துர்லபமாகையால் நீயே எல்லாவற்றையும் உபதேசித்து இவனை விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது என்று அம்மாளுடைய நியமனம்.



அப்புள்ளார் கருட மந்த்ரோபதேசம் செய்ததற்குக் காரணம். இதன் மூலமாய் தேசிகனுக்கு அநவதிகமான அதிசயம் உண்டாக வேண்டுமென்று தாத்பர்யம்.

காஞ்ச்யா விநிஷ்க்ரம்ய ததோஹீந்த்ர ஸம்ப்ராப்ய நாமேந்த்ர பாரம்மந்த்ரம் :
யத்ராயநமந்த்ரஜபோ வஸ தஸ்மிம்ஸ்தம் வேங்கடார்யம் மந்த்ராசார்யமாஶ்ரயே: ॥

பிறகு எந்த மஹாத்மாவான தேசிகன் காஞ்சியிலிருந்து வெளிப்பட்டு திருவஹீந்த்ர புரத்துக் கெழுந்தருளி அந்த திருவஹீந்த்ர புரத்தில் (ஒஷதிமலையில் ந்ருஸிம்மன் ஸந்நிதியில் அந்த மந்த்ர மந்த்ர ஜபத்தாலே) மந்த்ரத்தை த்யானம் செய்து கொண்டு வஸித்தாரோ அந்த வேதாந்த தேசிகனை ஆச்ரயிக்கிறோம்.

அந்த ஒஷதிகிரியில் ஜபத்துக்காக தேசிகன் எழுந்தருளினதற்குத் தாத்பர்யம் பகவத் ஸாந்நித்யத்துடன் நிரம்ப விவிக்தமான ஸ்தாநம் என்பதே.

ப்ரீதேந ஸத்ரமந்த்ரேண தேந யஸ்மை ஹயவக்த்ர மந்த்ர: ।
தம் ஹ்ருத்வைராக்ய மஹாவைபவநம் ஸ்ரீ தேஶிகேந்த்ரம் ஸேவ்ய ஆஶ்ரயே ॥

எந்த தேசிகநுக்கு (ஜபத்தாலே) விசேஷதிருப்தியடைந்த அந்த கருத்மானாலே ஹயக்ரீவமந்த்ரம் உபதேசிக்கப் பட்டதோ, பக்தி வைராக்ய பரிபூர்ணரான ஸ்ரீமானை அந்த வேதாந்த தேசிகனை ஸ்துதிக்கின்றேன்.

இதில் பக்தி ப்ரஸன்னராய் ப்ரத்யக்ஷமான கருத்மான் ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்ததற்குக் காரணம் உடையவருக்கு ஸரஸ்வதீ பீடத்தில் ஸரஸ்வதியினால் ப்ரஸாதிக்கப்பட்ட ஹயக்ரீவனை ஆராதித்து அவருடைய தேஜஸ்ஸு விசேஷமாக விஜ்ரம்பனமானது போல் இவருக்கும் சத்ரு பாதைகள் விசேஷமாக உண்டாகு மாகையால் அவைகளை அவலீலையாய் ஜெயித்து அந்த உடையவர் போல் திக்ஜயம் பண்ணி விளங்க வேணு மென்பதே.

யஸ்மை ஶைலே ஔஷதாத்ரௌ நரஹரேஸ்ஸந்நிதௌ ஹயக்ரீவபாதாப்ஜ: ।
ஶ்ருஹ்ருதஶீதாஶ்ரு விஸ்ருஷ்ட நேத்ர ஆனந்தாஶ்ரு தம் ஆஶ்ரயே ॥

எந்த தேசிகன் ஒஷதி கிரியில் நரஸிம்ஹன் ஸந்நிதியில் திருவுள்ளத்தில் ஹயக்ரீவனுடைய திருவடித்தாமரையை த்யானித்துக் கொண்டு (அதனால் உண்டான) ஆனந்தபாஷ்ப பரிபூர்ணமான திருக்கண்களை யுடையவராக ஆனாரோ அந்த வேதாந்த தேஶிகனை ஆச்ரயிக்கிறேன்.

இதில் தேசிகனுடைய ஹயக்ரீவத்யானம் குலசேகராழ்வார் ஸாதித்தபடி
"ப்ரேமார்த்ரார்த்ரதியா நதோ பகவதா மத்யேஶ்வரோ ஶிஷ்ய: ।
கண்டே ஸ்வர கத்கதேந நயநோத்கீர்ண ஆனந்தாஶ்ரு ஶுபாம்ப: ॥"

இந்த ச்லோகோக்த பிரகாரமான தென்று தாத்பர்யம்

ஸ்ருத்வா வாக்யாநாம் வாக்தோ ஹயக்ரீவாக்யாநாம் வாகீஶாவ வ்ருத்த: । விஶ்வாணயாஸ விவேகயஶோதம் தம் வேங்கடார்யம் ஸமாஶ்ரயே ॥

எந்த தேசிகனுடைய முன்னிலையில் ஹயக்ரீவன் ப்ரஸன்னராய் ப்ரத்யக்ஷ

ராய் இருந்து தம்முடைய அதரத் திருப்பவளத்திலிருந்து பெருகிற பெருகிற ப்ராள்ளாகிற அமிர்தத்தை ஞான விஜ்ரம்ஹணத்துக்குக் காரணமாக ப்ரஸாதித்தாரோ அந்த வேதாந்த தேசிகனை நான் சரணமடைகிறேன்.

(தாத்பர்யம்) இந்த தேசிகனுக்கு ஹயக்ரீவனுடைய சள்ளமிர்தத்தைப் பானம் செய்தே ஸமயோசிதமாய் கங்கா ப்ரவாஹம் போல் நாலு நாழிகைக்குள் பாதுகாஸஹஸ்ரம் ஸாதிக்கும்படியாயும் ஒரே ராத்திரியில் ஸங்கல்பஸூர்யோதயம் ஸாதிக்கும்படியாயுமுள்ள ஸர்வதோமுகமான வச்யமான வாக்ஸ்ரீ உண்டாவதற்குக் காரணம்.

[illegible] ।
[illegible] ॥

வித்வத்வர்யரான எந்த தேசிகன் உடனே ஹயக்ரீவஸ்தோத்ரத்தையும் அபூர்வங்களான அர்த்தங்கடங்கிய கருடபஞ்சாசத்தையும் செய்தருளினரோ அந்த தேசிகனை நான் த்யானிக்கிறேன்.

[illegible]
[illegible] ॥

எந்த வித்வத்வர்யரான தேசிகன் பிறகு ஆச்சர்யகரமான அர்த்தமடங்கிய (ப்ராக்ருதபாஷையில்) அச்யுதசதகத்தையும் திவ்யமான தேவநாயக பஞ்சாசத்தையும் அவர்களுடைய நியமனத்தின் பேரில் செய்தருளினரோ அந்த வேங்கடாதீசனை நான் சரணமடைகிறேன். (தா-ம்) இந்த ஸ்தோத்திரங்களை செய்யும்படி அவர்கள் நிமித்தற்கு தாத்பர்யம் இவருடைய மஹிமை வெளிப்படவேண்டுமென்றும் ஆச்ரிதாள் இவைகளை அநுஸந்தானம் பண்ணுவதால் உஜ்ஜீவிக்க வேண்டுமென்றும்.

[illegible] ।
[illegible] ॥

எந்த தேசிகன் மும்மணிக்கோவை நவரத்னமாலை விசித்ரமான ஊசல்பா, பந்துப்பா என்று இந்த தமிழ் ப்ரபந்தங்களைச் செய்தருளினரோ தத்வவித்துக்களுக்குள் அக்ரகணரான அந்த தேசிகனை ஆச்ரயிக்கிறேன்.

(தா-ம்) இந்த ப்ரபந்தங்களை தமிழ்நடையில் செய்ததற்கு அபிப்ராயம் ஸம்ஸ்கிருதம் அறியாத ஸ்திரீகள் முதலான எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்பது.

[illegible]
[illegible]
[illegible] ॥

எந்த தேசிகன் அம்மானைப்பா, கழல்பா, அழகான ஏசல்பா இவைகளை செய்தருளினரோ ஸகல கலாவல்லவரான அந்த தேசிகனை த்யானிக்கிறேன். (தா-ம்) இந்த விளையாட்டுகள் ஸ்திரீகளுக்கு முக்யமாகையால் ஸ்திரீகளை உத்தேசித்து செந்தமிழ் நடையில் ஸாதித்ததாக ஸ்பஷ்டமாக வெளியாகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸம்பாதகீயம்

---

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

“[illegible] ।
[illegible]”

வஸ்துக்களின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியக்கூடாத அளவு தோஷதுஷ்டர்களாயுள்ள ஜநங்கள், தமது தோஷ வசத்தால் அதை விபரீதமாக க்ரஹித்து, அது துஷ்டமென்று எண்ணி, அதற்குப் பரிஹாரம் செய்யப் புகுவது மிகவும் பரிஹஸிக்கத் தகுந்ததன்றோ? பகவானுடைய திருக்கையில் இருக்கும் பாஞ்சஜந்யம் என்னும் சங்கம் ஸ்வபாவத்தால் ஸ்வச்சமான வெண்மை நிறமுள்ளது. ‘தாமரை புஷ்பம்போன்ற அந்தத் திருக்கைகயில் ஹம்ஸமே நின்று இருக்கின்றதோ? இல்லாவிட்டால், அவனுடைய திருமார்பில் வஸிக்கும் லக்ஷ்மியால் தரிக்கப்பட்டுள்ள முக்தாஹாரங்களுக்கு இது உத்பத்தி ஸ்தானமோ?’ என்று இவ்வாறு சங்கிக்கும்படி, அந்தப் பாஞ்சஜந்யம் அவ்வளவு வெளுப்பு என்று அதை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட பாஞ்சஜந்யத்தைப் பித்தத்தால் வருந்துமொருவன் பார்த்து, தனது பித்த உபாதியை அறியாமலே, ‘பாஞ்சஜந்யம் மஞ்சள் நிறமுள்ளதே’ என்று எண்ணி அதைச் சுத்தம் செய்வதற்காக ப்ரவ்ருத்தித்தால், அந்த ப்ரவ்ருத்தியைப் பார்க்குமவர்கள் சிரிக்கமாட்டார்களோ? ஸ்வயம் குருடனாக இருக்குமவன் மற்றவர்களுக்குக் கண் வைத்யம் செய்வதற்கு யோக்யனாவானோ? அஹோ! லோகத்தில் மோஹாஞ்ஜநத்தின் மஹிமை ஜநங்களுக்கு அவரவர்களின் யோக்யதையை உள்ளபடி அறிவிக்கின்றதில்லை.

**பகவத் கீதா விமர்சங்கள்.**

த்ரிகால ஜ்ஞானிகளான நமது மஹர்ஷிகளாலும் விசேஷித்த பகவதநுக்ரஹத்திற்குப் பாத்ரமாயிருக்கும் நமது ஆசார்யர்களாலும் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள க்ரந்தங்களின் மஹிமை அளவற்றது. அவைகளின் பாவம் அதி கம்பீரம்; ஸதாசார்யர்களின் உபதேசத்தாலல்லது அது உள்ளபடி க்ரஹிக்கப்படமாட்டாது. அப்படி அநர்க்கமான அந்த க்ரந்தங்களை, மிதஜ்ஞர்களாயிருக்கும் சில பண்டிதம் மந்யர்கள், தமது மிதஜ்ஞதையைக் கொஞ்சமேனும் அறியாமலே, அந்த க்ரந்தங்களில் பலவித தோஷங்கள் இருக்கின்றனவென்றும்

அந்தத் தோஷங்களை நிவ்ருத்திப்பிக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு அவைகளைப் பரிஷ்கரிக்க ஆரம்பிக்கிறார்கள். இதைப் பார்க்கும் நமக்கு ஒரு பக்கத்தில் ஹாஸ்யமும் மற்றொரு பக்கத்தில் சோகமும் ஜநிக்கின்றன.

ஸ்வல்ப காலம் முன் ஜர்மனி ப்ரான்ஸு இங்க்லண்ட் முதலிய தேசங்களில் இருந்த சில வித்வாங்கள், நமது ஸம்ஸ்க்ருத பாஷையில் ஏதோ ஒரு அபிருசி உள்ளவர்களாய், அந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களுள் சிலவற்றை ஒருவாறு அப்யஸித்து, அவைகளில் தமக்குத் தென்பட்ட பெருமையை அந்த பாஷாஜ்ஞாநமில்லாத தமது ஸுஹ்ருத்துக்களும் அநுபவிக்க வேண்டுமென்று எண்ணி, அந்த க்ரந்தங்களை பாஷாந்தரங்களில் மொழிபெயர்ப்பித்திருக்கிறார்கள்; அந்த க்ரந்தங்களுள் சிலவற்றைப்பற்றி தமக்குத் தோன்றின அபிப்ராயங்களையும் விமர்ச ரூபமாக எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள், நமது தேசத்திய ஜநங்களின் நடை உடை பாவனைகளுக்கும், நமது மஹர்ஷிகளின் சித்த வ்ருத்திகளுக்கும் அத்யந்தம் அபரிசிதர்களாயிருந்தபடியால், அவர்களால் செய்யப்பட்டுள்ள மொழி பெயர்ப்பும் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் அபிப்ராயங்களும் பல அம்சங்களில் வஸ்து ஸ்திதிக்கு விருத்தங்களாகவும் மற்றும் சில விடங்களில் மிகவும் விபரீதங்களாகவும் இருக்கின்றன. இந்த வைபரீத்யத்தை அறியாமல் இருக்கும் அந்தத் தேச வாஸிகளான வேறு ஜநங்களெல்லாரும், இவர்களால் வெளியிடப்பட்டுள்ள அபிப்ராயத்தையே ப்ரமாணமென்று நம்பி, நம்முடைய பெரியோர்களுடைய திறமையைப் பற்றி ஹீநமாக நினைக்கும்படி ஸம்பவித்தது; அவர்களுள் சிலர், நமது க்ரந்தங்களை விஷமமாக நிந்திக்கவும் ஆரம்பித்தார்கள். “யதேவ ஸௌதி வடி தஸ்ஸு ராணமு” என்று நினைக்கும் நமது தேசத்தியருள் பலரும், அந்த யவனர்களின் வார்த்தையை ப்ரமாணமாக அங்கீகரித்து, நமது க்ரந்தங்களொன்றும் கொஞ்சமேனும் ஆதரிக்கத்தகுந்தன்றென்று அவைகளைப்பற்றி பஹு ப்ரகாரமாக நிந்தித்து பத்ரிகைகளில் எழுதவும் துணிகிறார்கள். ஆனால் இவர்களுடைய ச்லாகையையும் நிந்தையையும் உத்தேசித்து அந்த க்ரந்தங்கள் எழுதப்பட்டவை யல்ல. உப்பு வ்யாபாரிகள் கர்ப்பூரத்தின் மஹிமையை நிந்தித்தால், அதனால் கர்ப்பூரத்தின் மஹிமை குன்றிவிடுமோ?

இப்பொழுது, வடதேசத்தில் உப்ஸாலா என்னும் பெயருடைய ஒரு ஸ்தலத்தில் வஸித்துவரும் ப்ரொபெஸ்ஸர் ஜார்ல் சார்பெண்டியர் என்பவர், ‘இண்டியன் அண்டிக்வரி’ என்னும் ஒரு இங்க்லீஷ் பத்ரிகையில் பகவத் கீதையைப்பற்றி விமர்சமொன்று எழுதி இருக்கிறார். கீதையில் மற்றவர்களால், சொல்லப்பட்ட தோஷங்களெல்லாம் பூர்ணங்களாக அதில் இருக்கின்றனவென்பதை விஸ்தவத்கரித்துக்கொண்டு, அவைகளைப்பற்றி தாம் விசாரிக்கப்போகிறதில்லை யென்றும், ‘இப்பொழுது கீதை என்று அங்கீகரிக்கப்பட்டுள்ள க்ரந்தம், ஆதி காலத்தில் இந்த ரூபத்திலேயே இருந்ததா? இல்லாவிட்டால் இதில் ஒரு அம்சம் மாத்ரம் இருந்ததா? அப்படி ஒரு அம்சம் மாத்ரம் இருந்திருக்கும் பக்ஷத்தில், அது யாது? பிறகு ப்ரக்ஷிப்தங்களாகச் சேர்க்கப்பட்டவை யாவை?’



தத்தை ஸ்தாபிக்க முற்பட்ட அவ்வப்ராமாணிகரைப் போலன்றி இப்பெரியார் பின்ன பின்னப்ரகாரமாகவேனும் ஹார்த்தமாயுபதேசித்திருப்பது போற்றற்பாலதே யன்றோ?

மேலும் லௌகிகமான ஸாதாரணப் பொருட்களைப் பற்றி ஒரே பிரமாணத்தை அவலம்பித்து நின்று போதிக்கின்றவரான ஒரே குருவினிடத்திற் கேழ்க்கின்ற பலருள் ஒருவர் உள்ளதை யுள்ளபடியே உணர்ந்து கொள்ளுகின்றார். வேறொருவர் வேறுவிதமாக கிரஹிக்கின்றார். மற்றொருவர் மாறுபாடாக அறிகின்றார். இன்னுமொருவருக்கோ வெனில் ஒன்றுமே விளங்க வில்லை. இது இப்படியிருக்க அத்தியந்த அதீந்திரியமான ஆத்ம தத்வத்தைப் பற்றிப் பெறுவதற்கென்று ஒரே மார்க்கத்திற் செல்லுகின்றவர் கூடப் பிரிந்து போவது ஸஹஜந்தானே? இவ் விஷயத்தை ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் பின்வரும் வாக்கியத்தினால் விளக்கி யிருக்கின்றார்கள்.

ஜொகெவி வனகலொ₂கு₃ஜொ: ஞு₄ணுதாம் கஶி₂ஷு₃யாவக வ₂₃தி வடூ₃தெ । கஶி₂ஷூ₃யயாவக । கஶி₂ஜிவசீதம் ! கஶி₂ஜுவ₂₃திவடூ₃தெ ! கிஃ வகூ₂வ₂₃ஜ₂ தீநசி₂₃ய ஊ₂₃தகவம் ॥

ஆனால் இப்படி மதங்கள் பற்பல வேறுபாடுள்ளனவாயிருந்தாலும், பரிபூர்த்தியில்லாதவை களாகவே தானிருந்தாலும் கூட, எல்லா மதங்களிலும் மாந்தர்கள் பற்பல வகையில் முன்னேறி வருவதற்கான முறையிலே தான் அர்த்த தத்வங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன வென்னும் வரையில் ஸந்தேஹமே யில்லை. ஆகலால் எம்மதத்திலும் புத்திமான்கள் கிரஹித்துக் கொள்ள வேண்டிய ஸாராம்சங்கள் ஏராளமாயிருக்கின்றன வென்று கூசாமற் கூறலாகும். எனவே, என்னுடையது தவிர மற்றதெல்லாம் அபஸித்தாந்த மென்று ஸாதிக்கத் தலைப்படுவது விபரீதமான ஸாஹஸமாத்திரமே யென்பது மன்றி “திறமென்று தந்தம் மதத்தையே தாமதச் செய்கையொடு முளரவறிவார்” என்று தாயுமானவர் கூறியது போல் அக்ஞான காரியமுமாகும். ஆனதினாற்றான் நம் பெரியோர்கள் தந்தம் மதத்திலும் அதன் கொள்கை கோட்பாடுகளிலும் அதற்கு உத்தேச்யமான தெய்வத்தி னிடத்திலும் உறுதியான பற்றுள்ளவர்களாயிருக்கையிலும், புறச்சமயங்களையும் அவற்றிற் குள்ள ஔசித்ய விசேஷங்களைக் கொண்டு பிரசம்ஸித்திருக்கின்றனர். இவ்வளவு மட்டுமல்ல. அவ்வெல்லாச் சமயவழிகளும் நாம் வழிபடுகின்ற, ஸர்வப் பிரபஞ்சஸ்வாமி யாதல் பற்றி ஸர்வ ஸமமாய் ஸர்வஸுஹ்ருத்தாயு மிருக்கின்ற, தமது இஷ்டதைவம் ஒன்றின் ஆணையின் படியே தோன்றியவைகளாதலால் அவ்வோவழியில் நடந்து அவரவரும் பயன் பெறலாமென்பதில் சிறிதளவும் ஸந்தேஹமில்லை’ யென்றும் ஸாதிக்கின்றனர். இவ்விஷயத்திற்கு ஒரு உதாஹரணத்தை இங்கு எடுத்துக் காட்டுகின்றோம்.

புருஷார்த்தப்ரபோதம் என்கிற கிரந்தத்தில் ஒரு பிரகரணத்தில் சார்வாக பௌத்த ஆர்ஹதாதி மார்க்கங்களைப் பிரஸ்தாவத்தில் வைத்துக்கொண்டு அதன் மேல்,

இம் மார்க்கங்களெல்லாம் பரஸ்பர விருத்தங்களாகவே யிருக்கின்றன வென்

31-38 ச்லோகங்களுமே பாரதத்தைச் சேர்ந்த அம்சமென்று சொல்லப்படு கின்றது. (2) தவிரவும், இரண்டாவது அத்யாயத்தில், அநேக ச்லோகங்கள்—உபநிஷத்திலிருந்தும் வேறு ஸ்ம்ருதிகளிலிருந்தும் எடுக்கப்பட்டனவென்று ப்ரத்யபிஜ்ஞாபக சப்தங்களைக் கொண்டு உறுதியாகச் சொல்லக்கூடும். "ய ஏநம் வேத்தி ஹந்தாரம்", "ந ஜாயதே ம்ரியதே", "ஆஶ்சர்யவத் பஶ்யதி" இந்த ச்லோகங்கள் கடோபநிஷத்தில் காணப்படும் வாக்யங்களின் விகாரங்கள். "தேஹிநோऽஸ்மிந்", "நைநம் சிந்தந்தி", "ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:" இத்யாதியான ச்லோகங்கள் விஷ்ணு ஸ்ம்ருதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பல விடங்களிலிருந்து வாக்யங்களை எடுத்து சிற்சில மாறுதல்களைச் செய்து, வ்யாஸருக்குப் பின்வந்த யாரோ ஒருவர் இந்த 19 ச்லோகங்களையும் சேர்த்திருக்கிறார் என்று சொல்ல வேண்டுமே தவிர, இவை ஆதி பாரதத்தைச் சேர்ந்தவை என்று சொல்வதற்கு ஸாத்யமில்லை. இம்மாதிரியே இந்த இரண்டாவது அத்யாயத்தின் 12-30—39-72 ச்லோகங்களும், 3 முதல் 11 வரையிலுள்ள அத்யாயங்களும் பிறகு சேர்க்கப்பட்டவை என்பதை ஸூக்ஷ்மமாகப் பரிசீலநம் செய்பவர்கள் அறியக்கூடும்.

இந்த உபபத்திகளுக்கு நாம் சொல்லும் ஸமாதாநமாவது—மஹா பாரதத்திற்கும் வேதாந்த விஷயங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்றும், மஹா பாரதம் கேவலம் முதல் மூன்று புருஷார்த்தங்களாகிற தர்மம் அர்த்தம் காமம் இவைகளுள் ஒன்றை போதிப்பதற்கு மாத்ரம் ஏற்படுத்தப்பட்டதென்றும் ஒத்துக் கொள்பவர்களுக்கு இந்த உபபத்தி ஸாதுவான உபபத்தியாகத் தோன்றுமே தவிர, "பாரத: பஞ்சமோ வேத:" என்று பாரதத்தை மோக்ஷ சாஸ்த்ரமென்று நம்பும் நமக்கு இந்த உபபத்தி கொஞ்சமேனும் ஸாதுவாகத் தோன்ற மாட்டாது. இவருடைய கொள்கைப்படி பாரதத்தைப் பரிஷ்கரிக்க நாம் ப்ரவ்ருத்தித்தால் பாரதத்திலிருந்து அநேக பாகங்களை எடுத்து விடவேண்டிவரும். ஆநுசாஸநிகம் முதலிய பர்வங்களில் காணப்படும் மோக்ஷ தர்மோபதேசம் முதலியவற்றையும் விலக்கிவிட வேண்டும். தவிரவும், இவரால் ஆதிபாரதத்தில் சேர்ந்ததென்று ஒத்துக் கொள்ளப் பட்டிருக்கும் "யச்ச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்னும் அர்ஜுநனுடைய வாக்யத்தை இவர் மறந்தார் போலும். "யச்ச்ரேய: ஸ்யாத்" என்று எவ்வித ஸங்கோசமுமற்ற ஒரு ஸாமாந்ய சப்தத்தால் அர்ஜுநன் பரம நிச்ரேயஸத்தையே மநஸ்ஸில் வைத்துக்கொண்டு கேட்டான் என்றும், அதற்கு ப்ரத்யுத்தரமாக பகவான் ஆத்ம வித்யையை உபதேசிக்க ஆரம்பித்தானென்றும் சொல்வது அநுபபந்நமாகுமோ? யுத்தமே அர்ஜுநனுக்கு ஜிஜ்ஞாஸ்யமாக இருந்தது என்பதை அப்யுகமம் செய்த போதிலும், பரம காருணிகனுயிருக்கிற பகவாந் அர்ஜுநனுல் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள ஸாமாந்ய சப்தத்தை அவலம்பித்து பரமஹிதத்தை அவனுக்கும் அவன் வழியாக ஜகத்துக்கும் உபதேசிக்க ப்ரயத்நப் படுவதில் என்ன அநுபபத்தியை இவர் காண்கிருரோ நமக்குத் தெரியவில்லை.



இரண்டாவது, இவர், "கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா:" என்பது ஆதி பாரதத்தைச் சேர்ந்த வாக்யமென்றே ஒத்துக் கொண்டிருக்கிருர். இது வேதாந்த விஷயத்தை ப்ரஸ்தாவிக்க வில்லையோ? இதில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள விஷயம் எவ்வித உபபாதநமுமின்றிக்கு விட்டு விடத் தகுந்ததென்று சொல்லக்கூடுமோ? இந்த விஷயத்தை ஆத்ம நித்யத்வ புரஸ்ஸரமாக உபபாதநம் செய்யும் "நத்வேவாஹம் ஜாது நாஸம்" இத்யாதியான ச்லோகங்கள் எவ்விதத்தில் அஸங்கதங்களாகும்? இவர் சொல்லுகிறபடி "நத்வேவாஹம்" முதலான 19 ச்லோகங்களை எடுத்துவிட்டால்,

> "அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
> கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ॥
> ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிதுமர்ஹஸி ।"

என்று வாக்ய பங்க்தி ஸம்பவிக்கும். இப்படி இருப்பது ஸங்கதமாகின்றதா என்பதை இந்த வித்வானே ஆலோசிக்க வேண்டும். "அஶோச்ய" என்பது எவ்விதம் ஒட்டும்?

மூன்றுவது,—உபநிஷத் முதலியவைகளிலிருந்து ப்ரஸ்துத விஷயங்களுக்கு ஆதாரமாக வாக்யங்களை உதாஹரிப்பதும், அந்த வாக்யங்களில் ப்ரக்ருதத்திற்குத் தகுந்தபடி சிற்சில மாறுதல்களைச் செய்து அவைகளை உபயோகிப்பதும் அகார்யங்களாகுமோ? ஸ்ரீபகவாந் உபதேசித்த விஷயத்தை, ஸஞ்ஜயர், தமக்கு அநுக்ரஹிக்கப்பட்டிருந்த யோக த்ருஷ்டியால் தவறுதலின்றி ஸாக்ஷாத்கரித்து அதை உள்ளபடி த்ருதராஷ்ட்ரருக்குச் சொல்லுகிருர் என்றன்றே சொல்லப் பட்டிருக்கின்றது? உபநிஷத்திலும் ஸ்ம்ருதிகளிலும் காணப்படும் வாக்யங்களை ஸ்ரீ பகவாந் ஸங்க்ரஹித்து உதாஹரிக்கக் கூடாதோ? அதை ஸஞ்ஜயர் யதா ச்ருதம் சொல்வதில் என்ன தோஷம்? உபநிஷத் முதலியவைகளிலிருந்து வாக்யங்கள் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றது என்பது, எவ்விதத்தில் 'இந்த ச்லோகங்களெல்லாம் ஆதி பாரதத்தைச் சேர்ந்தவையல்ல' என்றும், 'பிற்பாடே வேறொருவரால் இவை சேர்க்கப்பட்டவை' என்றும் ஸாதிப்பதற்குச் சரியான ஹேதுவாகும் என்பதை நாம் அறிகிறோமில்லை. இவையெல்லாம் ஸமீசீந உபபத்திகள் ஆகுமோ?

இவை இருக்கட்டும். 12-வது முதல் 7 அத்யாயங்கள், ஆதி பாரதத்தில் சேராதவை என்று சொல்வதுடன், இவர், தம்மால் குறிக்கப்பட்டுள்ள இரண்டாவது பாகத்திலும் அவை சேராதவை என்றும் சொல்லுகிருர். அதை நிரூபிப்பதற்குச் சில ஹேதுக்களையும் அவர் கூறுகின்றுர். அந்த ஹேதுக்களைச் சற்று பராமர்சிப்போம். முதலில், கீதையைப் பூர்த்தி செய்வதற்கு இந்த அத்யாயங்கள் அத்யந்தம் அநபேக்ஷிதங்களாம். 11-வது அத்யாயத்தில் விச்வ ரூபத்தைக் காண்பித்ததுடன் கீதை ஸமக்ரமாகப் பூர்த்தி அடைகின்றதென்பதும், 12-வது அத்யாய ஆரம்பத்தில் அர்ஜுநனுல் "ஏவம் ஸததயுக்தா யே .... தேஷாம் கே யோகவித்தமா:" என்று

கேட்கப்படும் கேள்விக்கு முந்தின அத்யாயத்தில் யாதொரு உத்திதியும் இல்லை யென்பதும் இவருடைய வாதம். தவிரவும், ரஸத்திலும் சைலியிலும், 12-வது அத்யாயத்துக்கு மேல்பட்டவை யெல்லாம் மிகவும் ஹீநமாயிருக்கின்றன வென்றும், ஆகையால் இவை யாரோ ஒரு அபசத கவியால் செய்யப்பட்டவையாயிருத்தல் வேண்டுமென்றும் இவர் வாதிக்கிறார். இது மாத்ர மன்று. இந்த அபசத கவி, ஜநங்களை மோசம் செய்யும் பொருட்டு, பூர்வம் 11-வது அத்யாயத்தின் முடிவாக இருந்த 5 ச்லோகங்களை இப்பொழுது 18-வது அத்யாயத்தின் 74 - 78-வது ச்லோகங்களாகச் சேர்த்து விட்டு, அவைகளுக்கு பதிலாகத் தான் 5 ச்லோகங்களைச் செய்து அவைகளை 11-வது அத்யாயத்தின் முடிவில் 51 - 55-வது ச்லோகங்களாக அமைத்து விட்டாரென்றும் இந்த விமர்சகர் சொல்லுகிறார். சப்த ப்ரயோகங்களிலும் இந்த 7 அத்யாயங்களுக்கும் மற்றை அத்யாயங்களுக்கும் பல விசேஷங்கள் தெரிகின்றனவென்று சொல்லி, அதற்கு நிரூபகமாகப் பின் வரும் சில சப்தங்களை இவர் எடுத்துக்காட்டி இருக்கிறார். 13-வது அத்யாயத்தில், 'தேஹம்' 'ஆத்மா' என்னும் அர்த்தங்களை உடையவையாகக் காணப்படும் 'க்ஷேத்ர' 'க்ஷேத்ரி' 'க்ஷேத்ரஜ்ஞ' சப்தங்கள், கீதையில் வேறு ஒரு இடத்திலும் அந்த அர்த்தத்தில் ப்ரயோகிக்கப்பட்டவையாகக் காணப்படவில்லையாம். 12-வது முதலான இந்த ஏழு அத்யாயங்களில் 'ஸாத்விக' 'ராஜஸ' 'தாமஸ' என்னும் சப்தங்கள் அஸாதாரண அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றனவாம். 'மாயா' என்னும் சப்தம் முந்திய அத்யாயங்களில் பஹுவாகக் காணப்படுகையில், இந்த அத்யாயங்களில் 18-வது அத்யாயத்தின் 61-வது ச்லோகத்தில் மாத்ரம் தென்படுகின்றதாம். 'வேதாந்தக்ருத்' [15-15] என்றும், 'ப்ரஹ்மஸூத்ரபதைச்சைவ' [13-4] என்றும் சில சாஸ்த்ராந்தரங்களுக்குக் குறிப்பும் இந்தப் பாகத்தில் காணப்படுகின்றதென்றும், இம்மாதிரி சாஸ்த்ராந்தரமொன்றும் முற்பட்ட பாகங்களில் குறிக்கப்படவில்லையென்றும் சொல்லி, இதுவொன்றே இந்தப் பாகம் பிற்பாடு எழுதப்பட்டது என்பதற்குப் போதுமான ப்ரமாணமென்றும் இவர் சொல்லுகிறார்.

இதை நிரூபிப்பதற்கு இன்னும் ஒரு விசித்ரமான ஹேதுவையும் இவர் உபபாதித்திருக்கிறார். அதாவது 18-வது அத்யாயம் 73-வது ச்லோகத்தில் "த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத" என்று 'அச்யுத' சப்தம் க்ருஷ்ணனைக் குறித்து ப்ரயோகம் செய்யப் பட்டிருக்கின்றது. 'அச்யுத' என்னும் பதம் விஷ்ணுவையே குறிக்கத் தகுந்தது. ஆதிபாரத காலத்தில் க்ருஷ்ணனை ஸாமாந்ய மனிதனென்றே எல்லாரும் நினைத்திருந்தபடியால், அக்காலத்தில் அவனை விஷ்ணு வாசகசப்தத்தைச் சொல்லி நிர்த்தேசிப்பது அநுபபந்நம். ஆகையால், இந்த ச்லோகத்தை அடக்கியுள்ள இந்தப் பாகம் பிற்பாடு எழுதப்பட்டதாகவே இருத்தல் வேண்டும். இது இவர் உபபாதநம். 'இவரால் ஆதி பாரதத்தைச் சேர்ந்ததென்று ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கும் முதல் அத்யாயத்தில் 'ரதம் ஸ்தாபய மேச்யுத' என்று 'அச்யுத' சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றதே! அது எப்படி உபபந்நமாகும்?' என்று கேட்டால், 'மேச்யுத' என்பது ப்ராசீந பாடமன்று என்றும் பாடாந்தரம் அவ்விடத்தில் இருந்திருக்க வேண்டுமென்றும் ப்ரத்யுத்தரம் வெளி வருகின்றது. இப்படிப் பாடத்தை மாற்றினதும் இந்த உத்தர பாகத்தைச் செய்த கவியின் கார்யமாகவே இருத்தல் வேண்டு மென்பதும் இவர் அநுமாநம். க்ரந்தத்தின் ஆரம்பத்திலும் அதன் முடிவிலும் இம்மாதிரி ஒரு ப்ரதாந சப்தம் விசேஷித்து ப்ரயோகம் செய்யப்பட்டிருந்தால், அது க்ரந்தத்தின் ஐக்யத்தை த்ருடப்படுத்துமென்று எண்ணி இந்தக் கவி முதலில் இருந்த ப்ராசீந பாடத்தையும் மாற்றி விட்டாராம். ஆக்ரஹமும் அபிநிவேசமும் அதிகரித்தால் விவேகம் என்பதே அவ்விடத்திலிருந்து சுத்தமாக அபஹ்ருதமாகி விடும் என்பதற்கு இந்த வாதம் ஒரு நிதர்சநமாகின்றதன்றோ?



இது மாத்ரமன்று. இதைக் காட்டிலும் பல மடங்கு விசித்ரமாக இன்னுமொரு உல்லேகம் இவர் செய்திருக்கிறார். இந்தக் கீதையில் அர்ஜுநன் க்ருஷ்ணனை ஸம்போதநம் செய்யும் காலத்தில் பல சப்தங்களை ப்ரயோகம் செய்து ஸம்போதநம் செய்திருக்கிறான் அந்த ஸம்போதநங்கள் எல்லாவற்றையும் பராமர்சித்துப் பார்க்கும் பக்ஷத்தில், அவைகளுள் முதலில் ப்ரயோகம் செய்யப்பட்டவை யெல்லாம் 'க்ருஷ்ண' 'கோவிந்த' இத்யாதியான ஸாமாந்ய சப்தங்களாக இருக்கின்றன என்பதும், உத்தரோத்தரம் அர்ஜுநனுக்கு க்ருஷ்ணனிடத்தில் பக்தி வளர வளர அவன் க்ருஷ்ணனுடைய தேவத்தன்மையை உணர்ந்தவனாய் அந்தத் தேவத் தன்மையை ஸூசிப்பிக்கக் கூடிய 'புருஷோத்தம' 'யோகேச்வர' 'விச்வேச்வர' 'தேவதேவேச' இத்யாதியான அஸாதாரண சப்தங்களை ப்ரயோகிக்கிறான் என்பதும் நன்றாக விளங்குகின்றனவென்று சொல்லிக்கொண்டு, இதை அறியாத இந்த மூட கவி, தன்னால் எழுதப்பட்டுள்ள உத்தர பாகத்தில் 17-வது அத்யாயம் முதல் ச்லோகத்தில் 'தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண' என்று 'க்ருஷ்ண' என்னும் ஸாதாரண ஸம்போதநத்தை ஏமாந்து போய் ப்ரயோகித்து விட்டார் என்றும், இந்த ஒன்றே இவர் செய்த மோசத்தை வெளிப்படுத்துவதற்குப் பர்யாப்தமான ஸாக்ஷ்யமென்றும் உத்கோஷிக்கிறார். 11-வது அத்யாயத்தில் "ஸகேதி மத்வா" இத்யாதியான ச்லோகத்தால், தான் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய மஹிமையை அறியாமல் பல தடவைகளில் க்ருஷ்ணனை 'ஸகே' 'க்ருஷ்ண' 'யாதவ' இத்யாதியான வார்த்தைகளைச் சொல்லி தவறி அழைத்து விட்டதாக வருத்தப்பட்ட அர்ஜுநன், திரும்பவும் அம்மாதிரியான ஸாதாரண சப்தங்களை ப்ரயோகித்து க்ருஷ்ணனைக் கூப்பிடுவானா என்பதையும் இவர் சற்றேனும் ஆலோசிக்க வில்லையாம்.

இம்மாதிரியாக அதிவிசித்ரமாக எழுதப்பட்டுள்ள உபபத்திகளுக்கு நாம் பதில் சொல்லவும் வேண்டுமோ? 7-வது முதல் 11-வது அத்யாயங்களான 5 அத்யாயங்களில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள பக்தியின் ச்ரைஷ்ட்யம், 12-வது அத்யாயத்தில் சொல்லப்படுகின்றது. அது எப்படி அநபேக்ஷிதமாகும்? 13-வது அத்யாயம் முதலான 6 அத்யாயங்களில், முந்திய 12 அத்யாயங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் நன்றாக சோதிக்கப் படுகின்றன. முதலில்

சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் அதி கஹநங்களானபடியால், அவைகளை நன்றாக விவரித்து ஸர்வ ப்ரகாரத்தாலும் நிஸ்ஸம்சயமாகச் செய்ய வேண்டியது அதிமாத்ரம் அவச்யமாகையால், அம்மாதிரி சோதிக்கும் இந்த அத்யாயங்களை அநபேக்ஷிதங்கள் என்று சொல்வது புத்திமத் க்ருத்யமாக மாட்டாது. பூர்வ க்ரந்தத்தின் காம்பீர்யமும் சைலியின் உத்கர்ஷமும் உத்தர க்ரந்தத்திற்கு இல்லையென்று இது வரையில் ஒரு ஸம்ஸ்க்ருத வித்வானும் சொல்லவில்லை. என்ன என்ன ப்ரகாரங்களில் அந்த சைலிபேதங்கள் தென்படுகின்றனவென்று எடுத்துக் காட்டாமல் கேவலம் ஸ்தூலமாக விசேஷம் இருக்கின்றது என்று மாத்ரம் சொல்லும் இவருக்கு ப்ரத்யுத்தரம் சொல்வது ஸாத்யமில்லாத விஷயம். சப்த ப்ரயோகங்களில் விசேஷம் தெரிகின்றது என்பதற்கு இவர் சொல்லும் நிதர்சநங்களுள் சில வஸ்து ஸ்திதிக்கு விருத்தங்களாகவும், மற்றும் சில பரிஹாஸ்யங்களாகவும் இருக்கின்றனவென்பதை பகவத் கீதையைப் படித்தவரெல்லாரும் அறிவார்கள். ‘அச்யுத’ சப்த விஷயமாகவும் அர்ஜுநன் க்ருஷ்ணனைக் குறித்து ப்ரயோகிக்கும் ஸம்போதந சப்தங்கள் விஷயமாகவும் இந்த விமர்சகர் செய்துள்ள உபபாதநங்களெல்லாம் அத்யந்தம் அநாதரணீயங்கள் என்பதை ஸஹ்ருதயர்கள் ஸ்வயமாகவே அறியக்கூடும். ஸமக்ரமாக சாஸ்த்ரங்களை அப்யஸியாமல், பாஷாந்தரஜ்ஞாநத்தால் மாத்ரம் தம்மிடத்தில் ஒரு வித உத்கர்ஷ புத்தியைச் செய்து சொண்டு, ஸகல விதமான சாஸ்த்ர பரிபாடிக்கும் யுக்திக்கும் அத்யந்த விருத்தமாக இம்மாதிரி இவர் எழுதத் துணிந்ததைப் பற்றி நாம் மிகவும் சோகிக்கின்றோம். பூர்வம், சிலர், இம்மாதிரி விமர்சங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், அந்தக் காலம், நம்மைப் பற்றியும் நம்முடைய க்ரந்தங்களைப் பற்றியும் தேசாந்தரஸ்தர்களுக்கு சரியான ஜ்ஞாநம் ஏற்படாத காலமாயிருந்தது. நாமெல்லாரும் கேவலம் க்ராம்ய ஜநங்களென்றும் எவ்வித நாகரிகத்திற்கும் நாம் அநபிஜ்ஞர்களென்றும், உபக்ரமம் முதல் உபஸம்ஹாரம் வரையில் ஸங்கதமாக ஒரு க்ரந்தம் எழுத நாம் அசக்தர்களென்றும் அப்பொழுது அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆகையால் மனம் போனபடியெல்லாம் அவர்கள் விமர்சங்களை வெளியிடுவது ஸஹஜமாக இருந்தது. இப்பொழுது அந்தக் காலமெல்லாம் மாறி இருக்கையிலும், வித்வானென்று பிருது பூண்டுள்ள பெரியோர்கள் இம்மாதிரி எழுதத் துணிந்தார்களேயானால், அவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுகிறதென்பது நமக்கு விளங்கவில்லை. “விதிரேவ விசேஷகர்ஹணீய:” என்று மாத்ரம் சொல்லக் கூடும்.

* * * *

**அத்வைதிகளின் அவித்யை.**

சென்ற இரண்டு மூன்று மாஸகாலமாகச் சில அத்வைத வித்வான்களுள், ஸ்ரீ சங்கராசார்யரால் ஒத்துக்கொள்ளப்பட்ட ‘அவித்யை’ என்பதைப்பற்றி விப்ரதிபத்தி ஏற்பட்டு, ‘வேதாந்த கேஸரி’ என்னும் ஒரு இங்க்லிஷ் பத்ரிகையில் பலமான விவாதம் நடந்துகொண்டு வருகின்றது. ஸ்ரீ சங்கராசார்யரால் விவரிக்கப்பட்டிருக்கிற ப்ரகாரம் ‘அவித்யை’ என்று ஒன்று உண்டு என்பதை ஆக்ஷேபிக்கும் நமக்கு இந்த விவாதத்தைக் கேட்பது ரஸவத்தாக



இருக்குமாதலால், அதை இவ்விடத்தில் ஸங்க்ரஹமாக ப்ரஸ்தாவிக்க ப்ரவ்ருத்திக்கின்றோம்.

ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸித்தாந்தத்தில் ‘அவித்யை’ என்பதே மிகவும் ப்ரதாநமான விஷயம். ஸ்வயம் ப்ரகாசமாயுள்ள ‘சித்’ என்பதை மாத்ரம் ஸ்வரூபமாக உடைய ப்ரஹ்மத்தினிடத்தில், ஒரு தோஷ வசத்தால், தேவர் மனுஷ்யர் திர்யக் ஸ்தாவரம் முதலிய பலவகைப்பட்ட பேதங்களை உடைய ப்ரபஞ்சம் கல்பிக்கப்படுகின்றது என்பதே அவருடைய ஸித்தாந்தம். யாதொரு தோஷத்தால் இம்மாதிரி ஒரு தோற்றம் உண்டாகின்றதோ, அதையே அவர் ‘அவித்யை’ என்று கூறுகின்றார். லோகத்தில் ஜநங்களுக்கு சிற்சில காலங்களில் சிற்சில தோஷ விசேஷங்களால் ப்ரமம் ஸம்பவிப்பதை நாம் அநுபவத்தில் பார்த்திருக்கின்றோம். பழுதையைப் பார்த்து பாம்பென்றும், முத்துச் சிப்பியைப் பார்த்து வெள்ளியென்றும் ஸ்தூலமாகப் பார்க்கும் ஜநங்கள் ப்ரமிக்கிறார்களன்றோ? அம்மாதிரியே ‘அவித்யை’ என்னும் தோஷத்திற்குப் பாத்ரமாயிருக்கும் ஜந்துக்களெல்லாம், நிர்விசேஷ சிந்மாத்ரமாயுள்ள ப்ரஹ்மத்தை உள்ளபடி அறியாமல் பதார்த்தங்களைப் பரஸ்பரம் பிந்நங்களாகவும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு பட்டனவாகவும் பார்க்கிறார்கள் என்பது அவருடைய கொள்கை. ‘ப்ரஹ்மமொன்றே பரமார்த்தமான வஸ்து; மற்றவையெல்லாம் அவித்யா கல்பிதங்களாயிற்றே! அவித்யை யாரை ஆக்ரமிக்கின்றது? அந்த அவித்யா தோஷத்தால் யார் எவைகளை வெவ்வேறாகப் பார்க்கிறார்?” என்னில், நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்மத்திற்கே, தனது பரமார்த்த ஸ்வரூபம் அவித்யையாகிற தோஷ வசத்தால் மறைவு அடைகின்றதென்றும், அந்த ப்ரஹ்மமே அந்த மறைவு காரணமாக தன்னிடத்திலேயே அபரமார்த்தங்களான பலவகைப்பட்ட வஸ்துக்களைப் பார்க்கின்றது என்றும் ஏற்படுகின்றது. இந்த அவித்யை அநாதியென்றும், ‘ஸகலமும் ஆத்ம வஸ்துவே; அதைத் தவிர்த்து வேறொன்றும் இல்லை’ என்னும் ஆத்மைகத்வ விஜ்ஞாநம் எப்பொழுது ஜநிக்கின்றதோ அப்பொழுதே அந்த அவித்யை நிவ்ருத்தி ஆகின்றதென்றும், அப்படி அது நிவ்ருத்தியாவதே மோக்ஷமென்றும் அவர் மதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த அவித்யையைப் பற்றியே ப்ரஸ்துத விவாதம் நடந்துகொண்டு வருகின்றது. இது, பாவ ரூபமா? அல்லது அபாவ ரூபமா? இது, கேவலம் ‘தத்த்வமஸி’ இத்யாதியான வாக்யார்த்த ஜ்ஞாநத்தாலேயே நிவ்ருத்தி அடைகின்றதா? இல்லாவிட்டால், ப்ரபஞ்சத்தைத் துறந்து ஸந்யாஸம் செய்துகொண்டு உபநிஷதர்த்த விசாரத்தில் மாத்ரம் ப்ரவ்ருத்தித்து அதனால் ஏற்படும் நைஷ்கர்ம்ய ஸித்தியால் நிவ்ருத்தி அடைகின்றதா? ஸுஷுப்தி ப்ரளயம் இந்தக் காலங்களில் எவ்வித தோற்றமும் தோன்றாமல் இருக்கிறபடியால், அப்பொழுதும் அவித்யையின் ஆக்ரமணம் இருக்கின்றதா? இல்லாவிட்டால் அந்தக் காலங்களில் மோக்ஷாநந்தரம் போல அவித்யை நிவ்ருத்தமாயிருக்கின்றதா? இவை போன்ற பல அம்சங்களே இந்த விவாதத்திற்கு விஷயங்களாகத் தென்படுகின்

றன. இந்த விஷயங்களைப்பற்றி ஸ்ரீ சங்கராசார்யருடைய ஹ்ருதயம் யாது என்பதைப்பற்றியும் இவர்களுக்குள் விப்ரதி பத்தி இருக்கின்றது.

சிலர் சொல்வதாவது—இதற்கு 'அவித்யை' என்று 'ந' (இல்லை) என்பதுடன் கூடிய பெயர் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அது ஜ்ஞாநத்தின் அபாவத்தைக் குறிக்கும் கேவலம் அபாவரூபமன்று, ஆனால் அது பாவ ரூபமே. ஒருவனுக்கு 'எல்லாம் ப்ரஹ்மம்' என்னும் ஜ்ஞாநம் ஜநித்தால், அவனுக்கு மாத்ரம் அவித்யை நிவ்ருத்தமாகிறதே தவிர, அப்பொழுது ப்ரபஞ்சமும் நசித்து விடுகிறதென்று சொல்வது ஸாத்யமில்லை. இந்த ப்ரபஞ்சத்துக்குக் காரணமாயிருக்கும் அவித்யையை 'மூலாவித்யை' என்று வ்யவஹரிக்கிறோம். அதற்கு ஆவரண சக்தியென்றும் விக்ஷேப சக்தியென்றும் இரண்டு வித சக்தி விசேஷங்கள் உண்டு. இருள் போல, வஸ்துக்களின் ஸ்வரூபத்தை அது மறைக்கின்றதாகையால் அதற்கு ஆவரண சக்தி இருக்கின்றதென்று நாம் அறியவேண்டும். பழுதையைப் பார்த்து அது பாம்பு என்று ஒருவன் க்ரஹிக்கும் பொழுது அவனுடைய மநஸ்ஸில் பயம் முதலானவை உண்டாகின்றனவன்றோ? அது போல இந்த அவித்யையும் பயம் முதலானவற்றை ஜநிப்பிக்கின்றதாகையால் அதற்கு விக்ஷேப சக்தி இருக்கின்றதென்றும் நாம் அறிய வேண்டும். ஆத்மைகத்வ விஜ்ஞாநம் ஜநிக்காமல் இருக்கும் ஜநங்கள் எல்லாரும் இந்த அவித்யையால் ஆக்ரமிக்கப் பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு க்ஷணம் கூட இந்த அவித்யையின் ஆக்ரமணத்திலிருந்து அவர்கள் விலகி நிற்கிறார்களில்லை. தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் பொழுதும், ஸ்வப்நம் கண்டு கொண்டு தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதும், ஸ்வப்நம் காணாமல் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதும், அதாவது ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி அவஸ்தைகளாகிற மூன்று அவஸ்தைகளிலும் நாம் இந்த அவித்யைக்குப் பரவசர்களாகவே இருக்கிறோம். ஜாக்ரதவஸ்தையில் இந்த ப்ரபஞ்சம் நமக்கு உண்மையான தத்வமாகத் தோன்றுவதை வ்யாவஹாரிகமென்றும், ஸ்வப்நத்தில் தோன்றுவதை ப்ராதிபாஸிகமென்றும் ஒரு வித பேதத்தை இவை இரண்டுக்கும் சொல்லக்கூடும். எந்தத் தோற்றம் ப்ரபஞ்சத்தில் காணப்படும் வஸ்துக்களாலேயே ஏற்படுகின்றதோ அது வ்யாவஹாரிகம்; எது ஏற்கெனவே நமது மநஸ்ஸில் உண்டாக்கப்பட்டிருக்கும் ப்ரதி பாஸத்தால் ஏற்படுகின்றதோ அது ப்ராதிபாஸிகம். நல்ல தூக்கத்தில் வ்யாவஹாரிக ப்ராதிபாஸிகங்களுள் ஒருவித தோற்றமும் நமக்கு ஜநிக்கவில்லையேயாயினும், அப்பொழுது பெரியதொரு அந்தகாரத்தில் இருப்பது போல நாம் இருந்த போதிலும் தூங்கி விழித்துக் கொண்ட பிறகு, 'நான் ஸுகமாகத் தூங்கினேன்; அப்பொழுது நான் ஒன்றையும் அறியவில்லை' என்று நாம் சொல்வது உண்டாகையால், அந்தத் தூக்கத்திலும் நாம் ஸுகாநுபவமென்றும் அஜ்ஞாநாநுபவமென்றும் இரண்டு வித அநுபவங்களுக்குப் பாத்ரமாய் இருக்கிறோமென்பது விளங்குகின்றது. ஆகையால், அப்பொழுதும் அவித்யை அநுவர்த்தித்து நிற்கின்றதென்றே சொல்ல வேண்டும். விஷயாநுபவம் அப்பொழுது இராவிடினும், ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாயுள்ள ஸுகாநுபவம் இருக்கின்றது என்



பதில் ஸந்தேஹமில்லை. அப்பொழுது அநுபவிக்கப்படும் அஜ்ஞாநமும் அபாவரூபமாக மாட்டாது. 'நான் ஒன்றையும் அறியவில்லை' என்று சொல்வதால், நமக்கு, அப்பொழுது, நம்முடைய ஜ்ஞாநமும் நம்மால் அறியப்படக்கூடிய பொருள்களின் ஜ்ஞாநமும் இருக்கின்றன வென்று ஏற்படுகிறபடியால், அந்த அஜ்ஞாநம் ஜ்ஞாநாபாவமாக மாட்டாது. அம்மாதிரியான நல்ல தூக்க காலங்களில் அந்த அவித்யை கேவலம் பீஜ ரூபமாக நம்மிடம் இருக்கின்றது; ஜாக்ரத் ஸ்வப்நங்களாகிற அவஸ்தைகளில் அது பல ரூபமாக ப்ரஸரிக்கின்றது என்பது தான் பேதம். ப்ரளயகாலத்திலும் இம்மாதிரியே ஸகல ஜந்துக்களிடத்திலும் அவித்யை பீஜாவஸ்தையில் இருக்கின்றது என்றே சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாமல் ஸுஷுப்தி காலத்திலும் ப்ரளய காலத்திலும் இந்த்ரிய விஷய ஸம்பந்தத்திற்கு ஸம்பாவனை இராமல் நமக்கு எவ்வித தோற்றமும் ஏற்படவில்லை என்பதை ஹேதுவாகக் கொண்டு, அப்பொழுது நமக்கு அவித்யையின் ஸம்பந்தம் விலகி விடுகின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், அவித்யை விலகுவதே மோக்ஷமாகிறபடியால், நம் ஒவ்வொருவருக்கும் எவ்வித உபாயாநுஷ்டாநமுமின்றிக்கே மோக்ஷம் லபிக்கவும், அப்படி மோக்ஷம் லபித்த பிறகு, மறுபடியும், உபநிஷத்துக்கள் சொல்வதற்கு விருத்தமாக, ஸம்ஸார பந்தம் ஸம்பவிக்கவும் ப்ரஸங்கிக்கும். இது அநிஷ்டமாகையால், ஸுஷுப்தி ப்ரளய காலங்களிலும் அவித்யை நம்மை விடாமல் தொடர்ந்து நிற்கின்றதென்றே சொல்ல வேண்டும்.

தவிரவும், பிறப்பு கிழத்தனம் இறப்பு முதலிய ஸாம்ஸாரிக துக்கங்களனைத்தும், இந்த அவித்யையால் ஏற்படும் விவித பேத தர்சநத்தினாலேயே ஜநிக்கின்றபடியால், இந்த அவித்யை ஆத்மைகத்வ விஜ்ஞாநத்தாலேயே நிவ்ருத்தி அடைய வேண்டும். ஆனால் அந்த ஜ்ஞாநம் கேவலம் வாக்யார்த்த ஜ்ஞாநத்தால் ஏற்பட மாட்டாது. அது சரியானபடி ஜநிப்பதற்கு ஒருவன் ப்ரபஞ்சத்தையும் அது ஸம்பந்தங்களான ஸகல வித வ்யாபாரங்களையும் துறந்து, ஸந்யாஸ ஆச்ரமமென்று சொல்லப்படும் நான்காவது ஆச்ரமத்தில் புகுந்து, சரீரயாத்ரை முதலியவைகளைப் பற்றிக் கொஞ்சமேனும் கவனியாமல், உபநிஷதர்த்த விசாரத்தை மாத்ரம் ச்ரத்தையுடன் செய்துகொண்டு வரவேண்டும். அப்படிச் செய்து கொண்டு வந்தால், அவனுக்கு அநாதி காலமாக அநுவர்த்தித்து வந்துள்ள வாஸனைகளெல்லாம் நாசம் அடைந்து, 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்று ஒரு ஸித்தி ஜநிக்கும். அப்பொழுது அவனை விட்டு அவித்யை தூர விலகி அவனுக்கு ஸகல வஸ்துக்களும் நிர்விசேஷ சிந்மாத்ரமாகவே ப்ரகாசிக்கும். அப்படி ப்ரகாசிப்பதே எல்லாராலும் அபேக்ஷிக்கப்படும் பரம புருஷார்த்தமாகிற மோக்ஷம்.

இது சில அத்வைதிகளின் வாதம். மற்றும் சிலர், இதை ஸ்ரீ சங்கராசார்யருடைய ஹ்ருதயமென்று ஒத்துக் கொள்ளுகிறார்களில்லை. முதலில், அவித்யையை பாவ ரூபமென்பதையும், மூலாவித்யை என்று ஒன்று இருக்கின்றது என்பதையும் இவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த அவித்யை கேவல ஜ்ஞாநாபாவமின்றிக்கே பாவரூபமாகவே இருக்கும் பக்ஷத்தில், ஜ்ஞாநத்

தின் உதயம் அதை எப்படி பாதிக்கும்? ஜ்ஞாநமானது, ஜ்ஞாநாபாவமாகிற அஜ்ஞாநத்தை பாதிக்குமே தவிர பாவரூபமாயுள்ள ஒரு வஸ்துவை பாதிக்க மாட்டாதன்றோ? தவிரவும், அஜ்ஞாநம் என்பது ஜ்ஞாநத்திற்கு யோக்யமாயுள்ள ஒரு வ்யக்தியைக் குறித்தே வ்யவஹரிக்கப் படவேண்டும். அம்மாதிரியான ஜ்ஞாந யோக்யமான வ்யக்தியே அவித்யையின் கார்ய மென்று சொல்லும் இவர்கள் விஷயத்தில் அந்யோந்யாச்ரய ரூபமான தோஷம் ப்ரஸங்கிக்கும். ஒரு வ்யக்தி ஜ்ஞாநார்ஹமாவது அவித்யையினுடைய ஆக்ரமணத்தின் கார்யம்; ஜ்ஞாநார்ஹமான வ்யக்தியினிடத்திலேயே அவித்யை ஆக்ரமிக்கத் தகுந்தது என்பது ஸாது வாகுமோ? தவிரவும், அவித்யையை பாவ ரூப மென்று ஒத்துக்கொண்டால் அத்வைதம் ஸித்திக்குமோ? 'ப்ரஹ்மமொன்று, அவித்யை ஒன்று ஆக இரண்டு' என்று த்வைத மன்றோ ஏற்படும்? ஆகையால் மூலாவித்யை என்று பாவரூபமாக ஒரு அவித்யையை அங்கீகரிப்பது ஸாத்யமாகமாட்டாது. ஸ்ரீ சங்கராசார்யர் அவ்விதமொன்றை அங்கீகரித்திருப்பதாகத் தெரியவில்லை.

இரண்டாவது, ஆவரண சக்தியென்றும் விக்ஷேப சக்தியென்றும் அவித்யைக்கு இரண்டு வித சக்திகளை ஒத்துக்கொள்வதற்கும் ஸ்ரீ சங்கராசார்ய க்ரந்தங்களில் எவ்வித ஆதாரமுமில்லை. அம்மாதிரியான சக்திகளை அவர் எவ்விடத்திலாவது ப்ரஸ்தாவித்திருக்கும் பக்ஷத்தில், அந்த அவித்யையை பாவ ரூபமென்று அவர் ஒருவாறு ஒத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லக்கூடும். அதற்கு இடமே இல்லை. ஸ்ரீ சங்கராசார்யர் அவித்யையை அநாதியென்று சொல்லி யிருக்கிறார் என்பது உண்மையே. ஆனால், அதிலிருந்து அவர் அதை ப்ரஹ்மம் போல ஒரு பாவ வஸ்து வென்று அபிப்ராயப்பட்டிருக்கிறார் என்று சொல்வது ஸாத்யமில்லை. அப்படிச் சொல்லும் பக்ஷத்தில் கீழ் விவரித்திருப்பது போல அது அவருடைய ஸித்தாந்தத்திற்கே விருத்தமாக ப்ரஸங்கிக்கும். 'அநாதி' என்பதால் 'அதற்கு ஒரு காரணாந்தரம் இல்லை' என்று மாத்ரம் அவர் பொருள் கொண்டிருக்கிறார் என்று சொல்லவேண்டும்.

மூன்றாவது, ஸுஷுப்தி ப்ரளய காலங்களிலும் அவித்யையின் ஆக்ரமணம் இருக்கின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், அந்த அவித்யையும் ஆத்ம வஸ்துவைப்போல எப்பொழுதும் இருக்கின்றது என்று ஏற்படுகிறபடியால், ஆத்ம வஸ்து ஒன்றே பரமார்த்த மென்று சொல்வதற்குக் காரணம் இல்லையன்றோ?

நான்காவது, ஸர்வ கர்ம பரித்யாக புரஸ்ஸரமாக உபநிஷதர்த்த விசாரம் செய்வதே அவித்யா நிவ்ருத்திக்கு உபாயமென்று சொல்வதும் ஸ்ரீ சங்கராசார்யருடைய ஹ்ருதய மாகமாட்டாது. ஸர்வ கர்ம பரித்யாகம் என்பது சாஸ்த்ர விருத்தம், ஸ்வபாவ விருத்தம், தர்ம விருத்தம். கேவலம் நைஷ்கர்ம்யத்தால் அஜ்ஞாநம் விலகுமோ?

இவையெல்லாம் ஸ்ரீ சங்கராசார்யருடைய மதத்திற்கு விருத்தங்களென்றே இந்த அத்வைதிகளின் அபிப்ராயம். இவர்களின் விவரணப்படி, ஸ்ரீ சங்கரா



சார்யர், 'அவித்யை' என்னும் சப்தத்தால் 'அத்யாஸம்' என்று சொல்லப்படும் கல்பநத்தை மாத்ரம் பொருள்கொள்ளுகிறார் என்று ஏற்படுகின்றது. "தமேவம் லக்ஷணமத்யாஸம் பண்டிதா அவித்யேதி மந்யந்தே" என்பது ஸ்ரீ சங்கராசார்யருடைய வாக்யம். அவித்யையைக் காரணமென்றும் அத்யாஸத்தை அதன் கார்ய மென்றும் ஸ்ரீ சங்கராசார்யர் ஒரு இடத்திலும் சொல்லவில்லையாம். இவர்களுடைய விவரண ப்ரகாரம், அத்யாஸமே அநாதியாகிற அவித்யை யென்றும், அது தவறுதலான ஜ்ஞாநத்தின் பாவமன்று, ஆனால் அது யதார்த்த ஜ்ஞாநத்தின் அபாவமே என்றும், ஆகையால் அது ஆத்மைகத்வ ரூப யதார்த்த ஜ்ஞாநத்தால் பாதிக்கக்கூடிய தென்றும் அந்த ஆத்மைகத்வ ஜ்ஞாநமும் 'தத்த்வமஸி' முதலான வாக்யங்களிலிருந்து ஏற்படக்கூடியதே ஒழிய ஸர்வ கர்ம பரித்யாக புரஸ்ஸரமான ஸந்யாஸ ஆச்ரம ஸ்வீகாரத்தாலும் அப்பொழுது செய்யப்படும் உபநிஷதர்த்த விசாரத்தாலும் மாத்ரம் ஏற்படக்கூடிய தன்றென்றும், அந்த ஜ்ஞாநம் ஜநிக்கும் வரையில் எல்லாரும் தம் தம் தர்மங்களைச் சரிவர அநுஷ்டித்து வருவதே சாஸ்த்ரீய மென்றும் ஏற்படுகின்றது.

* * * * *

**அத்வைத பரிபாஷா பூமிகா விமர்சம்.**

"அத்வைத பரிபாஷை" என்பது ஒரு அத்வைத க்ரந்தம். அதற்கு மஹாமஹோபாத்யாயர் அநந்த க்ருஷ்ண சாஸ்த்ரிகள் என்னும் ஒரு வித்வாந், ஒரு வ்யாக்யாநம் எழுதி இருக்கிறார். அந்த வ்யாக்யாநத்தின் முகவுரையில், அவர் நிஷ்காரணமாக நமது ஸ்ரீ பாஷ்யத்தை பஹுவாக தூஷித்திருக்கிறார். அந்தத் தூஷணம் முழுவதும் அஸம்பத்தமாக இருக்கிறபடியால், அதற்குக் கண்டநம் எழுதுவது அவசியமென்று எண்ணி ஸ்ரீமாந் ஏ. வி. கோபாலாசார்யர் ஸ்வாமி என்னும் வித்வான் ப்ரவ்ருத்தித்து, அந்தத் தூஷணங்கள் எந்த எந்தப் பாகங்களில் நிராதாரங்களாக இருக்கின்றன வென்றும், எவை எவை விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைச் சரிவர அறியாததால் ஏற்பட்டிருக்கின்றன வென்றும், எவை எவை கேவல பக்ஷபாதத்தால் செய்யப் பட்டிருக்கின்றன வென்றும் விசதமாக விவரித்து, "அத்வைதபரிபாஷா பூமிகா விமர்சம்" என்னும் ஒரு தெளிவான க்ரந்தத்தை ஸுலபமான ஸம்ஸ்க்ருத நடையில் எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறார். அதை நாம் படிக்கப் பெற்றோம். அதில் விசாரிக்கப்பட்டுள்ள விஷயங்கள் பூர்ணமான ஜ்ஞாநத்துடனும் ஆர்ஜவத்துடனும் எவ்வித ஆக்ரஹமுமின்றிக்கே விசாரிக்கப்பட்டிருக்கிற படியால், அவைகளுள் சிலவற்றை இவ்விடத்தில் உதாஹரிக்க ப்ரவ்ருத்திக்கின்றோம்.

ஸ்ரீ சாஸ்த்ரிகளால் முதலில் சொல்லப்படும் தூஷணம் என்ன வென்றால்—'இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில், பர மதங்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டு 'அவை வேத விருத்தங்களான அம்சங்களை, ப்ரதிபாதிக்கிற படியால் க்ராஹ்யங்களல்ல' என்று கண்டிக்கப்படுகின்றன. இந்த இரண்டாவது பாதத்தின் முடிவில் பாஞ்சராத்ராதிகரணம் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது. ஆகையால் அந்தப் பாஞ்சராத்ர மதமும் ஸூத்ரக்காரரால் கண்டிக்கப்படும் மதங்களுள்

ஒன்றாகவே இருத்தல் வேண்டும். பாஞ்சராத்ர மதமே அந்த அதிகரணத்தில் ப்ரஸ்தாவிக்கப் படுகின்றது என்பது ஸ்ரீ பாஷ்யகாரராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அப்படி ஸூத்ரக்காரரால் கண்டிக்கப்படும் பாஞ்சராத்ர மதத்தை ஸ்ரீ பாஷ்யகார மதம் ஆதரிக்கிறபடியால், ஸ்ரீ பாஷ்யகாரர் மதம் ஸூத்ரக்காரருடைய அபிப்ராயத்துக்கு விருத்தம்' என்பது தான். இது புதிய ஆக்ஷேபமன்று. இதற்கு முன் அநேக பெயர்களால் இந்தச் சோத்யம் செய்யப்பட்டு அதற்கு யுக்தி யுக்த ஸமாதாநங்களும் பஹுவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி, அந்த ஸமாதாநங்களெல்லாவற்றையும் அநுவதித்து விட்டு, பூர்வ பக்ஷம் நிலைபெறாமல் ஆத்யந்திகமாக சாந்தமாகுமளவு அந்த ஆக்ஷேபத்தைப் பரிஹரித்திருப்பது மிகவும அழகாக இருக்கின்றது. பூர்வ மீமாம்ஸையில் இருப்பது போல உத்தர மீமாம்ஸையிலும் பாதங்களுக்குள் பேடிகா பேதம் உண்டு என்பது அந்தச் சாஸ்த்ரத்தைப் படித்தவர்களுக்குத் தெரிந்த விஷயம். ப்ரக்ருதமான இந்தப் பாதத்தில், பாஞ்சராத்ராதிகரணமானது இரண்டாவது பேடிகை; மற்றை அதிகரணங்கள் முதல் பேடிகை. இந்தப் பேடிகா பேதமே மற்றை அதிகரணங்களுக்கும் இதற்குமுள்ள வாசியைக் காட்டுவதற்குப் போதுமான லிங்கம். ஒவ்வொரு பாதத்திற்கும் விஷயம் யாது என்பது ஸூத்ரகாரரால் ஓரிடத்திலும் குறிக்கப்படவில்லை. அந்தந்தப் பாதத்தில் ப்ரஸ்தாவிக்கப்படும் விஷயங்களை ஆதாரமாகக் கொண்டே ஒவ்வொரு பாஷ்யகாரரும் பாதங்களுக்கு விஷய விபாகம் செய்திருக்கிறார். இந்தப் பாதத்தில் பாஞ்சராத்ர மதம் ஸித்தாந்தம் செய்யப்படுகின்றது என்பது நிர்ணீதமானால், இதன் விஷயமும் அதற்கு அநுகுணமாகவே ஏற்படுத்தப் படவேண்டுமே தவிர, இந்தப் பாதத்தின் விஷயத்துக்கு பாஞ்சராத்ர ஸித்தாந்தம் விருத்தமென்று சொல்வது உபபந்நமாக மாட்டாது. இம்மாதிரி வாதித்து விட்டு பிறகு ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யத்தையும் இன்னும் மற்றை ஹேதுக்களையும் ஆதாரமாகக் கொண்டு 'ஸூத்ரகாரர் பாஞ்சராத்ர மதத்தை ஒத்துக் கொண்டவரே' என்பது தான் ஸித்தாந்தமாக ஏற்படும் என்று ஸ்ரீ கோபாலாசார்யர் விஸ்தாரமாக நிரூபித்திருக்கிறார்.

இந்த ஸம்பந்தத்தில் ஸ்ரீ சாஸ்த்ரிகள் இன்னும் ஒரு ஆக்ஷேபத்தை மிகவும் க்ரம விருத்தமாகச் செய்கிறார். அதாவது—'பாஞ்சராத்ரம் வேத பாஹ்யம்' என்று மஹா பாரதத்தில் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது என்பது தான். இப்படிச் சொல்வது மிக்வும் அக்ரமமே. இந்த அக்ரமத்தையும், ஸ்ரீ கோபாலாசார்யர், 'இப்படிச் சொல்வது மஹா பாரத விருத்தம், நீலகண்ட பாஷ்ய விருத்தம், ஸ்ரீ சங்கராசார்ய அபிப்ராய விருத்தம், பராசர சுகர் முதலிய மஹர்ஷிகளின் ஸ்பஷ்ட வசந விருத்தம், ஸ்ரீதர முநியின் வ்யாக்யாந விருத்தம், மதுஸூதந ஸரஸ்வதியால் உதாஹரிக்கப்பட்டுள்ள தாபநீய ச்ருதி விருத்தம்' என்று நன்றாகக் கண்டித்திருக்கிறார். பாஞ்சராத்ர மதத்தை நிரஸநம் செய்வதற்கு மஹா பாரதத்தை அவஷ்டம்பிப்பது அதி ஸாஹஸமேயாகும்.

'பாஞ்சராத்ர மதம், ஜீவோத்பத்தியைச் சொல்லுகின்றது; ஜீவனுக்கு உத்பத்தி சொல்வது வேத மதத்திற்கு விருத்தம். ஆகையால் அந்தப் பாஞ்ச



ராத்ர மதத்தை ஆதரிக்கும் ஸ்ரீ பாஷ்யகார மதமும் வேத விருத்தமே' என்றும் ஸ்ரீ சாஸ்த்ரிகள் ஒரு ஆக்ஷேபம் செய்கிறார். இந்த ஆக்ஷேபத்தின் அப்ராமாணிகத்தன்மையையும் ஸ்ரீ கோபாலாசார்யர் நன்றாக வெளியிட்டிருக்கிறார். ஜீவோத்பத்தியை ஸ்ரீ பாஷ்யகாரர் ஒத்துக்கொள்ளவில்லை என்பது ஸ்ரீ சாஸ்த்ரிகளுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். அப்படித் தெரிந்திருந்தும் ஸ்ரீ பாஷ்யகார மதத்தை அந்தக் காரணத்தால் நிரஸநம் செய்ய ப்ரயத்நப்படுவது ந்யாயத்துக்கு ஒத்ததாகுமோ? எந்தத் தோஷம் நிரஸநத்துக்கு ஹேதுவாகின்றதோ, அந்தத் தோஷம் இராமல் இருக்கும் ஸ்தலத்தையும் அந்தத் தோஷத்தைக் காரணமாகக் கொண்டு துஷ்டமென்று விலக்குவது அத்யந்தம் அப்ராமாணிகமாகுமன்றோ? 'பாஞ்சராத்ரம் ஜீவோத்பத்தியை முக்யார்த்தத்தில் சொல்லவில்லை; அதை அது கௌணார்த்தத்திலேயே சொல்லுகின்றது' என்பதே ஸ்ரீ பாஷ்யகாரருடைய விவரணம். இந்த விவரணத்தை கல்பதரு முதலிய அநேக அத்வைத வ்யாக்யாதாக்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கையில் பாஞ்சராத்ரத்தை அந்தத் தோஷம் எவ்விதம் ஸ்பர்சிக்கும்? பாஞ்சராத்ரத்தின் மீது வேறு ஒரு தோஷத்தையும் இது வரையில் ஒருவரும் சொல்லவில்லை யாதலால், ப்ரதிஷேதிக்கப்படாதவை யெல்லாம் ஒத்துக் கொள்ளப்பட்டவை யாகும் என்னும் ந்யாயத்தை அநுஸரித்து பாஞ்சராத்ரத்தின் பூர்ண ப்ராமாண்யத்தை ஸ்ரீ கோபாலாசார்யர் நிர்ணயம் செய்வதும் ஸமஞ்ஜஸமே.

